ISSN 2719-244x

# பல்கலை

පල්කලෛ Palkalai

தொகுதி 12, இதழ் 2 - 2024 டிசம்பர்



கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை, இலங்கை

# பல்கலை

**தொகுதி 12, இதழ் 2 – டிசம்பர் 2024**

கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
இலங்கை

*PALKALI is a bi-annual refereed journal published in Tamil by the Faculty of Arts, University of Peradeniya. It carries original research papers in social sciences and humanities. The contributions shall be in the form of research articles, book reviews, notes and comments and need to be academic nature. All the contributions and the communications should be addressed to the Editor, PALKALAI, Faculty Tamil Journal, Faculty of Arts, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.*

| | | |
|---|---|---|
| *Co - Editors* | : | *Prof S.Pirashanthan*<br>*Dr. S. Baskaran* |
| *Managing Editor* | : | *Dr. M.Z.M. Nafeel* |
| *Editorial Board* | : | *Mrs. S.A.C. Ferckzia*<br>*Mrs. S. Chitra* |

| | | |
|---|---|---|
| *Annual Subscription* | : | *Local Rs. 600.00, Overseas $20* |
| *Single Copy* | : | *400.00* |

*ISSN 2719-244 X*

**பல்கலை,** பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்படும் ஓர் ஆய்விதழ். சமூக விஞ்ஞானம், மனிதப்பண்பாட்டியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளும், நூல் மதிப்புரைகளும், கருத்துரைகளும் இவ்வாய்விதழில் பிரசுரமாகும். துறைசார் அறிஞர்களின் மதிப்பீட்டின் பின்னரே ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும். தொடர்புகளுக்கான முகவரி: ஆசிரியர்கள், பல்கலை, தமிழ் ஆய்விதழ், கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

| | | |
|---|---|---|
| இணை ஆசிரியர் | : | பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்<br>கலாநிதி எஸ்.பாஸ்கரன் |
| நிர்வாக ஆசிரியர் | : | கலாநிதி எம்.ஸற்.எம். நபீல் |
| ஆசிரியர் குழு | : | திருமதி எஸ். ஏ. சி. பெரோஸியா<br>திருமதி எஸ். சித்திரா |

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | : | உள்நாடு ரூபா. *600.00* வெளிநாடு *$ 20* |
| தனிப்பிரதி | : | ரூ. *400.00* |

# ஆசிரியர் பக்கம்

தேசத்தின் கொள்கை வகுப்புக்களுக்கு நிறைந்த பங்களிப்புச் செய்யும் அறிவுசார் உயர்கல்வி நிறுவனங்களின் பணிகள் பலதிறப்பட்டவை. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைக் கடந்து விரியும்..... பல்கலைக்கழகங்களின் புலமைச் செயற்பாடுகளுள் ஆய்வு நடிவடிக்கைகள் பிரதானமானவை. இவை, பல்வேறு விதமாக முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுள் மிகவும் முதன்மை பெறுவது, ஆய்விதழ் வெளியீடு என்பதை அனைவரும் அறிவர்.

இவ்வகையில் எமது பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்திலிருந்தும் ஆய்விதழ்கள் பல, பருவகால இதழ்களாகத் தொடர்ந்தும் வெளிவந்து, சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதப் பண்பியல் துறைகளின் வளமார் செழிப்புக்குத் தம் இன்றியமையாப் பங்களிப்பை நல்கி வருகின்றன. இவ்விதழ்களுள் தமிழ்மொழி மூலமாக வெளிவரும் ஒரே இதழாக அமைந்து, அம்மொழி மூலமான புலமைசார் கருத்தாடலுக்கு வித்திட்டுவரும் சிறப்பு இப் “பல்கலை”க்கு உண்டு.

சிறிய இடைவெளியின் பின் மீண்டும் இப்பொழுது “பல்கலை“ வெளிவருகின்றது. நம் பல்கலைக்கழக புலமையாளர்களின் பங்களிப்போடும், பிற பல்கலைக்கழக மற்றும் பிறதேசப் புலமையாளர்களின் பங்களிப்போடும் மலர்ந்துள்ள இவ்விதழ், ஆய்வுப் புலத்தை அணிசெய்யும் என்பது நிச்சயம்.

இலக்கியம், மெய்யியல், அரசியல், கல்வியியல், ஒப்பியல் எனப் பல புலங்களில் தம் கண்டடைவுகளையும், புதிய கருத்துக்களையும் ஆய்வாளர்கள் இவ்விதழில் முன்வைத்துள்ளனர். முக்கியத்துவம் மிக்க நூலொன்றுகுறித்த அறிமுகமும் காணப்பெறுகின்றது. பங்களிப்புச் செய்த புலமையாளர்கள் அத்துணைப் பேருக்கும் நன்றியுரைத்தல் கடன். தொடர்ந்தும் இப்புலமைப் பணியை ஊக்குவித்துநிற்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கலைப் பீடாதிபதி உள்ளிட்ட அனைவருக்கும் பணிவான நன்றி.

- ஆசிரியர்கள்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | *வடமொழி மரபில் சைவசித்தாந்தம்* | *1* |
| *2.* | *விஞ்ஞான மெய்யியலில் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையின் வகிபங்கு: ஒரு விமர்சன ஆய்வு* | *12* |
| *3.* | *இலங்கை அரசாங்க வெளியீடுகள்: நூலகங்களில் அரச ஆவணக் காப்பகப் பிரிவொன்றை ஒழுங்கமைப்பது பற்றிய ஆய்வு.* | *32* |
| *4.* | *தேவாரங்களில் சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள்* | *51* |
| *5.* | *பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வியலாளர்களின் இலங்கைத தமிழ்க் கல்வெட்டாய்வுகள் : ஒரு வரலாற்றுப் பார்வை* | *66* |
| | *கட்டுரையாளர் விபரம்* | *81* |

# வடமொழி மரபில் சைவசித்தாந்தம்

*கலாநிதி நா. வாமன்*

**அறிமுகம்**

*இந்திய தத்துவச் சிந்தனை மரபில் இன்றும் நிலைத்து வாழும் ஒரு நெறியாக விளங்குவது சைவசித்தாந்தமாகும். சிவனை முழுமுதல் இறைவனாகக் கொண்டமைந்த சைவசித்தாந்தமானது தத்துவரீதியிலும் சமய நிலையிலும் செழுமைக்குரிய வகையில் அமைந்துள்ளது. சைவசமயத்திற்குள் வேறுபட்ட தத்துவ மரபுகள் ஆரம்ப காலம் முதல் நிலவி வந்தாலும் சைவசித்தாந்தக் கொள்கைக்குத் தனித்துவமான பண்பாட்டு வரலாறும் வாழ்வியல் முறைகளும் காணப்படுகின்றது. வேதாகமத்துடன் சைவசித்தாந்தம் நெருங்கியதொடர்பு கொண்டுள்ளது. வேதத்தைப் பொதுவாகவும் ஆகமத்தைச் சிறப்பாகவும் தனது பிரமாண நூலாகவும் கொண்டுள்ளது.*

*சைவசித்தாந்தம் என்பது "சைவம், சித்தாந்தம்" எனும் இரு சொற்களின் இணைவாகும். சைவமானது யாதெனின், "சிவனுடன் சம்பந்தமாகுதல்" எனவும் சித்தாந்தமாவது "முடிந்த முடிவு" எனவும் எடுத்தாளப்படுகின்றது. Piet என்பார், சித்தாந்தம், "முடிவுகளின் முடிவு" (The Conclusion of Conclusions) என்று கூறுவதோடு மெய்யியல் சிந்தனையின் முடிவாகவும் எடுத்துரைக்கின்றார். (Piet. Johnh, 1952:02) சைவசித்தாந்தம் "சிவசம்பந்தத்தின் முடிந்த முடிவு" என்றும் "சைவம் பற்றிய முடிவு" என்றும் கூறப்படுகிறது. ஆரம்ப காலத்தில் சைவாகமங்களே சித்தாந்தங்களாக எடுத்தாளப்பட்டன.*

*சைவசித்தாந்தம் என்பதற்குச் "சிவாகமங்களின் முடிவான கொள்கை" என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனாலேயே சைவசித்தாந்தம் "ஆகமாந்தம்" என்றும் வழங்கப்படுகின்றது. சைவாகமங்களின் பொருளே சித்தாந்தமாகையால் அவ்வாகமங்களின் பொருளைச் சிறிதும் திரிபின்றி உண்மையாகக் கொண்ட சைவம் சித்தாந்த சைவம் எனப்படுகின்றது. இதன் கொள்கையே சைவசித்தாந்தமாகும்.*

*சைவசித்தாந்திகள் உண்மைப் பொருள்களாக பதி, பசு, பாசம் என்பவற்றை ஏற்று நிற்பர். அநாதியான பசு உலகில் மீண்டும் மீண்டும் பிறந்து உழல்கின்றமைக்குக் காரணமாவது பாசமாகும். அப்பாசம் அநாதியாகவே பசுவைப் பீடித்திருக்கின்றது. பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதே பசுவின் இலட்சியம். இதுவே முக்தி என்பர். நித்தியமானதாயும், யாவற்றையும் தம்முள் அடக்கவல்லதாயும், தம்முள்*

மேம்பட்டதொன்றும் இல்லாததாய் உள்ள ஒரே பொருளும், எவ்வித களங்கமுமில்லாததாயும் உள்ள ஒரே பொருள் பதி என்பதனால் இப்பொருளைச் சைவசித்தாந்திகள் முதற்பொருளாகக் கொண்டுள்ளனர். பசுக்கள் அநேகமானதாயும் நித்தியமாயும் இருந்தபோதிலும் அனாதியாகவே மலச்சேர்க்கை உடையதாயும், சிற்றறிவுப் பொருட்களாயும் பல குறைபாடுகளுக்கு உட்பட்டிருப்பதனால் பசுக்களை இரண்டாம் நிலைப் பொருட்களாக சைவசித்தாந்தம் கொண்டுள்ளது. சடப்பொருளாகிய பாசம் நித்தியமானது எனினும் மூன்றாவதாகவே பேசப்படுகின்றது. இம்முப்பொருள் பகுப்புக்குள் மற்றெல்லாப் பொருட்களும் அடங்கும் என்பதே சித்தாந்திகள் முடிபாகும்.

சமய மெய்யியல் ஆய்வுகளில் அறிவினை மூலதனமாகக் கொண்ட சமுதாயத்திலே ஐதிக நிலையிலே காணப்பட்ட மரபுச் செய்திகளை அறிவுசார் நிலைக்கு எடுத்துச் செல்லுதலை சைவசித்தாந்தம் உட்பொருளாகக் கொண்டுள்ளது. "சைவம்" என்பது நம்பிக்கையுணர்வுசார் நெறி எனில் "சித்தாந்தம்" அந்த நம்பிக்கையுணர்வினை அறிவுநிலையுடன் கூடிய மெய்யியற் சிந்தனையாக உருவாக்கம் செய்யும் முயற்சியின் செயற்றிட்டமாகும். எனவே சைவசித்தாந்த மெய்யியலானது சமய வாழ்வையும் தத்துவ நெறியினையும் ஒன்றிணைக்கும் மெய்யியற் சிந்தனையாகும். சமயமும் தத்துவமும் ஒன்றினை ஒன்று நிறைவு செய்வன. இவை இரண்டும் இணைந்து செல்லும் சிறப்பு இந்திய மெய்யியலிற்கே குறிப்பாக சைவசித்தாந்தத் தத்துவத்திற்கே உரியதாகும்.

சைவசித்தாந்தத்தினை தமிழர்களுக்கே உரித்தான தத்துவக் கொள்கையாகப் பார்க்கும் மரபு ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. எனினும், அவை தொடர்பான சிந்தனைகளின் ஊற்றினை வடமொழியில் தோன்றிய இலக்கியங்களிலேயே முதலில் காண்கின்றோம். தமிழ் மரபிலும் வேதாகமங்களே பிரமாண நூல்களாக எடுத்தாளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் வடமொழி மரபிலே வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்களில் சித்தாந்தச் சிந்தனைகள் இடம்பெற்று அஷ்டப் பிரகரண நூல்களிலே அவை மெய்யியல் கொள்கைகளாக வளர்ச்சிபெற்ற முறைமையினை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**வடமொழி மரபு**

சைவசித்தாந்தத்தின் தொடக்கப் புள்ளியை அறிய நாம் மிகப் பழைய காலத்தையே நாடிச் செல்ல வேண்டும். இந்திய தொல் வரலாற்றை அறியக்கூடியதான "ஹரப்பா, மொஹஞ்சதாரோ"வில் கிடைக்கப்பெறும் உருவங்கள் சிவனின் உருவங்களாகவே எடுத்தாளப்படுகின்றன. வேத ஆகமங்கள் சைவ சித்தாந்த தத்துவத்தின் மூலங்களாக விளங்குகின்றன. முற்காலத்தில் சைவ சித்தாந்தம் உன்னத நிலையில் செழித்துத் தழைத்து நிமிர்வுடன் நிலை பெறுவதற்கு வேத ஆகமங்களிற் காணப்பட்ட சைவ சித்தாந்தச் சிந்தனைகளே காரணமாக அமைந்தன எனலாம்.

வேதமும் ஆகமமும் முதனூலாகவும் நாதனுரையாகவும் தெய்வநூலாகவும் மிளிர்கின்றன. சைவசித்தாந்திகள் வேதத்தைப் பொது நூலாகவும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் கொள்கின்றனர். இக்கருத்தையே அருணந்தி சிவாசாரியாரும் சூத்திரங்கள் போன்றிருத்தலால் வேதங்கள் பொதுவென்றும் அதற்குப் பாஷ்யம் போன்றிருத்தலால் சிவாகமங்கள் சிறப்பு நூல்கள் என்றும் விரிவாக எடுத்துரைப்பதுடன் "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" எனவும் கூறுவது நோக்கத்தக்கது (சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், 1934:582).

**வேதங்கள்**

வேத இலக்கியப்பரப்பு பல்வேறு தெய்வங்களுள் ஒருவராக உருத்திரன் என்பவரைப் பேசுகிறது. இத்தெய்வத்துக்கு "மங்களகரமானவர்" என்ற பொருள் தரும்வகையில் அமைந்த "சிவ" என்ற அடைமொழிச் சுட்டே நாளடைவில் இயற்பெயர் எனத்தக்க வகையில் நிலைத்தது என்பது வரலாறு. உக்கிரமானவராகவும் மங்களகரமானவராகவும் காட்சிதரும் அச்செந்நிறக்கடவுள் நோய் நீக்கும் மருத்துவனாகவும் திகழ்பவன் என்பது இருக்குவேதம் உணர்த்தும் செய்தியாகும். (இருக்குவேதம் 8-29:5) இருக்கு வேதத்தில் மூன்று பாடல்களே உருத்திரனைப் பற்றியதாக அமைந்திருந்தாலும் இடையிடையே எழுபத்தைந்து இடங்களில் உருத்திரன் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதாக அறிகிறோம்(ஊாயமசயஎயவஉை ஆ.இ 1986:1).

"ருத்ரமாலய குர்ஹஸ்த் கைகளையும்

"வஜ்ரபாஹோ", புஜங்களையும்,

"புருரூபா உக்ரோ", அச்சம் தரும் இயல்பையும்

"கபர்தீன்", சடாமுடியையும் (கலைவாணி இரா., 1992:24)

கொண்டவன் உருத்திரன் என அக்கடவுளின் தோற்றம் வர்ணிக்கப்படுகின்றது. இங்கே சுட்டிக் காட்டப்பட்ட அம்சங்கள் அனைத்தும் சித்தாந்தக் கடவுள் ஆகிய சிவனின் தோற்றத்தினை உள்ளபடியே பிரதிபலிப்பதனை எடுத்துக் காட்டுகின்றன. சித்தாந்தத்தில் கூறியபடி சிவனுக்குரிய முத்தொழிலும் இருக்கு வேதத்தில் உருத்திரனுக்குரிய முத்தொழிலாகக் கூறப்பட்டுள்ளன.

யாஸ்கர் உருத்திரனை இடையுலகத் தேவர்களில் ஒருவராகச் சுட்டுகின்றார். (இந்துக்கலைக் களஞ்சியம், 1990:02) வேதத்திற்கு உரை கண்ட சாயனரின் கருத்துப்படி "ருத்" என்பது துன்பம் அல்லது துன்பத்துக்குக் காரணமான பாவத்தைக் குறிக்கும். அதை நீக்குபவர் உருத்திரன் எனும் பெயர் பெற்றதென்கிறார் (ஞானகுமாரன், நா., 2012:02).

இருக்கு வேதத்தில் உருத்திரனுக்கு வைத்தியநாதன் எனப் பொருள்படும் வகையில் "பிஷத்தமன்" என்றொரு பெயரும் வழங்கப்படுகின்றது. (மேலது:02) இருக்குவேதப் பாடல்கள் உருத்திரனை அழித்தற் கடவுளாகவும் பலியை ஏற்கும் ஒரு பயங்கரத் தெய்வமாகவும் சுட்டுகின்றன. உருத்திரன் ஆண், பெண் முதலிய

இரண்டு தன்மைகளையும் கொண்டிருந்ததான குறிப்புக்களும் காணப்படுகின்றன. இது வேத காலத்திலேயே உருத்திரன் சிவனுக்குரிய அம்சமான அர்த்தநாரீஸ்வரராகக் கொள்ளப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது.

தத்துவ சிந்தனைகளின் பொக்கிஷமாகத் திகழ்வது இருக்குவேத பத்தாம் மண்டலம். இந்திய தத்துவத்தின் தோற்றுவாய் இங்கு புலப்படுகின்றது. இங்குள்ள ஒரு குறிப்பின்படி உருத்திரன் விடமுண்ட கண்டனாகச் சுட்டப்படுகின்றான் (இந்துக்கலைக் களஞ்சியம், 1990:83). உலகில் பரவிய ஆலகால விடத்தைத் தானே பருகி அதனைத் தன் கழுத்தில் தாங்கியதனால் "நீலலோகிதன்" என்ற பெயரும் உருத்திரனுக்கு வழங்கப்படுகின்றது.

வேத இலக்கியத்தின் இரண்டாவது பகுதியான பிராமணப் பகுதியில் உருத்திரனுக்கு மிக உயர்ந்த நிலை கொடுக்கப்பட்டுள்ளது. இருக்கு வேதத்தில் சிறு தெய்வங்களாகப் போற்றப்பட்ட உருத்திரனும் விஷ்ணுவும் பிராமணங்களில் பெருந்தெய்வ நிலையை அடைவது நோக்கத்தக்க ஒன்றாகும். பிராமணங்களில் பிரஜாபதி பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டாலும் உருத்திரனைப் போன்ற உயர்ந்த இடத்தைப் பிரஜாபதி பெறவில்லை என்பதும் தெளிவுக்குரியதாகும். ஐதரேய பிராமணம் அவனை மகேசன், மகேஸ்வரன், பரமேஸ்வரன் போன்ற நாமங்களால் வர்ணிக்கின்றது. கௌஷீதகி பிராமணம் உருத்திரனை பவன், சர்வன், ஈசானன், பசுபதி போன்ற பெயர்களால் குறிப்பிடுகின்றது (மேலது:83).

முத்தொழிலுக்கதிபதியாகிய உருத்திர சிவ வழிபாடு யசுர் வேத காலத்தில் முக்கியமான வளர்ச்சிக் கட்டத்தை அடைந்தது. இக்காலகட்டத்தில் உருத்திர சிவன் ஒன்றிற்கு மேற்பட்ட நாமங்கள் கொண்டவராக சிவமூர்த்திக்குரிய பண்புகளைப் பெற்றுக்கொண்டதொரு தலைமைக் கடவுளாக உயர்த்தப்பட்டார். யசுர் வேதம் நான்காம் காண்டமாயுள்ள தைத்திரிய சம்கிதையில் இடம்பெற்றுள்ள "சதருத்திரியம்" என்னும் பகுதி உருத்திரசிவ வழிபாட்டிலே குறிப்பிடத்தக்க மாற்றத்தை வெளிப்படுத்தியது. இச் "சதருத்திரியம்" எனும் பகுதி உருத்திரனின் விரிந்தபண்பு விளக்கப்பகுதியாகவும் அவரை வழிபடும் முறைமைக்கு விரிவான தோற்றுவாய் செய்வதாகவும் அமையக் காணலாம். உருத்திர சிவன் "மலைவாழ் கடவுள்" என்பதை யசுர்வேதம் எடுத்துக் காட்டுகின்றது.

"கிரிஷன், கிரிதரன், என்பதுடன் நில்லாது

நீலக்கிரிவ, சிவாத்ம் சிவ்" (கலைவாணி இரா., 1992:27)

உருத்திரன் சிவமூர்த்தியாக, பரமார்த்மனாகவும் கணிக்கப்பட்டான். இதன் தொடர்ச்சியாக நோக்கினால் பிற்காலம் தென்னாட்டுக் கோயில்களில் அர்ச்சனா விதிகள் வளர்ச்சியடையவும் இந்த சதருத்திரியம் பகுதியே முன்னோடியாக அமைந்துள்ளது. சிவ வழிபாட்டு நெறிக்கு மட்டுமன்றி தத்துவ கருத்து வளர்ச்சிக்கும் யசுர் வேதம் முன்னோடியாக அமைந்தது. தத்துவ மரபிலே யசுர் வேதம் உருத்திர சிவனை "பசுபதி" யாகவும் வைத்தியநாதனாகவும் சிருஷ்டித்துள்ளமை இவற்றிற்கு உதாரணங்களாகவும், உருத்திர சிவன் விலங்குகளின் தலைவன் என்னும் பொருளில்,

'பசுனாம்பதி: பசுபதயே:" (மேலது:28)

என யசுர் வேதம் சுட்டியுள்ளது. அத்துடன்,

நம: சிவாய சிவதராய நம்

என்ற பஞ்சாட்சர மந்திரங்களும் சதருத்திரியத்தின் கிருதய ஸ்தானமாக விளங்குகின்றன.

**உபநிடதங்கள்**

வேத இலக்கிய வரிசையின் இறுதிப்பகுதியாக அமையும் உபநிடதங்கள் பொதுவாக "பிரம்ம தத்துவம்" பரம்பொருள் நிலை பற்றி பேசுவன. உபநிடதங்களில் ஒன்றான சுவேதாஸ்வர உபநிடதம் சைவசித்தாந்தச் சிந்தனையின் ஊற்றாக அமைவதுடன் பக்தியின் வாயிலாகவும் விளங்குகின்றது. பக்தியின் தோற்றம் பற்றி ஆராய்ந்த பண்டாக்கர் சுவேதாஸ்வர உபநிடதத்தையே அதன் ஊற்றாகக் கொண்டார். *"yasya deve para bakti"* என சுவேதாஸ்வர உபநிடதத்தின் இறுதிப் பாடலில் பக்தி என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (அண்ணா (உரை), 1989:119). சுவேதாஸ்வர உபநிடதமும் உருத்திரனையே ஒப்பற்ற பரம்பொருளாகவும் தனிப்பெருந் தெய்வமாகவும் கொள்கின்றது (மேலது:77).

"ஏகோஹி ருத்ரோ ந த்விதீயாய தஸ்துர்ய

இமான் லோகானீ சத ஈசனீபி:" (சுவேதாஸ்வர உபநிடதம் 3.2)

அதாவது, எவன் இவ்வுலகங்களைத் தனது ஆளும் சக்திகளால் ஆள்பவனோ அந்த உருத்திரன் ஒருவனே அவனைத் தவிர இரண்டாவதாக வேறொருவனும் இல்லை என்பதே இதன் பொருளாகும். இதனையே "சிவனொடொக்கும் தெய்வம் தேடினுமில்லை அவனோடொப்பார் இங்கு யாருமில்லை" (திருமந்திரம்:05) எனத் திருமூலர் சுட்டியுள்ளமை நோக்கத்தக்கது. பிரம்மம், ஜீவன் என்ற இரண்டு நித்திய வஸ்துக்களையும் வேறுபடுத்திச் சுட்டும் வகையில் சுவேதாஸ்வர உபநிடதம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"அறிபவனும் அறியப்படுவதும் ஆள்பவனும் ஆளப்படுவதும்

ஆகிய இரண்டும் பிறப்பற்றவை" (சுவேதாஸ்வர உபநிடதம்: 1.9)

"அந்த ஆன்மா எல்லா உயிர்களுக்கும் அரசனாகும். தேர்ச்சக்கரத்தின் மத்திய பகுதியில் அதன் அனைத்துக் கிளைகளும் இணைந்திருப்பது போல இவ் ஆன்மாவில் (பிரமத்தில்) அனைத்து உயிர்களும் தேவர்களும் உலகங்களும் ஜீவாத்மாக்களும் இணைந்திருப்பதாக"க் கூறுகின்றது முண்டக உபநிடதம் (அண்ணா (உரை), 1989:71). இங்கு ஆன்மாவே பிரம்மமாக எடுத்தாளப்படுவதும் நோக்கத்தக்கது. பிரம்மத்தை மனத் தத்துவமான ஆனந்தமயமான ஆன்மா எனக் கூறுகின்ற தைத்திரிய உபநிடதமும் உயிரின் நிலையை எடுத்துரைக்கின்ற தன்மை சிந்தனைக்குரியது.

வேதங்களிற் காணப்படும் "ரிதம்" என்ற சொல்லாட்சி பிற்கால மறுபிறப்புப் பற்றிய கொள்கைக்கு வித்தாகக் காணப்பட்டாலும் மறுபிறப்புப் பற்றிய குறிப்பு முதன்முதலில் சாந்தோக்கிய உபநிடதத்திலேயே சுட்டப்படுகின்றது. மறு உலகத்தில் மட்டுமல்லாமல் இவ்வுலகிலும் உயிர்கள் தாம் செய்கின்ற வினையைப் பொறுத்தே பிறக்கின்றன என்பதே மறுபிறப்புத் தத்துவமாகும்.

"தேவர்கள் பாதையில் செல்லும் பயணிகள் ஒளிக்கதிர்களை அடைகின்றனர். கதிர்களிலிருந்து நாள்களையும் நாள்களிலிருந்து வளர்பிறையையும் அங்கிருந்து ஆறு மாதங்களையும் ஆறு மாதங்களிலிருந்து வருடத்தையும் வருடத்திலிருந்து சூரியனையும் அங்கிருந்து சந்திரனையும் சந்திரனிலிருந்து மின்னலையும் அடைகின்றனர். பின்னர் மனிதரல்லாத புருஷர் ஒருவர் இந்த தேவர் பாதை பயணிகளைப் பிரமத்திடம் சேர்ப்பிக்கின்றார். இந்தத் தேவர் பாதையே பிரமத்தின் வழியாகும். இந்த வழியில் செல்பவர்கள் மீண்டும் மனிதப் பிறவி எடுப்பதில்லை" என்கின்ற சாந்தோக்கிய உபநிடதக் கருத்து மறு பிறப்புத் தத்துவத்தை விளக்கி நிற்கின்றது (சாங்கிருத்தியாயன், தா., 1985:27).

ஆன்ம விடுதலை பற்றி சுவேதாஸ்வரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"மண்ணால் மூடப்பெற்றிருந்த ஒரு விக்கிரகம் தேய்த்துச் சுத்தமாக்கப்பட்ட பின்னர் எங்ஙனம் ஒளிவிட்டுப் பிரகாசிக்குமோ அங்ஙனமே ஆத்மத்துவத்தைக் கண்டுகொண்டதும் உடலில் உறையும் ஜீவன் (பரமாத்மாவுடன்) ஒன்றுபட்டவனாய் சித்தியெய்தியவனாய் துன்பம் நீங்கியவனாய் ஆகின்றான்"(சுவேதாஸ்வர உபநிடதம் 2.14). இங்கே மண்ணால் மூடப்பெற்றிருந்த விக்கிரகம் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்பது பற்றி விளக்கப்படவில்லை. பொதுவாக செம்பால் செய்யப்பட்டிருக்கலாம். செப்பு விக்கிரகமே தேய்த்துச் சுத்தப்படுத்திய பின்னர் களிம்பு நீங்கிப் பிரகாசிக்கும். எப்படியாயினும் "செம்பிற்களிம்பு" போல அனாதியாகவே ஆணவத்தின் பிடியில் சிக்கி ஆத்மபோதம் மழுங்கிக் கிடந்த ஆன்மா "நான் ஆர் என் உள்ளமார் ஞானங்களார்" என்ற ஆத்மஞானம் கைவரப் பெறும்போதுதான் விடுதலை சாத்தியப்படும். இது சித்தாந்த சிந்தனையேயாகும். மேலும், "ஒன்றுபட்டவனாய்" என்ற சொல்லாடலும் இங்கே கருத்தூன்றிக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

### புராண இதிகாசங்கள்

புராண இதிகாச இலக்கியப் பரப்பானது வேதமரபையும் இந்திய மண்ணின் பல்வேறு பிரதேசத் தொல்குடி மரபுகளையும் இசைவிக்கும் பண்பாட்டு நடவடிக்கையாகவே நோக்கப்படுகிறது. அவ்வகையில் இந்தியமண்ணின் பல்வேறு தொல்குடி மரபுகளிலும் கடவுள் தொடர்பாக நிலவி வந்திருக்கக்கூடிய கருத்தோட்டங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பவற்றை வேதமரபு சார் உருத்திர சிவனுடன் தொடர்புபடுத்தும் முயற்சிகளே புராணக்கதைகளாக விரிந்தன. அக்கதைகளூடாக நிறுவப்பட்ட நம்பிக்கைகள் ஒருவகையில் காபலிகம், பைரவம் முதலிய சமயப்பிரிவுகளாக உருவாகின. இன்னொரு வகையில் சைவபக்தி

இயக்கத்துக்கான மூலவளங்களாக அமைந்தன. சமண பௌத்த சமயங்களுக் கெதிராகவும் கூட "உருத்திர சிவ"னை உயர்நிலையில் வைத்துக்காட்ட இப்புராணங்களின் குறிப்பாக சைவம்சார் புராணங்களின் கதைகள் முக்கிய ஆதாரங்களாக அமைந்தன. பதினெண் புராணங்களுள் பத்துப் புராணங்கள் சிவபுராணங்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இதிகாசங்களும் லிங்க வழிபாடு, சிவனை நோக்கிய தவம், அவனின் மேன்மை போன்றவற்றைக் கூறி நிற்கின்றன. சிவனின் ஐந்தொழில்கள் தொடர்பான சித்தாந்தச் சிந்தனைக்கு இதிகாச புராணங்களில் பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் எனப்படுவோரின் செயற்பாடுகள் தொடர்பாக அமைந்த கதைகள் மூலவளங்களாகத் திகழ்வன என்பது உய்த்துணர்தற்குரியது.

மகாபாரதம் கிருஷ்ணனின் முதன்மையைக் கூறும் நூலாகக் காணப்பட்டாலும் கூடக் கிருஷ்ணன், அர்ச்சுனன் ஆகியோர் சிவனின் ஆதரவைப் பெற்றவர்களாக உள்ளமை இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையும் சிவ வழிபாட்டின் மேன்மையை விளக்குகின்றது.

**ஆகமங்கள்**

வேத உபநிடதங்களிலும் அவற்றைப் பரவலாக்கம் செய்ய எழுந்த இதிகாச புராணங்களிலும் சைவசித்தாந்தத்தின் ஆரம்பக் கூறுகள் இருந்தாலும்கூட ஆகமங்களே சைவசித்தாந்தத்தின் மையப்புள்ளி எனலாம். சிவாகமங்களே சைவ சித்தாந்தத்தின் மூலவேர்களைக் கொண்டிருக்கின்றன. இருபத்தெட்டு ஆகமங்களும் தனித்தனியே நான்கு பாதங்களாக வகுக்கப்பட்டுள்ளன. சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்பன அவை. இவற்றுள் ஞானபாதமே சைவசித்தாந்தத்தின் தோற்றுவாயாக விளங்குகிறது.

சித்தாந்த உண்மைகளின் உறைவிடமாக மிளிர்கின்ற சிவாகமங்கள் இருபத்தெட்டுள்ளும் சம்பந்தர் முதலிய சமயாசாரியார்களுக்கும் மெய்கண்டார் முதலிய சந்தானாசாரியார்களுக்கும் சித்தாந்த முதனூலாய் சிவானுபவத்துக்கு இலக்கணமாய் அமைந்திருப்பது ரௌரவ ஆகமமாகும். ரௌரவ ஆகமம் "தேகவியோக காலத்தில் ஆன்மாவானது சிவானந்தத்தோடு ஒரே இரசத்தை அடைக" என்கிறது (சிறிரதிதேவி மா., 2000:04).

பௌஷ்கராகமத்தின் முதற்பாடலான பதிபடலத்தில் சிவனின் இலக்கணங்களும் சிவனிடம் வேறின்றியிருக்கும் சக்தியின் தொழிற்பாடுகளும் பசு பாலினால் கன்றை வளர்ப்பது போல சிவன் சித் வல்லமையினால் ஆன்மாக்களைப் பிரவர்த்திக்கும் தன்மையும் ஆன்மாக்கள் அனுபவிக்கும் வினைகள் பற்றியும் அவ்வினைகளிலிருந்து பரமேஸ்வரன் தனது இச்சையால் ஆன்மாக்களை ஆஞ்ஞாபிப்பதும் தெளிவுறுத்தப்படுகின்றன. இந்த வகையில் தோன்றல், இருத்தல், அழித்தல் என்பதற்கு முதன்மையாய் எக்காலத்தும் நிலைபெற்றிருக்கும் பொருளாகப் பதி குறிப்பிடப்படுகின்றார். சிவன் நஞ்சுண்டதை, "சமுத்திர மதனத்தினால் உண்டான விஷத்தினாற் கறுத்த கண்டத்தை உடைத்தானவர்" என்கிறது பௌஷ்கராகமம்.

சிவசக்தியே ஞானம் என்றும் ஆகமஞானம் அந்தச் சிவஞானத்தை அறிவிக்கும் என்பதுமான குறிப்புக்கள் காணப்படுகின்றன. சிவம் சதாசிவ, மகேஸ்வரர் என்றும் நிஷ்கள, நிஷ்களசகள, சகளரென்றும் பரியாய நாமங்களைப் பெறுவரென்றும் இந்த சிவாதிகள் பரஸ்பரம் வாஸ்தவ பேதம் அற்றவை என்றும் இம்மூன்று செயற்பாடுகளும் சக்திகளாலேயே செய்யப்படுகின்றன என்ற விளக்கமும் காணப்படுகின்றன (சண்முகசுந்தரமுதலியார். கொ., (பதி.), 1950: 21).

வேத உபநிடதங்களிற் சுட்டப்பட்ட உருத்திரன் ஆகமங்களில் ஈஸ்வரன் என்றும் சிவம் என்றும் சதாசிவம் என்றும் பரமேஸ்வரன் என்றும் பல நாமங்களில் குறிக்கப்படுகின்றார். வேதங்களிற் சுட்டப்பட்ட உருத்திரனும் இப்பெயர்களைக் கொண்டு விளங்கியமை குறிப்பிடத்தக்கது. எனவே வேதங்களிற் சுட்டப்பட்ட உருத்திரனே பிற்காலத்தில் சிவனாக எடுத்தாளப்படுகின்றார் என்பது வெள்ளிடைமலை.

சிவாகமங்களின் ஞானபாதமே சித்தாந்தமாகும். இச் சித்தாந்தம் ஆகிய ஞானபாதத்தினுள்ளும் பொருளுண்மை முதலியவற்றைப் பொதுவகையாகக் கூறும் ஞானபாதத்தால் சித்தாந்த முத்தி இலக்கணம் பொதுவகையாகக் கூறப்படுகின்றது. அவற்றைச் சிறப்பு வகையாகக் கூறும் ஞானபாதத்தால் சித்தாந்த முத்தி இலக்கணம் சிறப்பு வகையாக விளக்கப்படுகிறது. இவ்வாறு முத்தி இலக்கணத்தைச் சிறப்பு வகையில் கூறுவதே சர்வஞானோத்தர ஆகமத்தின் ஞானபாதம் ஆகும்.

பதி, பசு, பாசமாகிய ஞானபாதப் பொருள்கள் பற்றிய கருத்தில் ஆகமங்களுக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. தொகுத்துக் கூறும்போது, "பொருள்கள் மூன்றே" என்பதில் ஆகமங்களிடையே கருத்து வேறுபாடு காணப்படவில்லை என்பதைச் சிவஞானபோத நூலாராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

சர்வகாலமும் மலத்தினாற் தகையப்பட்டிருக்கும் ஞானக்கிரியா வியாபகத்தை உடையது பசு. மலத்தினாற் பந்திக்கப்பட்ட பசு ஒருமலம், இருமலம், மும்மலமுடைய விஞ்ஞானகல, பிரளயாகல, சகலரென மூவகையினர் என்ற விளக்கமும் காணப்படுவதுடன் கலை முதல் பிருதுவி வரையுள்ள பாச ரூபமான தத்துவங்களும் கிரியை என்னும் காரக பதார்த்தமும் விளக்கப்படுகின்றது. இந்த ஆறு பதார்த்தங்களிலும் சிவதத்துவம் முதல் பரத்வித தத்துவம் வரையுள்ள முப்பத்தாறு தத்துவங்கள் அடங்கியுள்ளன என்றும், சிவ தத்துவம் சிவ சம்பந்தமானது என்றும், சிவதத்துவத்தின் லட்சணமும் தெளிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், தேகத்துக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பும் வலியுறுத்தப்படுகின்றது. தேகம் சடம் என்பதும் எந்த சித் பிரேரணையினால் தேகாதிகள் பிரவிர்த்திக்கின்றதோ அதுவே ஆன்மா என்றும் ஆன்மா ஸ்வபரபிரகாச ரூபம் என்பதும் தேகமில்லாவிடில் சைதன்யம் பிரகாசிப்பதில்லை எனவும் இதனாலேயே தேகத்துடனான ஆன்மா பிறவிக்கு உட்படுகின்றது என்ற கருத்தும் பௌஷ்கர ஆகமத்தில் காணப்படுகின்றது (மேலது:246).

'பசுத்வ பசுநீஹார மருத்தியு மூர்ச்சா மலஅஞ்சன
அவித்யா ஆவ்ருதி ருக்குகிலானி பாபமூல கூடிய' (மேலது:55)

என்ற மிருதேந்திர ஆகம அடிகள் ஆணவத்தின் பெயர்களைப் பட்டியற்படுத்திக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கன்மம் புண்ய பாவஸ்வரூபமுடையது. இந்தத் தர்மா தர்மங்கள் புத்தியாலுருவாகின்றன. கன்மமானது நிமித்தமாய்ச் சரீராதிகளை உருவாக்குவதாயும் மெய்ப்பொருள்களைக் காரணமாகக் கொண்டிருப்பதால் தர்மாதர்ம ரூபமென்றும் சொல்லப்படுகின்றது. இந்தக் கன்மமானது பிரளயத்திற் பரிணாமத்தை அடைகின்றது என்கின்றது மிருகேந்திராகமம். சிருஷ்டி காலத்தில் மாயையிற் சம்ஸ்கார ரூபமாகவும் விளங்குகின்றது (சிறிரதிதேவி மா., 2000:30).

உலகப் படைப்புக்கு முதற் காரணமாக விளங்குகின்ற மாயை சைவசித்தாந்தத்தில் பிரதான இடத்தை வகிக்கின்றது. மாயை பற்றிய இலக்கணமானது, வேத உபநிடதங்களை விட ஆகமங்களிலேயே விரித்து உரைக்கப்பட்டிருக்கின்றன. "யாதொரு காரணத்தால் எல்லா உலகங்களையும் தனது விகாரமாகச் செய்யா நிற்கின்றதோ அந்தக் காரணத்தினாலேயே மாயை என்ற பெயரைப் பெறுகின்றது என்கிறது பௌஷ்கராகமம்." மேலும், மாயை என்பது பிரளய காலத்தில் ஒடுங்கி கலாதிரூபதேகமும் கர்ம மலமுமுடைய பிரளயாகலருக்குச் சிருஷ்டி காலத்தில் கலாதிருப்தவியந்த தூல சூக்கும தேக தனு கரண புவன போகங்களுக்கு உபாதான காரணமாய் இருப்பது மாயை ஆகும் என்கின்றது(சண்முகசுந்தரமுதலியார். கொ., (பதி.), 1950: 125-130).

#### அஷ்டப் பிரகரண நூல்கள்

சைவசித்தாந்த தத்துவத்தின் முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பை மெய்கண்ட சாத்திரங்களுக்கு முன் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் எழுந்த வடமொழி நூல்களான அஷ்டப் பிரகரணங்கள் உணர்த்தி நிற்கின்றன. கி.பி 8-9 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவராக அறியப்படும் சத்தியயோதி சிவாசாரியாரே முதன் முதலில் வடமொழியில் சைவசித்தாந்த தத்துவத்தை முறைப்படுத்திய பெருமைக்குரியவராக விளங்குகின்றார். சித்தாந்தத்தை முறைப்படுத்திய முதலாளரான சத்தியயோதியே பதி, பசு, பாசம் என்ற சைவசித்தாந்தக் கொள்கைகளை உள்ளடக்கிய இருமைவாதத்தை ஒருமைவாதத்துடன் இணைத்தவராகவும் விளங்குகிறார் (Dunuwila, R., 1985:63). ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு சித்தாந்த மெய்யியலை விருத்தி செய்த இவர் அவற்றையே தனது முறையியலுக்கும் பின்பற்றினார். ஹேதபாதரெனவும் அழைக்கப்படும் சத்தியயோதியே தற்பொழுது எமக்குக் கிடைக்கின்ற நூல்களில் முதன்முதலில் சிவாகமங்களுக்கு விருத்தியுரை செய்த பெருமைக்கு உரியவராகக் கருதப்படுகின்றார்.

"சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்ற அருணந்திசிவாசாரியாரின் வாக்கிற்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களைக் கொண்ட சிவாகமங்களில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையினையும் இவற்றின் இலக்கணங்களையும் பசுவானது பாசத்திலிருந்து விடுபட்டுப் பதியை அடைவதற்குச் செய்யத்தகும் சாதனங்களையும் சாதனத்தின் பின் நிகழும் முத்தி

நிலையினையும் தருக்க முறையில் சிறப்பாக விளக்கி நிற்பது ஞானபாதமாகும். இந்த ஞானபாதத்தின் தொகுப்பே எட்டுப் பிரகரணங்களாக உருப்பெற்றன.

தமிழில் சைவசித்தாந்த தத்துவத்தை மெய்கண்ட சாத்திரங்கள் முறைப்படுத்தி விளக்குவன போன்று வட மொழியில் அஷ்டப் பிரகரண சாத்திரங்கள் சைவசித்தாந்த மெய்யியற் கொள்கையினை தருக்க முறையில் விளக்கி நிற்கின்றன.

தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், இரத்தினத்திரயம், போககாரிகை, நாதகாரிகை, மோட்சகாரிகை, பரமோட்சநிராசகாரிகை ஆகிய எட்டு நூல்களும் அஷ்டப் பிரகரணங்கள் என வழங்கப்படுகின்றன. இவ் எட்டு நூல்களில் தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை, மோட்சகாரிகை, பரமோட்சநிராசகாரிகை ஆகிய ஐந்து நூல்களும் சத்தியயோதியினால் எழுதப்பட்டவையாகும்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களையும், பிருதுவி முதல் நாதமீறான தத்துவங்களையும் அடிப்படைகளாக ஏற்றுக்கொண்டு ஆன்மாக்கள் எவ்வாறு போகத்தில் ஈடுபட்டு மோட்சத்தை அடைகின்றன என விளக்குவதே சத்தியயோதியின் சைவசித்தாந்த அடிப்படையாகும்.

பௌதீகவதீதமாக விளங்குகின்ற இறைவனை எமது எல்லைக்கு உட்பட்ட அறிவினால் அறிந்து கொள்ள முடியாது. இவ்வாறு காண்பதற்கு அரியதாய் விளங்குகின்ற இறைவனின் இருப்பை, உண்மைத் தன்மையைத் தர்க்க ரீதியில் எடுத்தாள முற்படுதல் இறைவனை ஏற்று நிற்கின்ற தத்துவவாதிகள் ஒவ்வொருவருக்கும் அவசியமான ஒன்றாகும். எனவே, சைவசித்தாந்தமும் இறையிருப்புக்கு, பதியுண்மைக்கு முதன்மை அளித்து விளக்கி நிற்றலைக் காணலாம். "எந்த அறிவுடைய புருடன் முதற்காரணத்தை ஏவுகின்றானோ அந்த அறிவுடைய புருடனே ஈஸ்வரன் என அறிந்து கொள்ள வேண்டும்" (சிறிரதிதேவி மா., 2000:117) என்பதைத் தெளிவுறுத்துகின்ற சத்தியயோதி முதற்காரணத்துக்கே உலகைத் தோற்றுவிக்கும் இயல்பு உண்டெனக் கூறமுடியாது என்பதையும் உணர்த்தி போக்தாக்களான ஆன்மாக்கள் உலக வித்தான மாயையையும் சக்தியுடன் கூடிய மகேசனையும் தனித்தனியாக ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதையும் தமது அடுத்த சூத்திரத்திலேயே அறிவுறுத்தி உள்ளார். (மேலது:117) இதிலிருந்து உருவாக்குபவரும் ஆள்பவருமான பதியே ஆன்மாக்களின் செயல்களுக்கு அதிகாரியாகவும் விளங்குகின்றார் என்பது தெளிவாகின்றது.

தத்துவ சங்கிரகம் சைவசித்தாந்த தத்துவங்களைத் தர்க்க ஒழுங்கின்படி விளக்குகிறது. ரௌரவ ஆகமத்தை அனுசரித்து இந்நூல் செய்யப்பட்டுள்ளது. தத்துவத்திரய நிர்ணயம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளின் இயல்பை விளக்குகிறது. சுவாயம்பு ஆகமத்தை அனுசரித்து இந்நூல் இயற்றப்பட்டது. சத்தியயோதியின் மூன்றாவது நூலான போக காரிகை சரீரசம்பந்தம் பெற்ற ஆன்மாவின் போகத் துய்ப்புபற்றியும் அதற்குப் பஞ்சபூத விருத்திகள் எவ்வாறு சாதனமாயுள்ளதென்றும் விளக்குகிறது. போக சாதனமான கருவிகள் மாயையில்

இருந்து உயிரின் பொருட்டுத் தோன்றுகின்றன. போகனுபவ முடிவில் இருவினையொப்பும் மலபரிபாகமும் நிகழ்ந்து உயிர்கள் கருவிகளைநீக்கி மோட்சத்தை அடைகின்றன. போகமோட்சங்களைத் தருபவர் பதியே என்று மோட்ச காரிகை விளக்குகிறது. பரமோட்ச நிராசகாரிகையோ முத்தி பற்றிய பரசமய தரிசனக் கருத்துக்களைக் கண்டித்து சைவசித்தாந்தக் கருத்தே ஏற்புடையதெனக் காட்டுகிறது. போக காரிகை சைவசித்தாந்தத்தின் வாழ்வியலம்சத்தை முதன்மைப்படுத்த, மோட்ச காரிகையோ ஆன்மாவின் முத்தி பற்றிக் கூறுகின்றது.

**முடிவுரை**

சைவசித்தாந்தத்தினை தமிழர் மெய்யியலாக பார்க்கும் மரபு பொதுவாக காணப்படுகின்றபோதும், சைவசித்தாந்தச் சிந்தனையின் ஊற்றுக்களை வடமொழியில் எழுந்த வேதாகமங்களிலேயே முதலிற் காண்கின்றோம். சைவசித்தாந்த மெய்யியலில் பிரமாண நூல்களாகவும் வேதாகமங்களே கொள்ளப்படுகின்றன. தமிழில் தோன்றிய பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் சைவசித்தாந்தத்தை கோட்பாட்டு ரீதியாக நிறுவும் முக்கிய நூல்களாகத் திகழ்கின்றன. வடமொழி மரபிலும் சைவசித்தாந்தச் சிந்தனை கோட்பாட்டு வடிவம் பெறுவதை அஷ்டப்பிரகரண நூல்களில் காண்கின்றோம். அந்த வகையில் வடமொழி மரபில் சைவசித்தாந்தம் முக்கிய தத்துவமாக வளர்ச்சிபெற்றுள்ளமை மேற்குறிப்பிட்ட கருத்துக்களின் மூலம் நன்கு தெளிவாகின்றது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. அண்ணா (உரை), 1989, 108 உபநிஷத்சாரம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்.
2. சாங்கிருத்தியாயன்,தா., 1985, இந்து தத்துவ இயல், நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
3. கலைவாணி,இரா., 1992, வேத பாரம்பரியமும் சைவ சித்தாந்தமும், ஸ்ரீரெங்கா பிரிண்டர்ஸ், மதுரை.
4. சண்முகசுந்தரமுதலியார்,கொ., (பதி.), 1950, பௌஷ்கராகமம், சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.
5. ஞானகுமாரன்,நா., 2012, சைவசித்தாந்தத் தெளிவு, தூண்டி, யாழ்ப்பாணம்.
6. சிறிரதிதேவி, மா., 2000, மெய்கண்ட சாத்திரங்களுக்கு முன் சைவசித்தாந்தம், (முதுதத்துவமாணி ஆய்வேடு), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
7. சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், 1934, சைவசித்தாந்த மகாசமாசம், திருவருளகம், சென்னை.
8. இந்துக்கலைக் களஞ்சியம்(தொகுதி-1), 1990, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
9. Dunuwila, R., 1985, Saiva Siddhanta Theology, Motital Banarsidass, Delhi.
10. Chakravatic M., 1986, Concept of Rudra – Siva through the ages, Motital Banarsidass, Delhi, Varanasi Patna – Madras.
11. Piet. Johnh, 1952, Saiva Siddhanta Philosophy, The Christian literature Society for India, Medras.

# விஞ்ஞான மெய்யியலில் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையின் வகிபங்கு: ஒரு விமர்சன ஆய்வு

*திரவியநாதன் திலீபன்*

**ஆய்வுச்சுருக்கம்**

*விஞ்ஞான வளர்ச்சி தனக்குரிய ஆய்வு நெறிகளையும் அடிப்படை நியதிகளையும் வகுத்துக்கொண்டு மேனோக்கிய பாய்ச்சலாக முன்னேற்றம் கண்டுவருகின்றது. இதனால் விஞ்ஞான விதிகள் மற்றும் கொள்கைகள் புதிய தகவல்களால் மீள் பரிசோதனைக்குள்ளாகின்றதோடு விஞ்ஞான அறிவும் வளர்ச்சியடைந்துகொண்டு செல்கின்றன. விஞ்ஞான வரலாற்றின் செல்நெறிப்போக்கில் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிதுபுனைதல்களோடு வெவ்வேறுபட்ட முறையியற் சிந்தனைகளின் தோற்றமும் அறிவுசார் வளர்ச்சியைக் கட்டமைத்திருக்கின்றன. பொதுவாக முறையியற் சிந்தனைகள் ஆரம்பகால ஆய்வுப் பாரம்பரியத்திலிருந்து செல்வாக்குச்செலுத்தியிருந்தாலும் கூட பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதிய மாற்றங்களுடன் எழுச்சிகண்டது. இந்நிலையில் பல்வேறுட்ட கருத்தியல்களுடன் இம்முறையியற் சிந்தனைகள் தோற்றம்பெற்று விஞ்ஞான அறிவைக் கட்டமைத்திருந்தமையும் அறியத்தக்கது. வரலாற்று நோக்கில் மொழிப் பகுப்பாய்வுச் சிந்தனைகள் தோற்றம்பெற்றதையடுத்து புதிய பரிமாணங்களுடன் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையும் வளர்ச்சிகண்டிருந்தது. குறிப்பாக இம்முறையியற் சிந்தனை நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கும் அறிவைக் கட்டமைப்பதற்கும் ஆதாரமாக விளங்கியிருக்கின்றன. அதாவது விஞ்ஞானங்களை ஒழுங்கமைத்தல், விஞ்ஞானங்களுக்குப் புதிய அடித்தளத்தினை வழங்குதல் மற்றும் பௌதிகவதீதச் சிந்தனைகளைப் புறம்தள்ளல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவேதான், இவ்வாய்வானது தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையின் சிறப்பம்சங்களினையும் விஞ்ஞான மெய்யியலில் அதன் வகிபங்கினையும் விமர்சன ரீதியாக ஆராய்கிறது. இவ்வாய்விற்கு வரலாற்று ரீதியான அணுகுமுறை, பகுப்பாய்வு முறை மற்றும் விமர்சன ஆய்வு முறை போன்ற முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு ஆய்வு தொடர்பான கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளப் பதிவுகள் என்பன தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள்:*** *விஞ்ஞான மெய்யியல், அறிவு வளர்ச்சி, தர்க்கம், புலனறிவாதம்*

**விஞ்ஞான மெய்யியல் பற்றிய அறிமுகம்**

மனிதன் ஆரம்பம் முதல் தன்னைச் சூழ்ந்துள்ள உலகு, அதிலுள்ள பொருட்களைப் பற்றி அறிந்துகொள்ள முயன்று வந்திருக்கின்றான். இதன்போது இப்பிரபஞ்சம் விடை காணமுடியாத பல புதிர்களைக் கொண்டதாக விளங்கியிருந்தது. இத்தகைய புதிர்களைத் தேட முற்பட்டதனையே மெய்யியல் முதலில் உலகிற்கு எடுத்துக்காட்டியது. இருந்தும், ஆரம்ப கால விஞ்ஞானம் என்பது பெரும்பாலும் மெய்யியல் விசாரணைக்குள் முடங்கியிருந்தது. பின்னர் சிந்தனையாளர்களின் தொடர்ச்சியான தேடலின் பயனாக முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளக்கங்கள் தவறானவை என நிராகரிக்கப்பட்டு புதிய விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டன. இதுவே விஞ்ஞான வரலாற்றின் இன்று வரையிலான முன்னேற்றமாகும்.

வரலாற்று வளர்ச்சியில் மெய்யியலாளர்களைப்போல விஞ்ஞானிகளும் உண்மையைத் தேடும் ஆராய்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். அதாவது உண்மையைத் தேடிக் கண்டுபிடித்து புத்தாக்கச் சிந்தனைகளை வெளிக் கொணர்வதையே நோக்கமாகக்கொண்டனர். இங்கு விஞ்ஞானிக்கும் மெய்யிய லாளனுக்குமுள்ள வேறுபாடு, விஞ்ஞானி அவதானத்தையும் பரிசோதனையையும் தமது பிரதான ஆய்வுப்பொருளாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். இதன்படி உண்மைகளைக் கண்டுபிடிக்க மட்டுமே விஞ்ஞானம் முயலுகின்றது. "மெய்யியல் உண்மைகளைக் கண்டுபிடிப்பதில் சரியாக ஆர்வம்கொள்ளாவிட்டாலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உண்மைகளை ஒழுங்கமைத்து - விபரித்து - தெளிவுபடுத்தி விமர்சன ரீதியாக நோக்குதலைக் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றது" என்கின்றார் பெனிக்ஸ் என்ற அறிஞர்.

விஞ்ஞானத்தின் முன்னேற்றம் அதனூடான வளர்ச்சி பற்றி ரஸல் கூறுகையில், "எங்கோ இருக்கும் நட்சத்திரங்கள் மற்றும் கிரகணங்கள் தொடர்பாக ஆராயும் பணியில் விஞ்ஞான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. நியூட்டன் காலம் வரை அப்படியே நடந்தது. அடுத்தபடியாக நமக்கு நெருங்கிய மனித உடலைப் பற்றி 19ஆம் நூற்றாண்டில்த்தான் விஞ்ஞான ஆராய்ச்சிகள் தீவிரமாக வளர்ச்சியடையத் தொடங்கின. உயிரினங்கள் பற்றிய தெளிவு ஏற்பட்டது சார்ள்ஸ் டார்வினின் (Charles Darwin) பரிணாமக் கோட்பாட்டிற்குப் பின்னர்தான். இறுதியில் எல்லோருக்கும் மிக நெருக்கமான மனித மனத்தைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் சிக்மன்ட் புரொய்டினால் மேற்கொள்ளப்பட்டதன் (Sigmund Freud) பின்னரே செல்வாக்குப்பெற்று விளங்கியது."

இவ்வாறு, படிப்படியாக வளர்ச்சியடைந்த விஞ்ஞான அறிவு பல துறைகளையும் உள்வாங்கிக்கொண்டு விரிவுபெற்றது. குறிப்பாக நியூட்டன், அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் போன்றோர்களது சிந்தனைகளைக் குறிப்பிடலாம். வில்லியம் தோம்ஸன் (William Thomsan) என்பவர் நியூட்டனுடைய சிந்தனைகளை வெப்பவியலுக்கு விரிவுபடுத்தி ஆய்வுகளை மேற்கொண்டார். தொடர்ந்து, விஞ்ஞானச் சிந்தனைகளில் மாற்றங்கள் உருவாகி எந்தவொரு கோட்பாடும் சரியான சோதனைச் சான்றுகளுடன் ஐயத்திற்கு

இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை இக்காலப்பகுதியில் முன்மொழியப்பட்டது.

விஞ்ஞான வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் பிற்பட்ட காலங்கள் ஈறாகப் பல புதிய உண்மைகள் வெளிக்கொணரப்பட்டமையை இன்றுவரையிலான விஞ்ஞானத்தின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்நிலையில் விஞ்ஞானத்தின் நோக்கம் பற்றி ஏனர்ஸ்ற் நேகல் குறிப்பிடுகையில், கண்டுபிடிப்புக்களை வழங்குவதும் முறையானதும் பொறுப்பு வாய்ந்ததுமான விளக்கங்களினை முன்வைப்பதேயாகும். விஞ்ஞான வளர்ச்சியில் புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்து அறிவைக் கட்டமைப்பதில் முறையியலாளர்களினதும் விஞ்ஞானிகளினதும் பங்களிப்புக்கள் முதன்மையானதொன்றாகும். இவர்களினது இடையறாத தேடலும் புதிய உண்மையை வெளிக்கொணர வேண்டும் என்ற ஆர்வமுமே விஞ்ஞான முறையியல் வளர்ச்சிக்கு அடிப்படைகளாக விளங்கின. இவை, "விசாரணைக்குட்படுத்தாத வாழ்க்கை வாழத்தகுதியற்றது" எனும் சோக்கிரட்டீஸின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுப்பவையாக உள்ளன.

விஞ்ஞானத்தின் செல்நெறிப்போக்கில் கண்டுபிடிப்புக்கள், புதிதுபுனைதல்கள் ஒருபுறம் வளர்ச்சியடைந்து செல்ல மறுபுறம் வெவ்வேறுபட்ட முறையியற் சிந்தனைகள் தோற்றம்பெற்று அறிவுசார் வளர்ச்சியை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்திச்சென்றன. விஞ்ஞான முறையியல் வளர்ச்சியில் புரட்சிகரமான சிந்தனைகளை முன்வைத்தவர்களில் கார்ள் பொப்பர் மற்றும் தோமஸ் கூன் குறிப்பிடத்தக்கவர்கள்.

பொப்பர், விஞ்ஞானம் என்றால் என்ன? எனும் வினாவிலிருந்து தமது ஆய்வுகளைத் தொடங்குகின்றார். குறிப்பாக, விஞ்ஞானமானது பின்வரும் இரண்டு எடுகோள்களை அடிப்படையாகக்கொண்டு வளர்ச்சிபெறுகின்றது என வலியுறுத்தியிருந்தார்.

1. மனித அறிவின் வளர்ச்சிக்கு எல்லையில்லை
2. என்றுமே மாறாத உண்மை என எதுவுமில்லை

வரலாற்றில் முன்வைக்கப்படும் விதியோ, கொள்கையோ பொய்ப்பிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே தமது பொய்ப்பித்தல் கோட்பாட்டினை பொப்பர் முன்வைத்தார் (*Karl Popper, 1962:54*). விஞ்ஞானமானது விஞ்ஞானக் கொள்கைகளையும் விதிகளையும் எப்பொழுதும் பரீட்சித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலை விஞ்ஞானத்தின் வளர்ச்சிப்போக்கையும் அதனூடான மாற்றத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக, விஞ்ஞானம் என்பது அவதானம், பரிசோதனை ஆகிய அனுபவச் சோதனைகளின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவே எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறு பொய்ப்பிக்கப்பட முடியாதனவற்றை விஞ்ஞானமல்லாத் துறைக்குள் அடக்குகின்றார். எனவே, விஞ்ஞான அறிவைப் பொறுத்தவரையில் முடிவிலியாகத் தொடரும் தேடலில் ஊகங்களும் நிராகரிப்புமாக

வளர்ச்சியடைந்து செல்வதே சாத்தியம் எனப் பொப்பர் தெளிவுபடுத்தியிருந்தார். இதனையே பொப்பர்,

P1→TS →EE →P2 ........... எனும் குறியீட்டில் வெளிப்படுத்தியிருந்தார்.

விஞ்ஞான வளர்ச்சியினை வரலாற்று ரீதியாக ஆராய்ந்த கூன், ஆய்வுகளின் மூலம் புதிதாக வெளிக்கொணரப்படும் ஓர் உண்மை அல்லது முடிவு காலப்போக்கில் மாற்றமடையும் என வலியுறுத்தி "கட்டளைப்படிம மாற்றம்" எனும் புதிய முறையியற் சிந்தனையை அறிமுகப்படுத்தினார். இம் முறையியல் விஞ்ஞான வளர்ச்சியில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியதோடு புத்தாக்க சிந்தனைகளையும் உருவாக்கியிருந்தது. விஞ்ஞான வளர்ச்சியில், பொது உண்மையான கட்டளைப் படிமம் ஒன்று நிலைநிறுத்தப்பட்டாலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலம் அப்படிமம் மாற்றமடைந்து செல்லும் என்பதே வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ளும் உண்மையாகும். எடுத்துக்காட்டாக, தொலமியின் புவிமையக் கொள்கையினை நிராகரித்தமையினாலேயே கொப்பனிக்கஸின் சூரியமையக் கொள்கை தோற்றம்பெறலாயிற்று. இம்முறையியல் வளர்ச்சியில் பொப்பர் மற்றும் கூனைத் தொடர்ந்து பெயராபெண்ட், லக்காடோஸ் போன்ற முறையியற் சிந்தனையாளர்களின் கருத்துக்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்தன.

இவ்வாறாக விஞ்ஞான வளர்ச்சி தனக்குரிய ஆய்வு முறையியல்களையும் அடிப்படை நியதிகளையும் வகுத்துக்கொண்டு மேனோக்கிய பாய்ச்சலாக முன்னேற்றம் கண்டுவருகிறது. இப்பாய்ச்சலில் விஞ்ஞான விதிகள் அல்லது கொள்கைகள் புதிய தகவல்களால் மீள் பரிசோதனைக்குள்ளாகின்றன. இதனால் விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்துகொண்டே செல்கின்றது எனலாம். பௌதிகவியலுக்கான நோபல் பரிசு பெற்ற பிரிட்ஜ்மேன் (Bridgemen) என்ற அறிஞர், "விஞ்ஞானிகள் என்ன செய்கிறார்களோ அதுதான் விஞ்ஞான வழிமுறை" எனக் கூறுகின்றார். அதாவது உண்மையை அறிவதற்கு எந்தெந்த வழிகள் உள்ளனவோ அந்தந்த வழிகளை விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர். ஆகையால் "ஒவ்வொரு விஞ்ஞானியினதும் வழிமுறை அறிவியல் முறையே" என அவர் மேலும் விரிவுபடுத்தினார்.

**புலனறிவாதம்**

சமூக விஞ்ஞான ஆய்வுகள் தோற்றம்பெற்ற காலம் முதல் அவ் விஞ்ஞான ஆய்வுகளுக்கும் புதிய உண்மைகளை வெளிக்கொணர்வதற்கும் புலனறிவாதச் சிந்தனைகள் பெரிதும் பயன்பட்டு வந்தன. இச்சிந்தனைகளின் வழிகாட்டலின் கீழ் சமூக விஞ்ஞானங்களின் அனைத்துத் துறைகளும் தம்மை விஞ்ஞானங்களாக ஆக்கிக்கொள்ள முனைந்தன. புலனறிவாதச் சிந்தனையானது,

- புலனனுபவங்களுக்கு முதன்மையளிக்கிறதுக
- விஞ்ஞானத்தின் நோக்கம் உண்மையைக் கண்டறிதல் என்கிறதுக
- விஞ்ஞான வளர்ச்சி எல்லையற்றது என்கிறதுக

- விஞ்ஞானத்தின் மாற்றம் எப்போதும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.
- அகம்சார் மதிப்பீடுகளைப் புறந்தள்ளுகின்றது.
- விஞ்ஞானம் புதிய சிந்தனையை நோக்கி வளர்ச்சியடைய வேண்டும் என்கிறது.

இப்புலனறிவாதச் சிந்தனை நேரடியாக அல்லது புலன்களால் கண்ட உண்மைகளையன்றி வேறெதனையும் கவனத்தில்கொள்ளாத தத்துவ சிந்தனையாக வலுப்பெற்று வளர்ச்சியடைந்திருந்தது. அதாவது அறியப்படாத பிரபஞ்ச இரகசியங்களைத் தேடி அறிந்துகொள்வதில் இத்தத்துவம் கவனம் செலுத்தவில்லை (சண்முகலிங்கன், 2008:08). குறிப்பாக விஞ்ஞானக் கோட்பாடுகள் யாவும் அவதானிக்கப்பட்ட உண்மைகளினூடாகவே அமையவேண்டும் என்பது இதன் அடிப்படைச் சித்தாந்தமாகும். இதுவே, ஏர்னஸ்ற் மஹ் (Ernest Mach) அனுபவத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனைகளை விஞ்ஞானத்திலிருந்து நீக்கி விஞ்ஞானத்தினை ஒருங்கிணைந்த நிலைக்குட்படுத்துவதே எனது நோக்கம் எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமுமாகும் (ஞானகுமாரன், 2003:185).

விஞ்ஞானத்தின் படிநிலை வளர்ச்சியில் ஆரம்பகாலச் சிந்தனையாளர்கள் புலன்சார் அனுபவ முறைகளைப் பயன்படுத்தி வானியல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய பல உண்மைகளை எதிர்வுகூறியிருந்தனர். இதில் கிரேக்கர்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவர்கள் பிறவியிலேயே அவதானத் திறனுள்ளவர்களாக விளங்கியிருந்தனர் என்பதற்கு வானியலில் மேற்கொண்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டுக்களாகும் (அனஸ், 2006:15). குறிப்பாக மேலைத்தேய மெய்யியலின் தந்தை என்றழைக்கப்படும் தேலீஸ், அவதானம்சார் முறைகளை அடிப்படையாகக்கொண்டு கிரகணம் தொடர்பான எதிர்வுகூறல்களை வெளிப்படுத்தியிருந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக, கி.மு. 585, மே மாதம் 28ம் திகதியன்று இரவானது பகலின் மீது படையெடுத்துவரும், சந்திரனானது சூரியனுக்கு முன்புறமாக வந்து நிற்கும். சூரிய ஒளி முழுவதுமே சிறிது நேரம் மறைக்கப்பட்டுவிடும்" என எதிர்வுகூறியமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும் (ஆர்தர், 2012:37).

பின்னாளில் புலனறிவாதச் சிந்தனையின் அடிப்படைகளை உருவாக்கிய முறையியற் சிந்தனையாளர்களில் பிரான்சிஸ் பேக்கனும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவரின் புலனுணர்வுத் தத்துவம் அனுபவமுதல்வாதச் சிந்தனைப் பள்ளியின் தோற்றுவாய்க்கு அடிப்படையாக அமைந்திருந்தது. பேக்கனுடைய இம் முறையியல் பற்றிய சிந்தனைகளே இன்றைய நவீன விஞ்ஞான முறையியலின் வளர்ச்சிக்கும் அறிவைக் கட்டமைப்பதற்கும் ஆதாரமாக விளங்குகின்றன எனக் கூறுவர்.

குறிப்பாக, விஞ்ஞான முறையியல் வளர்ச்சியில் அரிஸ்ரோட்டிலினால் முன்வைக்கப்பட்ட உய்த்தறி முறைக்கு எதிராகப் பிரான்சிஸ் பேக்கனால் தொகுத்தறி

முறை அறிமுகப்படுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனால் இவரை "தொகுத்தறி முறையின் தந்தை" என்றழைப்பர். இம்முறை எமது அனுபவத்திற்குட்பட்ட தரவுகளைத் தொகுத்து முடிவினை அனுமானிப்பதால் இது அனுபவ முறையைப் பெற்றுத்தரும் இயற்கை முறையியலாக விளங்குகின்றது என்றும் கூறிக்கொள்வர். பேக்கனைத் தொடர்ந்து வந்த பல சிந்தனையாளர்கள் குறிப்பாக கலிலியோ, காண்ட் போன்றோர்கள் தமது ஆய்வுகளில் இம்முறையியற் சிந்தனையைப் பயன்படுத்தியிருந்தமையும் அறியத்தக்கது. பிரென்சுப் பாதிரியாரான சைமன் என்பவர், "மனித அறிவு புலனறிவுவாதச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதோடு விஞ்ஞானங்கள் புலனுக்குட்படும் தகவல்களிலிருந்து ஆய்வினைத் தொடங்க வேண்டும்" என வலியுறுத்தியிருந்தமையும் (முத்துமோகன், 2000:85) இங்கு எடுத்துக்காட்டத்தக்கதாகும்.

மேற்குறித்த படிநிலையான வளர்ச்சியைத் தொடர்ந்து சமூக விஞ்ஞானங்களில் புலனறிவாதச் சிந்தனையைப் புகுத்திய மூலகர்த்தா பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு மெய்யியற் சிந்தனையாளரான அகஸ்ட்டி கொம்டே (*Auguste Comte*) ஆவார். பின்னர் இவரைத் தொடர்ந்து பல சிந்தனையாளர்களால் குறிப்பாக எமிலி டொர்க்கீம் (*Emile Durkhiem*), மக்ஸ் வெபர் (*Max Weber*) போன்றோர்கள் தமது எழுத்துக்களிலும் ஆய்வுகளிலும் புலனறிவாதச் சிந்தனையைப் பயன்படுத்தியிருந்தனர்.

புலனறிவாதம் பற்றிக் குறிப்பிடும் கொம்டே, இச்சிந்தனை சமூகத்தினைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆய்வு முறையியலாக விளங்குகின்றதோடு (*Positivism as a methodology for the study of society*) ஓர் அதிகாரம் மிக்க சமூகவியல்சார் முறையாக (*Powerful sociological method*) விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும் (*Ishfaq Majeed, 2019*) என வலியுறுத்தியிருந்தார்.

கொம்டே, மனித சமூகம் புலக்காட்சி அடிப்படையிலான விஞ்ஞான யுகம் (*Scientific Era*) ஒன்றை நோக்கி முன்னேறிக்கொண்டு செல்கின்றது எனக் கூறியதோடு பௌதிகம், இரசாயனம், வானியல், உயிரியல் போன்ற துறைகளைப் புலக்காட்சியை அடிப்படையாகக்கொண்டே வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் விதந்துரைத்தார். இதன்படி உலக வரலாறு தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட கொம்டே பின்வரும் மூன்று யுகங்களாகப் பாகுபடுத்தி விளக்கியிருந்தார்.

1. இறையியல் யுகம் (*Stage of Theology*) - இது மிகப் பழமையான காலம். இறையியல் யுகத்தில் மனிதர்கள் உலகையும் வாழ்க்கையையும் இயற்கையைக் கடந்த சக்திகளால் விளக்கியிருந்தனர். இயற்கை சக்திகளுக்கு இறைநிலை கொடுத்து வழிபடும் மரபு தோற்றம் பெறலாயிற்று. அதாவது காற்றுக்கு ஒரு தெய்வம், மழைக்கு ஒரு தெய்வம், இயற்கை ஒழுங்கிற்கு இன்னொரு தெய்வமாக வழிபட்டனர். இவற்றின் விளைவாகவே பல தெய்வக் கோட்பாடு எழுச்சிபெற்றது. மேற்குறித்த கருத்தியற் சிந்தனைகளினையே வேதகாலத் தத்துவங்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

மேலும் மனித அனுபவங்களும் ஆற்றல்களும் மேம்போக்கானவையாகக் காணப்பட்டதனால் மக்கள் இறைவனையும் சாத்தான்களையும் கொண்டு உலகைப் புரிந்துகொள்ளமுற்பட்டனர்.

2. பௌதிகவதீத யுகம் (*Stage of Metaphysic*) - இறையியல் யுகத்தோடு பௌதிகவதீத யுகத்திற்கு நெருங்கிய தொடர்புகள் காணப்பட்டன. புராண, இதிகாச ரீதியாக வழங்கி வந்த விளக்கங்களைத் தத்துவங்களாக்கித் தரமுற்பட்டது இக்கால யுகம். உலகம், வாழ்க்கை, சிந்தனை போன்ற அனைத்தையும் ஒருமைவாதக் (*Monism*) கருத்தியியலால் விளக்கிவிடமுடியும் என்ற சிந்தனை வலுப்பெற்றிருந்தது. இவ்வாறே பௌதிகவதீத யுகம் கழிந்தது எனலாம்.

3. புலனறிவாத யுகம் (*Stage of Positivism*) - உலகைப் பற்றிய ஒட்டு மொத்த உண்மையை அறிதல் என்ற நோக்கம் விட்டொழிக்கப்பட்டது. உலகின் தோற்றம், அழிவு, நோக்கம் போன்றவையெல்லாம் பொய்யானவை என்றும் அறியப்பட்டது. புலனறிவாத யுகத்தில் அவதானமும் பரிசோதனையும் முதன்மைபெற்று விளங்கியதோடு கோட்பாட்டு உருவாக்கமும் விஞ்ஞான எழுச்சியும் மிகவும் மேலோங்கிக் காணப்பட்டது (*Harriet Martineau, 2009:181*).

இவ்வாறு மூன்றாவது யுகப் புலனறிவாதச் சிந்தனையானது விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கோட்பாடு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியதோடு பலரது கவனத்திற்கும் உள்ளானது.

குறிப்பாக, விஞ்ஞானத்தின் அனைத்துக் கூற்றுக்களையும் கருத்தியற் சிந்தனைகளையும் புறவுலகத்தோடு தொடர்புபடுத்தி, அவை உண்மையானவையா என ஆராய்ந்து உறுதிப்படுத்துவதில் புலனறிவாதத்தின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். பிரான்சிஸ் பேக்கன், ஹியும் மற்றும் பொப்பர் முதலிய முறையியற் சிந்தனையாளர்கள் மேற்குறித்த தத்துவத்தில் இறுக்கமான நிலைப்பாடுடையவர்களாகக் காணப்பட்டனர். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த புலனறிவாதச் சிந்தனையானது பிற்பட்ட காலங்களில் பல்வேறு மாற்றங்களைக் கண்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

### தர்க்கப் புலனறிவாதத்தின் வகிபங்கு

தர்க்கப் புலனறிவாதம், அனுபவமே விஞ்ஞானத்தின் அடித்தளமாக அமையவேண்டும் என்ற கருத்தியலை அடிப்படையாகக்கொண்டு தோற்றம்பெற்றதோடு தர்க்கவியல், கணித முறைகள், மொழி அமைப்பு மற்றும் மொழிப் பகுப்பாய்வு முதலிய விடயப்பரப்புகளையும் உள்வாங்கிக்கொண்டது. அவ்வகையில், பேராசிரியர் மொறிஸ்லிக் என்பவரின் (*Mortizschlick*) தலைமையில் கணிதவியலாளர்களினதும் மெய்யியலாளர்களினதும் குழுக்கள் ஒன்றுசேர்ந்து தமது புதிய கருத்தியற் சிந்தனைகளை வெளிக்கொணரும்பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட சிந்தனைப்

பள்ளியே தர்க்கப் புலனறிவாதமாகும் (Logical Positivism). இக்குழுவில் ஏர்னஸ்ற் மஹ் (நுசநௌவ ஆயஉம), நியூரத் (Nurath), வைஸ்மன் (Weismann), கானப் (Carnap), ஹன்ஸ் (Hans), போன்ற பலர் அங்கத்துவம்வகித்தார்கள்.

தர்க்கப் புலனறிவாதிகளில் பெரும்பாலானோர் விஞ்ஞானிகளாகவும் விஞ்ஞானப் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்ததனால், இவர்களது ஆய்வுகளில் விஞ்ஞானம் மற்றும் முறையியற் சிந்தனைகளின் தாக்கம் கூடுதலான செல்வாக்கைப்பெற்றிருந்தது. இச்சிந்தனைப் பள்ளி மேலும் வலுப்பெறுவதற்கு அக்குழுவைச்சாராத ஆனால் புலனறிவாதச் சிந்தனையை முதன்மைப்படுத்திய சிந்தனையாளர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவர்களுள் பிரான்சிஸ் பேக்கன், டேவிற் ஹியூம், ஜோன் லொக், பேர்ட்ரண்ட் ரஸல், விக்கென்ஸ்டைன் போன்றோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பேக்கன், லொக் முதலிய சிந்தனையாளர்கள் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் தோற்றுவித்த புலனுணர்வுச் சிந்தனையை அளவையியல், கணித முறைகளை அடிப்படையாகக்கொண்டு புதிய நோக்கில் அணுகமுற்பட்டனர்.

தர்க்கப் புலனறிவாதம் என்பது தர்க்கத்தினையும், புலனறிவினையும் அடிப்படையாகக்கொண்டது. இதன் கருத்து அனுபவம் சார்ந்ததாகும். அதாவது காட்சிக்குட்பட்டவை மட்டுமே ஏற்கக்கூடிய உண்மைகளாகும். மாறாகக் காட்சிக்கு அப்பாற்பட்டவையும் அவை தொடர்பான கருத்துக்களும் மனிதனை மனிதன் ஏமாற்றவும், அச்சுறுத்தவும் உருவாக்கப்பட்ட கற்பனைகளாகும்க மனித அறிவின் பெரும்பாலான பகுதிகள் அனுபவம் சார்ந்தவையாக இருக்கவேண்டும் எனக் கடுமையாக தர்க்கப் புலனறிவாதிகள் வலியுறுத்தியிருந்தனர். இதனால் இவர்கள், விஞ்ஞானங்களை முறையாக ஒழுங்கமைத்தல், புதிய அடித்தளத்தினை வழங்குதல், பௌதிகவதீதச் சிந்தனைகளை மெய்யியலிலிருந்து நீக்குதல் போன்ற முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டனர்.

ஏனெனில், மெய்யியல் ஆய்விற்குட்படுத்துகின்ற முதன்மையான விடயப்பரப்புக்களில் பௌதிகவதீதச் சிந்தனையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். பௌதிகவதீதச் சிந்தனையானது புலனுணர்வு கடந்த, காட்சி கடந்த, அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களையே எடுத்தியம்புகிறது. உண்மையில், உலக அனுபவத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்ற மனிதனது ஆர்வம் புலன் கடந்தும் சிந்தித்தது, அதன் விளைவாகத் தோற்றம் பெற்றதே பௌதிகவதீதச் சிந்தனையாகும் (ஜமாஹிர், 2010:22). இருந்தும், இச்சிந்தனையினால் மெய்யியலுக்கோ விஞ்ஞானத்திற்கோ எவ்விதமான பயன்பாடும் இல்லை என்பதே தர்க்கப் புலனறிவாதிகளின் முடிந்த முடிவாகும். எனவேதான், புலனறிவிற்கு முதன்மையளிக்கும் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையாளர்கள் அனுபவம்சாரா பௌதிகவதீதச் சிந்தனை முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட வேண்டும் என விதந்துரைத்தனர் (Ishfaq Majeed, 2019).

இதனையே பேக்கன், உலகை விளக்க அளவையியல் மற்றும் கணித முறைகள் பயன்படுத்தப்பட வேண்டுமே ஒழிய கற்பனையோ, மத நம்பிக்கைகளோ அல்ல எனக் குறிப்பிட்டு நமது புலன்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களைப் பயன்படுத்தக்கூடாது என வலியுறுத்தியிருந்தார். மேலும் அவர், புறவுலகைப் புலன்களால் அனுபவிக்கும்போதே அறிவை நாம் பெற்றுக்கொள்கிறோம்க மனிதனின் அறிவுத் தேடலுக்கும் தத்துவச் சிந்தனைக்கும் இயற்கை முதன்மையான களமாக அமைகின்றதுக இயற்கைப் பொருட்களை ஆராய்ந்து அவற்றின் பண்புகளின் செயற்பாடுகளைக் கண்காணித்து வகைப்படுத்துவதன் மூலம் அறிவு ஆரம்பமாகிறது என்ற கருத்துக்களையும் முன்மொழிந்திருந்தார். பேக்கனின் மேற்குறித்த கருத்தியல் "எது அறிவார்ந்ததோ அது நடைமுறையில் இருக்கும்க எது நடைமுறையில் இருக்கிறதோ அது அறிவார்ந்ததாகும்" (முத்துமோகன், 2000:78) என்ற ஹெகலின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுப்பதாக அமைகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டில் பௌதிகவதீதச் சிந்தனையைத் தீவிரமான விமர்சனத்திற்குள்ளாக்கியவர்களில் அனுபவமுதல்வாதியான டேவிற் ஹியுமும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் தமது "வுாந ஐஙெரசைல ஊழஉநசஙைெ ா்ரஅயெ ருனெநசளவயனெைெ" (1748) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நாம் நூல் நிலையங்களுக்குச் சென்றுபார்க்கும்போது அங்கு பௌதிகவதீதம் சார் அல்லது சமயம் சார்ந்த விடயங்கள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றை எடுத்துப் படிக்கும்போது குழப்பங்கள் ஏற்படுகின்றதே ஒழிய தெளிவு ஏற்படுவதில்லை. எனவே, குழப்பத்தை ஏற்படுத்தும் அத்தகைய விடயங்களைத் தீயிலிட்டுக் கொழுத்தவேண்டும் (David Hume, 1748: XIV)". மேலும், ஹியூம் தமது 'Dialogues Concerning Natural Religion' (1779) என்ற நூலில்: "கடிகாரத்திற்கு அதனை உருவாக்கிய ஒருவன் இருப்பதுபோல உலகத்தைப் படைத்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் எனக் காரணகாரிய ரீதியில் எடுத்துரைப்பது ஏற்புடையதல்ல (கிருஸ்ணராஜா, 2011:84)". உண்மையில் கடிகாரம் ஒருவரால் உருவாக்கப்பட்டதென்பது அனுபவ உண்மையாகும். மாறாக இவ்வுலகத்தை ஒருவர் படைத்தார் என்பது அனுபவத்திற்கு அப்பாற்பட்டதொன்றாகும். இதன் உண்மை, பொய்யினை உரிய முறைகளைக்கொண்டு நிறுவமுடியாது என்பது ஹியுமின் கருத்தினது உட்கிடையாகும். இதனாலேயேதான் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை மெய்யியலிருந்து நிராகரிக்க வேண்டும் என்ற ஹியுமின் அனுபவமுதல்வாதச் சிந்தனைகள் வியன்னா வட்டத்தினரைப் பெரிதும் பாதித்திருந்தன.

பௌதிகவதீத நிராகரிப்புக் குறித்த மொழி மெய்யியலாளரான ரஸலின் கருத்துக்களும் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தன. ரஸல், "ஒரு சோதனைக்கு மிக அடிப்படையானது எனக் கருதப்படும் எடுப்பினை உண்மையென ஏற்பதற்கு அவ்வெடுப்பு புறத்தேயுள்ள நேர்வுடன் பொருந்துதல் வேண்டும்" என்றார். அதாவது ஓர் எடுப்பு யதார்த்தத்தின் படமாக விளங்கவேண்டும் என்பது அவரின் நிலைப்பாடாகும்.

மேற்குறித்த ரஸலின் அடிப்படையான விதிக்கு உடன்பாடற்றவைகளாகப் பௌதிகவதீத எடுப்புக்கள் பல விளங்குகின்றன ("இவ்வுலகு இறைவனால் படைக்கப்பட்டது" என்ற கூற்றினை புறத்தேயுள்ள நேர்வுகளுடன் பொருத்திப்பார்த்து அதன் உண்மை மற்றும் பொய்யினை எவ்வாறு அளவிடுவது? உண்மையில் அது அசாத்தியமற்றதொன்றாகும்). இதனையே அவர் தமது "சமயமும் விஞ்ஞானமும்" (*Religion and Science - 1961*) என்ற நூலில் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்: "பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட மதங்கள் பற்றிய நம்பிக்கையானது விஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டதுக அவற்றின் உண்மை, பொய்யினை நிர்ணயிப்பது அசாத்தியமாகும்."

ரஸலைத் தொடர்ந்து தர்க்கப் புலனறிவாதச் சிந்தனைகள் எழுச்சிபெறுவதற்கு விக்கென்ஸ்டைனின் கருத்துக்களும் அடிப்படையாக விளங்கின. குறிப்பாக, இவர் மெய்யியலில் காணப்படுகின்ற பெரும்பாலான எடுப்புகளும் கேள்விகளும் பிழையானவையும் அர்த்தமற்றவையுமாகும்க இவ் விடயங்கள் தொடர்பாக எமக்கு எவ்வித விவாதங்களும் மேற்கொள்ளமுடியாது, எனவே பேசமுடியாதவை பற்றி அமைதியாக இருக்கவேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடாகும் (*Wittgenstein, 1922:4.0031*).

ஆக, பௌதிகவதீதம்சார் எடுப்புக்கள் அல்லது கூற்றுக்கள் வேடிக்கைக்குரியனவாக விளங்குகின்றன என்பது விக்கென்ஸ்டைனின் நிலைப்பாடாகும். எனவே, அவற்றை உபயோகமற்றவை எனக்கூறி நிராகரிக்கமுற்படுகின்றார். மேலும், ஓர் எடுப்பு உபயோகமுள்ளது எனின் அது புலன் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அவ்வெடுப்பானது சாதாரண அவதானிப்பின் மூலம் சரியானது அன்றில் பிழையானது என நிரூபிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் பௌதிகவதீதம்சார் எடுப்புக்கள் மேற்குறித்த அடிப்படை விதியை மீறுகின்றது. இதனடிப்படையிலேயே விக்கென்ஸ்டைன் எடுப்புக்களை பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கியிருந்தார் (*Herbert Herring, 1977:62*).

1. அர்த்தமுள்ள கூற்று (*Meaning Statement*)
2. அர்த்தமற்ற கூற்று (*Meaningless Statement*)
3. வேடிக்கைக் கூற்று (*Amusing Statement*)

இங்கு அர்த்தமுள்ள கூற்று என்பது புலன் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. வெறுமனவே சாதாரண அவதானிப்புக்களால் அதன் உண்மை அல்லது பொய்யை அறிந்துகொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக, "இப்போது மழை பெய்கின்றது" இதுவொரு அர்த்தமுள்ள கூற்றாகும். இவற்றின் உண்மை தரப்பட்டதொரு சூழலில் இருந்தே பெறப்பட்டதாகும். அதாவது, மழை பெய்தால் உண்மையாகவும் அவ்வாறு நிகழாவிட்டால் பொய்யாகவும் எடுத்துக்கொள்ளப்படும்.

மாறாக, எந்தவொரு வசனமும் எவ்வித அர்த்தத்தையும் தராவிடின் அது அர்த்தமற்ற கூற்றாகக்கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, "வடையும், முறுக்கும்

திருவிழாப் பார்க்கக் கோயிலுக்குச் சென்றன." என்கிற வாக்கியத்தில் எவ்விதமான இலக்கணத் தவறுகளுமில்லை, ஆனால் இது எவ்வித உண்மையையும் தருவதில்லை. இதனால் மேற்குறித்த கூற்றானது அர்த்தமற்றதாகக் கணிக்கப்படுகின்றது.

அதேசமயம், பௌதிகவதீதம் சார் எண்ணக்கருக்களை வெளிப்படுத்தும் எடுப்புக்கள் அல்லது கூற்றுக்கள் வேடிக்கைக் கூற்றுக்கள் என்றழைக்கப்படுகின்றன. ஏனெனில், அவை அனுபவத்திற்கு அப்பாற்பட்டவையே அன்றி உட்பட்டவையல்ல. எடுத்துக்காட்டாக, "இவ்வுலகு இறைவனால் படைக்கப்பட்டது" என்ற கூற்றை அனுபவத்தில் தெளிவாகச் சோதித்து அறியமுடியாது. இதனையே, விண்வெளியில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட முதல் விண்வெளிப் பயணியான யூரி ககாரின் விண்வெளியைச் சுற்றிப்பார்த்த பின் "விண்ணின் எவ்விடத்தும் கடவுளைக் காணவில்லை" எனக் கூறியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும் (கிருஸ்ணராஜா, 2011:08). எனவே, இக்கூற்று வேடிக்கைக் கூற்றேயல்லாது வேறெதுவுமில்லை என்பதாகும்.

எனவேதான், கடவுளின் இருப்புக் குறித்த அதீதம்சார் எண்ணக்கருக்களை அனுபவச்சோதனை முறைகளை அடிப்படையாகக்கொண்டு சோதித்து அறியமுடியாது என்பது மேற்குறித்த சிந்தனைகளிலிருந்து பெறப்படும் உண்மையாகும்.

தர்க்கப் புலனறிவாதிகள் தமது சிந்தனைகளை விரிவுபடுத்தும் நோக்கில் பல ஆய்வு மாநாடுகளை ஒழுங்குசெய்து புதிய கருத்துக்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டிருந்தனர். இதன்படி 1930ஆம் ஆண்டு ஒக்ஸ்பேர்டில் நடைபெற்ற சர்வதேச மெய்யியல் காங்கிரஸ் கூட்டத்தில் "மெய்யியலின் எதிர்காலம்" (*The Future of Philosophy*) என்ற தலைப்பில் கருத்துரையை வழங்கிய மொறிஸ்லிக், இதுவரை காலமும் ஆராயப்பட்டும் பின் பல்வேறுபட்ட நிரூபணங்களினூடாக நிலைநிறுத்தப்பட்டும் வந்த பௌதிகவதீதச் சிந்தனைகள் மற்றும் உள்பொருள் நேர்வு குறித்த விடயங்கள் யாவும் அர்த்தமற்றவைகள் எனப் பிரகடனப்படுத்தி அவற்றினை மெய்யியலிருந்து நிராகரித்துவிட வேண்டும் என விதந்துரைத்தார்.

எனவே, மேற்குறித்த மொறிஸ்லிக்கின் கருத்தினை ஆழ்ந்து நோக்கின் மெய்யியலின் ஆய்வுப்பொருள் என்பது அனுபவ விஞ்ஞானமாக அமையவேண்டும் என்ற கருத்துப் புலனாகிறது. உண்மையில் விஞ்ஞான அறிவில் உள்ளடங்கிய கூற்றுக்கள் யாவும் அர்த்தமுடையவையாக அமையவேண்டும். இதன்படி அர்த்தமுடைய வாக்கியங்களே அறிகைப் பயன்பாடுடையவையாக விளங்குகின்றன. இவ்வாக்கியங்கள் ஒன்றில் பகுப்பாய்வாக அல்லது தொகுப்பாய்வாகக் காணப்படலாம்.

இவ்வாறாக, விஞ்ஞான மெய்யியல் வளர்ச்சியில் அனுபவம்சார் முறைகளை அடிப்படையாகக்கொண்டு அனைத்துக் கூற்றுக்களையும் வாய்ப்புப்பார்த்து அதன் உண்மைத்தன்மையினை அறிந்துகொள்வதில் தர்க்கப் புலனறிவாதிகளின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு இவர்கள் பாரம்பரிய அறிவாராய்ச்சியியல்

முறைகளை மாற்றத்திற்குட்படுத்தி யாவற்றினையும் புதிய பரிணாமத்துடன் நோக்கவேண்டும் எனவும் விதந்துரைத்தனர்.

**வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு**

தர்க்கப் புலனறிவாதிகள் பௌதிகவதீதம்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் "வாய்ப்புப்பார்த்தல்" (Verification) கோட்பாட்டினை உருவாக்கியிருந்தனர். வாய்ப்புப்பார்க்கும் கருத்தியற் சிந்தனையானது ஓர் எடுப்பின் அல்லது வாக்கியத்தின் உண்மை அல்லது பொய்யை அறிந்துகொள்ளும் கட்டளைக்கல்லாக நிர்ணயிக்கப்பட்டது. இச்சிந்தனை புலன்சார் அனுபவத்துடன் இடம்பெறவேண்டும் என்பதே நிபந்தனையாகும். இதன்படி விக்கென்ஸ்டைனின் "வுசயஉவயவரள டுழபைஉழ‑ாடைழளழிாஉைரள" என்ற நூலானது தர்க்கப் புலனறிவாதத்திற்குப் புதியதொரு வரைவிலக்கணத்தை அளித்திருந்தது. அதாவது விஞ்ஞான எடுப்புக்களின் அர்த்தத்தை ஆராய்கின்ற மற்றும் தெளிவாக்குகின்ற ஒரு செயற்பாடே மெய்யியலாகும் (ஞானகுமாரன், 2012:193). மேற்குறிப்பிட்ட கட்டளைக்கல்லிற்குட்படாத விடயங்கள் யாவும் அர்த்தமற்றதாகக் கணிக்கப்பட்டன. ஆக, பௌதிகவதீத எண்ணக்கருக்களை "வாய்ப்புப்பார்த்தல்" கோட்பாட்டிற்குட்படுத்தி உண்மை, பொய் அறியமுடியாததனால் அவற்றை நிராகரிக்க வேண்டும் என்பதே மேற்குறித்த சிந்தனையின் அடிப்படை நோக்கமாகும்.

தர்க்கப் புலனறிவாதிகள் விஞ்ஞானத்திற்குப் புதிய சிந்தனையை வழங்கல், பௌதிகவதீதச் சிந்தனையை மெய்யியலிலிருந்து நீக்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டனர். குறிப்பாக, புலனறிவிற்கு முதன்மையளிக்கும் இச்சிந்தனையாளர்கள் புலனறிவிற்கு அப்பாற்பட்ட விடயங்களை நிராகரித்து, மெய்யியலை புதிய நோக்கில் அணுகமுற்பட்டனர். இதனாலேயே ஏங்கெல்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் இயக்கவியலுக்கு எதிரான இந்தக் கோட்பாடு "இயக்க மறுப்பு இயல்" எனத் தெளிவுபடுத்தியிருந்தனர் (பெரியசாமி, 2010:116).

விஞ்ஞான முறையியல் வளர்ச்சியில் பௌதிகவதீத நிராகரிப்பினைத் தீவிரப்படுத்திய சிந்தனையாளர்களுள் கார்ள் பொப்பர் குறிப்பிடத்தக்கவராவார். இவர் விஞ்ஞானத்தையும் (Science) விஞ்ஞானமல்லாதவற்றையும் (Non Science) வேறுபடுத்தும் கட்டளைக்கல்லாகப் பொய்ப்பித்தல் கோட்பாட்டை (Falsification Theory) முன்வைத்தார். இக்கோட்பாட்டின் பிரகாரம் அனுபவச் சோதனையின் மூலம் சோதித்து அறியக்கூடியவை விஞ்ஞானம் என்றும், சோதித்து அறியமுடியாதவை விஞ்ஞானம் அல்லாதன எனவும் குறிப்பிட்டார். குறிப்பாக, பௌதிகவதீதச் சிந்தனைகள் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயத்துவங்கள் பற்றியே எடுத்துரைக்கின்றன. எனவே, இவை குறித்து எந்தவொரு விளக்கமும் தரமுடியாது. இதனாலேயே பொப்பர் போன்ற முறையியற் சிந்தனையாளர்கள் விஞ்ஞானம் என்பது அனுபவத்தில் சோதித்து அறியப்பட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தனர். இந்நிபந்தனைக்குட்படாத எண்ணக்கருக்கள் விஞ்ஞானமல்ல

என நிரூபிக்கப்படும் என்கிறார், பொப்பர் (முயசட ீழிநசஇ 1962:13) . இதன்படி பௌதிகவதீதச் சிந்தனையானது பொப்பரின் நோக்கில் விஞ்ஞானமல்லாத துறைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமையும் இங்கு கவனத்தில்கொள்ளத்தக்கதாகும்.

மொறிஸ்லிக் தமது "புலனறிவாதமும் யதார்த்தமும்" என்ற கட்டுரையில், வாக்கியங்களினதும் வினாக்களினதும் அர்த்தத்தைத் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்துவதே மெய்யியலின் சிறப்பியல்பான பணியாகும் எனக் குறிப்பிட்டார். இந்நிலையில் ஓர் எடுப்பை வாய்ப்புப்பார்ப்பதற்கு அது உண்மையானதா பொய்யானதா எனக் கண்டறிதல் இன்றியமையாததொன்றாகும். மாறாக அதன் உண்மை, பொய்யைக் கண்டறியத் தவறுவது என்பது ஓர் எடுப்பின் அர்த்தத்தைக் கண்டறியத் தவறுவதாகும். இதன்படி எத்தகைய அனுபவம் ஓர் எடுப்பை உண்மையாக்குகிறதோ அதுவே அவ்வெடுப்பின் அர்த்தமாகும். ஆனால் பௌதிகவதீத எடுப்புக்கள் அல்லது கூற்றுக்கள் மேற்குறித்த கட்டமைப்பிலிருந்து முற்றிலும் விடுபட்டவையாக காணப்படுகின்றன என்பது இதன்மூலம் கண்டறியப்படும் உண்மையாகும்.

மேலும் தர்க்கப் புலனறிவாதிகள், பௌதிகவதீதச் சிந்தனைகளை மெய்யியலிலிருந்து விலக்குவது மட்டுமன்றி அவை குறித்த நிராகரிப்பினைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்கு நியாயத்தொடை வாதம் (ளுலடடழபளைவைை ளுவயவநஅநவெ) ஒன்றினையும் உருவாக்கியிருந்தமை கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். அதாவது,

எல்லாப் பௌதிகவதீதக் கூற்றுக்களும் அனுபவத்தில் வாய்ப்புப்பார்க்கமுடியாது

எல்லா வாய்ப்புப்பார்க்கமுடியாத கூற்றுக்களும் அர்த்தமற்றவை

ஆகவே, எல்லாப் பௌதிகவதீதக் கூற்றுக்களும் அர்த்தமற்றவை (அனஸ், 2006:206).

ஆக, பௌதிகவதீதம் உறுதிப்படுத்தும் மெய்ப்பொருள் அல்லது உண்மைப்பொருள் குறித்த எண்ணக்கருக்கள் யாவும் உலகு சம்பந்தப்பட்டவை அல்ல, அப்பாலானதொரு உலகு பற்றியதாகும். அவை காலத்திற்கும் இடத்திற்கும் உடன்படாதவையாகும். இவை குறித்த ஆராய்ச்சிகள் அவசியமற்றவையும் பயனற்றவையும் என்பது ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது.

எனவேதான், பௌதிகவதீத எண்ணக்கருக்களைச் சோதனை முறைகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றின் உண்மை, பொய்யினை அறிந்துகொள்ளமுடியாததோடு மட்டுமன்றி வாய்ப்புப்பார்த்தல் விதிக்கமையவும் அவற்றின் உண்மைத்தன்மையினை நிரூபித்துக்கொள்ளமுடியாதுள்ளது என்பதும் இதன்மூலம் வெளிக்கொணரும் உண்மையாகும். இதனாலேயேதான் ஹியூம் போன்ற சிந்தனையாளர்கள், பிரபஞ்ச ஒழுங்கிற்கு ஒரு காரணம் அவசியமானது என அனுமானித்தாலும் அதற்கான புலன் தரவுகள் எதுவுமில்லை என வலியுறுத்தியிருந்தனர். யூலியன் ஹக்ஸ்லி (துரடயைெ ர்ரஒடநல) என்ற அறிஞர் "இறைதூதற்ற மதம்" (சுநடபைழைெ றவைாழரவ சுநஎநடயவழைெ) என்ற நூ

லில் விஞ்ஞான யுகத்தில் இறை நம்பிக்கை அவசியமற்றது என்று குறிப்பிட்டிருந்தமையும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கதாகும் (சுக்ரி, 1994:14).

**விமர்சன ரீதியான அணுகுமுறை**

வரலாற்று நோக்கில் பல சிந்தனையாளர்களால் பௌதிகவதீதம்சார் எண்ணக்கருக்கள் விமர்சிக்கப்பட்டு பின் நிராகரிப்புக்குள்ளாகி இருந்தபோதிலும் அவ் விமர்சனம் மற்றும் நிராகரிப்பு தொடர்பான கருத்தியல்கள் எத்தகைய பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றன என்ற சிக்கல் எழாமலில்லை. குறிப்பாக, பௌதிகவதீதச் சிந்தனையை ஹியும், பொப்பர் மற்றும் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையாளர்கள் போன்றோர் நிராகரிப்பதனால் கடவுள், ஆன்மா மற்றும் மறுவாழ்வு பற்றிய எண்ணக்கருக்களையும் ஒழுக்கவியல்சார் சிந்தனைகள், எடுப்புக்களினையும் இனக்குறைப்புச் செய்யமுற்படுகின்றனர்.

மெய்யியல் வரலாற்றில் பௌதிகவதீத எண்ணக்கருக்களைத் தீவிரமாக ஐயத்திற்குட்படுத்தி அத்தகைய எண்ணக்கருக்கள் சார்ந்த நூல்களை தீயிலிடல் வேண்டும் என ஹியும் தமது *'The Inquiry Concerning Human Understanding'* என்ற நூலில் தெரிவித்தமை அதற்குத் தக்கசான்றாகும். எனவேதான் கடவுள், ஆன்மா, மறுவாழ்வு தொடர்பான கருத்தியல்கள் அனுபவத்தைக் கடந்த மற்றும் வாய்ப்புப் பார்க்க முடியாதவையாக விளங்குகின்றன என்பது மேற்குறித்த சிந்தனையாளர்களின் கருத்துக்களிலிருந்து விளங்கிக்கொள்ளும் உண்மையாகும்.

பௌதிகவதீதம்சார் கருத்தியல்களை ஆய்விற்குட்படுத்திய இமானுவெல் காண்ட் ஹியுமினைப்போல் பௌதிகவதீதம்சார் எண்ணக்கருக்கள் குறித்து தீவிரமாகச் செயற்படாது, "பௌதிகவதீதம் என்பது எமது சாதாரண அறிவினால் அறியப்படமுடியாது" எனக் குறிப்பிட்டிருந்தார் (Norman Kemp Smith, 1961:56). இருந்தும் காண்ட், "ஹியுமினால்தான் நான் விழிப்படைந்தேன்" எனக் கூறியமையும் இங்கு சிந்திக்கத்தக்கதாகும். உண்மையில் கடவுள், ஆன்மா, மறுவாழ்வு, பரலோகம் ஆகியவை மனித அனுபவத்திற்கு அப்பாற்பட்டு விளங்குகின்றமையால் அவை குறித்து எவ்விதத் தர்க்கமும் செய்யவியலாது. அத்தோடு பௌதிகவதீதம் பற்றிய அடிப்படைக் கேள்விகள் தொடர்பான விடயங்களைக் கோட்பாட்டறிவிற்குள் கொண்டுவரும்போது அவை வெறும் ஆதாரமற்ற, அறியமுடியாதவற்றை அறிந்துகொள்வது போன்ற பாவனையை ஒத்தது எனக் காண்ட் தெளிவுபடுத்தினார்.

பௌதிகவதீதம் தொடர்பான எண்ணக்கருக்களைப் பகுப்பாய்விற்குட்படுத்திய விக்கென்ஸ்டைன் போன்ற சிந்தனையாளர்கள் அத்தகைய எண்ணக்கருக்களை வேடிக்கைக் கூற்றுக்களாகப் புறம்தள்ளியமையும் இங்கு கவனத்தில்கொள்ளத்தக்கது. இதனையே விக்கென்ஸ்டைன் தமது "*Tractatus Logico Philosophicus*' என்ற நூலில் பேசமுடியாதவை பற்றி அமைதியாக இருக்கவேண்டும் என்கிறார். எவ்வாறாயினும் விக்கென்ஸ்டைனின் மேற்குறித்த இந்நிலைப்பாடு எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதும் ஆய்விற்குரியதொன்றாகும்.

பௌதிகவதீத நிராகரிப்புக்குறித்து தர்க்கப் புலனறிவாதிகள் மற்றும் தர்க்கப் புலனறிவாதிகளல்லாத சிந்தனையாளர்களின் கருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய துறைசார் சிந்தனைகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது, அவை எந்தளவிற்கு ஏற்புடையதாக விளங்குகின்றன என்பது ஆய்விற்குரிய விடயமாகும். இந்நிலையில் நியமங்கூறும் விஞ்ஞானங்களான அழகியல், ஒழுக்கவியல் இவற்றைவிட சமயம் சார்ந்த துறைகளில் பௌதிகம் மற்றும் பௌதிகவதீதம்சார் எண்ணக்கருக்கள் சொற்றொடர் மற்றும் வாக்கியங்களாக அதிகம் பயன்படுத்தப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு அத்துறையில் பயன்படுத்தும் மொழிசார் கூற்றுக்கள் அல்லது எண்ணக்கருக்கள் பிற துறைகளுக்கும் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இதனால் குறித்த துறையோடு தொடர்புடைய எண்ணக்கருக்கள் அத்துறைசார் நோக்கில் அர்த்தமுடையதாகவும் இன்னொரு துறையில் பயன்படுத்தும்போது அர்த்தமற்றதாகவும் கொள்ளப்படலாம்.

எடுத்துக்காட்டாக, அழகியற் சிந்தனையாளர்கள் கலை - இரசனையியல் தொடர்பான பல எண்ணக்கருக்களைப் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். அவ் எண்ணக்கருக்கள்சார் கலைச்சொற்கள், அவை பற்றிய வரைவிலக்கணங்கள், விளக்கங்கள் என்பவை கருத்துருவ மொழிகளால் (*Abstract Languages*) கட்டமைக்கப்பட்டுள்ளமையைக் கண்டுகொள்ளலாம். அதாவது, அழகியலில் அழகு - இரசனை, ஒழுக்கவியலில் உண்மை - பொய், நன்மை - தீமை, உளவியலில் நனவிலி - கனவு". போன்ற எண்ணக்கருக்கள் சாதாரண மொழிப் பயன்பாட்டில், ஒப்பீட்டளவில் கணிசமான அளவு கருத்துருவ மொழிக்கூறுகள் புழக்கத்தில் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எடுத்துக்காட்டாக, "வெண்ணிலா வெளியே வருவாயா", "இளைய நிலா பொழிகிறது", "மனம் என்னும் மேடையில் முகமொன்று ஆடுது" (அழகியல் மற்றும் இரசனையியல்சார் கூற்றுக்கள்), "நன்மை செய்தால் சுவர்க்கம் கிட்டும்", "நனவிலி மனம் மிகவும் விசாலமானது" போன்ற இன்னோரன்ன பல மொழிக் கூறுகளைக் குறித்த துறைசார் எண்ணக்கருக்களின் அடிப்படையிலேயே விளக்கி மற்றும் விபரித்துக் கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றின் அர்த்தம் சாதாரண விடயம்போல் தென்பட்டாலும் இவை மேலதிக வியாக்கியானத்தினை வேண்டிநிற்கின்றன என்பதே உண்மை. மேற்குறித்த கருத்தியல்கள் பற்றி ரூடோல் கானப்பின் வார்த்தைகளில் கூறுவதாயின் முழுமையானதொன்று, நோக்கமான தொன்று, இருப்பு, சாரம், அகம், முடிவற்றது போன்ற எண்ணக்கருக்கள் யாவும் போலியானது எனக் கூறியமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும் (*Carnap, 1959:67*).

இவ்வாறாக மேற்குறித்த மொழிக்கூறுகள் வெவ்வேறு அறிவியல்சார் துறைகளின் நோக்கில் அத்துறைசார்ந்தவர்களுக்கு மிகவும் அர்த்தமுடையதாக - பயனுடையதாக விளங்கக்கூடும். இதனையே மொழியியல் அறிஞர்கள், ஒவ்வொரு மனிதரும் மொழியினால் அவரவரது மனதில் உருவாகும் தடங்களின் வழி உலகை உள்வாங்குகின்றார்கள், உணருகின்றார்கள் என்ற கருத்தியலை முன்வைத்திருந்தனர் (*Chomsky, 2006*). எனவே அத்தகைய மொழிக்கூறுகளை அர்த்தமற்றவை என

இனக்குறைப்பு செய்து நிராகரிக்கமுடியாது என்பது இங்கு எடுத்துக்காட்டத்தக்க விடயமாகும். அவ்வாறு நிராகரிப்பின் குறித்த துறைகளும் நிராகரிப்பிற்குள்ளாகும்.

சமய மெய்யியல் நோக்கில் சமய அருளாளர்கள் மற்றும் தத்துவஞானிகள் புலன்கடந்த மற்றும் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட மெய்ப்பொருள் சார்ந்த உண்மைகளை அளவைப் பிரமாணங்களின் துணைகொண்டு கருத்துருவ மொழிகளால் நிறுவியிருந்தமையும் இங்கு எடுத்துக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இதன்பேறாக மேலைத்தேச மற்றும் கீழைத்தேசத் தத்துவச் சிந்தனைகளில் ஒருமைவாத, இருமைவாத மற்றும் பன்மைவாதக் கருத்தியல்கள் தோற்றம்பெறலாயின. எடுத்துக்காட்டாக, இந்திய மெய்யியலில் சங்கரர் தமது அத்வைதச் சிந்தனையூடாக ஒருமைவாதத்தினை நிறுவியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். சங்கரரது நோக்கில் இரண்டற்றது என்பதே அடிப்படையான உண்மைப்பொருளாகும். இது ஒன்றானதும் மாறாததும் விபரிக்கமுடியாததும் எல்லையற்றதும் எங்கும் வியாபகமானதும் புலன்களுக்கு அப்பாற்பட்டதும் (பௌதிகவதீதம்) எனப் பல்வேறுபட்ட வாதங்களினூடாக எடுத்தாண்டு (ஞானகுமாரன், 2012:31) தமது ஒருமைவாதச் சிந்தனையை விளக்கியிருந்தார். சங்கரரைத் தொடந்து வந்த வேதாந்த மற்றும் சிந்தாந்தத் தத்துவவாதிகள் மட்டுமன்றி மேலைத்தேய தத்துவங்களுட்பட இருமைவாத, பன்மைவாதச் சிந்தனைகளினூடாக மெய்ப்பொருள் சார்ந்த கருத்தியல்களை (அக்குவினஸ் - ஆன்மாக்களின இறுதி இலட்சியம் இறைவனோடு இரண்டறக்கலத்தலாகும்) நிறுவியிருந்தனர்.

மேற்குறித்த சமய சிந்தனையாளர்கள், தத்துவஞானிகள் மெய்ப்பொருள் சார்ந்த உண்மைத்தன்மையினை நிறுவுவதற்குப் பயன்படுத்திய வலிமையான ஆதாரங்களில் ஒன்றாகக் காரணகாரியவாதம் விளங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இயற்கையில் உள்ள தோற்றப்பாடுகள் ஏன் நிகழுகின்றனக எவ்வாறு நிகழுகின்றன? என்பனவற்றை ஆராய்ந்து விளக்குவதே இதனடிப்படையாகும். அதாவது ஒவ்வொரு விளைவிற்கும் ஒரு காரணம் உண்டு, காரணமின்றி எதுவுமில்லை என்பதே மேற்குறித்த வாதத்தின் தாற்பரியமாகும். இதனையே அக்குவினஸ் (*Aquinas*) தமது "*Summa Theologica*" என்ற நூலில் "இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதற்கு முன்பதாக நிகழும் ஒரு நிகழ்ச்சி காரணமாக இருக்கும்" (கிருஸ்ணராஜா, 2011:81) என்றார். இதன்படி உலகில் பலவிதமான தோற்றப்பாடுகள் நடைபெறுகின்றன. அவற்றுள் ஒன்று உலக உற்பத்தியுமாகும். உலகத்திலுள்ள பொருட்கள் யாவும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தோன்றி, நிலைத்து பின்னர் அழிகின்றன. எனவேதான், உலகம் தோன்றி, நிலைபெற்று பின் ஒடுங்குகின்ற செயலானது சடப் பிரபஞ்சத்தினால் இயலாத காரியமாகும். அசேதனமான அறிவற்ற உலகம் தன்னைத்தானே இயக்கும் தன்மையற்றதால் அதனைக் காரியப்படுத்த ஒரு கர்த்தா உண்டு என இறை உண்மைக்கு கீழை மற்றும் மேலைத் தத்துவங்கள் ஆதாரம்காட்டுகின்றது.

இதனையே அரிஸ்ரோட்டில் "உலகிலுள்ள எல்லா இயக்கங்களுக்கும் மூலகாரணமாக ஓர் இயக்கி இருக்கவேண்டும்" அதனையே அவர் "இயங்காத இயக்கி" (*Unmoved Mover*) எனக் குறிப்பிடுகின்றார். அரிஸ்ரோட்டிலின் இயங்காத இயக்கி என்ற கருத்தியலை மேலும் தெளிவுபடுத்தியவர்களில் இஸ்லாமிய மெய்யியற் சிந்தனையாளரான அவிசினா (*Avicenne*) குறிப்பிடத்தக்கவராவார். இக்கருத்துநிலை பின்னர் அக்குவினஸினால் மேலும் விரிவுபடுத்தப்பட்டு இறையிருப்பிற்கு மூல ஆதாரமாகக் காரணகாரியவாதம் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காரணகாரியவாதம் குறித்து மேலைத்தேய முறையியற் சிந்தனையாளரான ஜே.எஸ்.மில் (*J.S.Mill*) "ஒருபோதும் உண்மையாக இருப்பது எப்போதுமே உண்மையாக இருக்கும் என்பதே இவ்விதியின் நோக்கமாகும்" என வலியுறுத்தியிருந்தார். அதாவது காரணமில்லாமல் உலகில் எந்தவொரு நிகழ்ச்சியும் தோன்றியதில்லை (முத்துமோகன், 2000:55). எனவேதான் இவ்வுலகத்திலுள்ள பொருட்களின் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் ஒரு காரணம் இன்றியமையாததாக விளங்குகிறது. அதுவே மெய்ப்பொருளான அல்லது பரம்பொருளான இறைவன் என இறையிருப்பை ஏற்றுநிற்கின்ற சமயங்களின் நம்பிக்கையாகும்.

மேற்குறித்த விளக்கங்களிற்கு வலுசேர்க்கும்பொருட்டு சர்வப்பள்ளி இராதாகிருஸ்ணன் போன்ற தத்துவஞானிகளின் கருத்தியலை நோக்கின் "விஞ்ஞானத்தில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலம் புதிய உண்மைகள் வெளிக்கொணரப்பட்டாலும் அவ் உண்மைகள் காலப்போக்கில் மாற்றமடைந்து புதியதொன்று தோற்றம்பெறுவதைக் காண்கின்றோம்". அளவையியல் ரீதியாக நோக்குமிடத்து விஞ்ஞான வளர்ச்சியில் பூரணமான இறுதி முடிவு என்ற கருத்திற்கு இடமேயில்லை (*Bertant Russell, 1961:14*). மாறாக மதம் மற்றும் இறையியல்சார் கருத்துக்கள் (பௌதிகவதீதம் தொடர்பான எண்ணக்கருக்கள்) உண்மைகளாக விளங்குவதோடு அதன் முடிவுகள் இறுதியானவையாகவும் முழுமையானவையாகவும் காணப்படுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும். இதனாலேயே அவர் குறிப்பாக, கீழைத்தேயத் தத்துவங்கள் "அழிவற்ற தத்துவங்களாக" விளங்குகின்றன எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகும்.

தர்க்கப் புலனறிவாதிகள் பௌதிகவதீதச் சிந்தனையை நிராகரிக்கும் நோக்கில் வாய்ப்புப்பார்க்கும் கோட்பாட்டை ஒரு கட்டளைக்கல்லாகப் பயன்படுத்தி அதன் உண்மை மற்றும் பொய்யை அளவிட்டிருந்தனர். இருந்தபோதிலும் அக்கோட்பாட்டை மூலமாகக்கொண்டு விஞ்ஞானக் கூற்றுக்களைப் பௌதிகவதீதச் சிந்தனைகளிலிருந்து வேறுபடுத்தி அறியக்கூடியதாயினும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அர்த்தமுடைய கூற்றுக்களைக் கண்டுபிடிப்பதனையே நோக்கமாகக்கொண்டு தர்க்கப் புலனறிவாதிகள் செயற்பட்டனர் எனக் கூறமுடியாது. ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அர்த்தமுடையது எது, அர்த்தமற்றது எதுவென அவர்கள் அறிந்திருந்தும் அர்த்தமற்ற கூற்றுக்கள் எத்தகைய குறைபாடுடையது என்றும் அர்த்தமுடைய கூற்றுக்கள் எவ்வாறு அத்தகைய குறைபாட்டிலிருந்து விலகியிருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்ட முயன்றனர். இருந்தும் அவர்களின்

அத்தகைய முயற்சியானது எவ்வளவு தூரம் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றது என்பதனைப் பிற்பட்டுவந்த விமர்சகர்கள் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பின் புலனறிவாதச் (Post Positivism) சிந்தனையாளர்கள், வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடானது குறிப்பிட்ட இலக்கு நோக்கிச் செல்கின்றது எனவும் இம்முறையானது அறுதியான உண்மைகளாக இருப்பது விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்குப் பொருத்தமற்றதொன்றாகக் காணப்படுகின்றது எனவும் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இவ்வாறாக, வரலாற்றில் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனைகளுக்குப் பல சவால்கள் எழ ஆரம்பித்தன. இதன்விளைவாக இன்று சமூக விஞ்ஞானங்களில் பொதுவாக கலை, இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் தோற்றப்பாட்டியல், இனவியல் போன்ற முறையியல்கள் மிகுந்த செல்வாக்கைச் செலுத்திவருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது ([aNjt cad;nfhl, 2011:07). இந்தவகையில் தோற்றப்பாட்டியல் சிந்தனையாளரான எட்மண்ட் ஹூஸ்ரல், புலன்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாத் தகவல்களையும் உடனடியாக நம்பிவிடமுடியுமா? என்ற கேள்வியை எழுப்புகிறார். ஏனெனில் புலன்கள் போலியான அறிவைத் தரும் சந்தர்ப்பங்களுமுண்டு. அதாவது புலனனுபவத்திற்கு முதன்மையளிக்கும் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையை ஹூஸ்ரலும் கேள்விக்குள்ளாக்கினார். எனவேதான், மெய்யியற் சிந்தனையை புத்தம் புதிதாகக் தொடங்க வேண்டும் என்பதோடு அதனை அடியோடு சீர்திருத்தம் செய்யவேண்டும் எனும் கருத்து இவரால் முன்மொழியப்பட்டது.

மானிடவியற் சிந்தனையாளர்கள் புலனறிவாதச் சிந்தனையை விடுத்து மக்களின் வாழ்வு பற்றிய தகவல்களைத் தெளிவுபடுத்துவதற்கு இனவியல் சார்ந்த முறையியல்களைப் பயன்படுத்தி புதிய சிந்தனைகளை வெளிக்கொணர்ந்தனர். குறிப்பாக மேற்குறித்த சிந்தனையாளர்கள் பங்குபற்றல் முறையை அடிப்படையாகக் கொண்டு தமது கருத்துக்களை விளக்கியிருந்தனர். எடுத்துக்காட்டாக, வேடர்களின் நடத்தைகளை ஆராய விரும்பும் ஆய்வாளர்கள் அவர்களுடன் சேர்ந்து உறவாடி அன்றாட வாழ்வியலை அவதானித்து, மொழியைக் கற்று ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றமையைக் குறிப்பிடலாம். இவர்களின் இத்தகைய கருத்தியல்கள் யதார்த்தவாதச் சிந்தனையை அடியொற்றியதாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாறாக தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையானது பிற்பட்ட காலங்களில் விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டு புதிய பல மாற்றங்களைக் கண்டுவந்தமையும் இங்கு கருத்திற்கொள்ளத்தக்கது.

**முடிவுரை**

விஞ்ஞான மெய்யியலில் வளர்ச்சியில் ஆரம்ப கால அறிவியற் சிந்தனைகளுக்கு அடிப்படையாக விளங்கியிருந்த புலனறிவாதச் சிந்தனையானது பிற்பட்ட காலங்களில் புதிய மாற்றங்கள் கண்டு தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையாகப்

பரிணாமமடைந்திருந்தது. இச்சிந்தனையானது விஞ்ஞானங்களை முறையாக ஒழுங்கமைத்தல் மற்றும் பௌதிகவதீதச் சிந்தனையை மெய்யியலிலிருந்து நீக்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டிருந்தது. எவ்வாறாயினும், ஓர் எடுப்பின் உண்மையை அல்லது பொய்யை அறிவதில் அனுபவச்சான்று இன்றியமையாதது எனத் தெளிவுபடுத்தும் தர்க்கப் புலனறிவாதிகள் போன்ற சிந்தனையாளர்கள் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை நிராகரிக்க முற்படுகின்றனர். ஆக, பௌதிகவதீதச் சிந்தனைகளை விஞ்ஞானத்திலிருந்து நீக்கி விஞ்ஞான அறிவினை ஒருங்கிணைந்த நிலைக்குட்படுத்துவதே இவர்களின் முதன்மையான நோக்கமாகும். இருந்தும் தர்க்கப் புலனறிவாதிகளின் பெதிகவதீத எண்ணக்கருக்கள் குறித்த கருத்தியல்களை முற்றாக நிராகரிப்பதால் வெவ்வேறுபட்ட துறைகளில் பயன்படுத்தப்படும் கூற்றுக்களும் வாக்கியங்களும் நிராகரிப்பிற் குள்ளாகின்ற நிலையே ஏற்படும். இத்தகைய தன்மை எந்தளவிற்கு ஏற்புடையதாக விளங்கும் என்ற கேள்வியும் எழாமலில்லை. ஏனெனில் குறித்த துறைசார் மொழிக் கூறுகளை எண்ணக்கருக்களின் அடிப்படையில் விளக்கி மற்றும் விபரித்துக் கூறிக்கொள்ளவேண்டியிருக்கிறது. இவற்றின் அர்த்தம் சாதாரண விடயம்போல் தென்பட்டாலும் இவை மேலதிக வியாக்கியானத்தினை வேண்டிநிற்கின்றன என்பதே உண்மை. இதனால்தான் மொழியியல் அறிஞர்கள் ஒவ்வொரு மனிதரும் மொழியினால் அவரவரது மனதில் உருவாகும் தடங்களின் வழி உலகை உள்வாங்குகின்றார்கள், உணருகின்றார்கள் என்ற கருத்தியலை முன்வைத்திருந்தனர். எனவேதான், விஞ்ஞானம்சார் பரந்துபட்ட துறையை தனியே புலனறிவிற்குட்பட்டது என நோக்காது அதற்கு அப்பாற்பட்டும் சிந்தித்து - ஆய்வுகளை மேற்கொண்டு புதிய கருத்தியல்களைக் கூறவேண்டிய தேவைப்பாடு ஏனைய துறைகளுக்கும் பொருத்தப்பாடுடையதாக விளங்கும் என்பது ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்படும் உண்மையாகும்.

## உசாத்துணை நூல்கள்

அனஸ். எம். எஸ். எம்., 2006. மெய்யியல் - கிரேக்க காலம் தொடக்கம் தற்காலம் வரை, கொழும்பு: குமரன் புத்தகம் இல்லம்.

...... 2010. விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு. கொழும்பு: இஸ்லாமிய புக் ஹவுஸ்.

அஸ்வகோஸ்., 2002. பின்னவீனத்துவம் பித்தும் தெளிவும். சென்னை: மங்கை பதிப்பகம்.

ஆர்தர், எஸ்., 2012. அறிவியல் வரலாறு, கோவை: முகம் வெளியீடு.

இராமானுச்சாரி. இரா., 1966. அறிவு ஆராய்ச்சியியல். தமிழ்நாடு: தமிழ் வெளியீட்டகம்.

ஜமாஹிர். பி. எம்., 2010. மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும். கண்டி: நதா வெளியீடு.

கிருஸ்ணராஜா. சோ., 2011. மெய்யியல் ஓர் அறிமுகம். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்

...... 1995. சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல், கொழும்பு: இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சர்வப்பள்ளி இராதகிருஸ்ணன்., 1979. கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு. அண்ணாநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சண்முகலிங்கன். என்., 2008. சமூகவியல் கோட்பாட்டு மூலகங்கள். யாழ்ப்பாணம்: நாகலிங்கம் நூலாலயம்.

சிவானந்தமூர்த்தி. க., அன்ரன் டயஸ்., 1998. மெய்யியல் ஓர் அறிமுகம். புத்தூர்: அம்பாள் வெளியீட்டகம்.

சுக்ரி. எம். ஏ. எம்., 1994. மதமும் அறிவியலும். கொழும்பு: அல்-கலம் வெளியீடு.

ஞானகுமாரன். நா., 2003. மெய்யியல். யாழ்ப்பாணம்: செல்வம் வெளியீடு.

பேரியசாமி. ஆர்., 2010. பிளேட்டோ தத்துவப் பயணம். சென்னை: பாரதி புத்தகாலயம்.

முத்துமோகன். ந., 2000. ஐரோப்பிய தத்துவங்கள். சென்னை: காவ்யா வெளியீடு.

ராஜன். ப. கு., 2011. புரட்சியில் பகுத்தறிவு - மார்க்சிய தத்துவமும் நவீன அறிவியலும். சென்னை: பாரதி புத்தாகாலயம்.

ராகுல் சாங்கிருத்யாயன்., 2003. ஐரோப்பிய தத்துவவியல். சென்னை: நியூசெஞ்சரி புக் ஹவுஸ்.

நாராயணன். க., 1989. மேலைநாட்டு மெய்ப்பொருள். சென்னை: தமிழ்புத்தகாலயம்.

பிரவாதம், இதழ் - 6 (2011) கொழும்பு: சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

*Arthur Kenyon Rogers., 1948. History of Philosophy. Newyork: the Macmilan Company.*

*Bertant Russell., 1961. Religion and Science, Oxford University Press.*

*Chomsky. N., 2006. Language and mind (3rd ed.). Cambridge: Cambridge University Press. https://doi.org/10.1017/CBO9780511791222*

*Cook. J. W., 2000. Wittgenstein, Empiricism, and Language. New York & Oxford: Oxford University Press.*

*Carnap. R., 1959. The Elimination of Metaphysics Through Logical Analysis of Language. English translation in A.J. Ayer, ed. Logical Positivism, The free press, New York.*

*David Hume., 1748. An Enquiry Concerning Human Understanding. New York: Dover.*

*……………. 1779. Dialogues Concerning Natural Religion. London. Retrieved from https://archive.org/details/bub_gb_E7dbAAAAQAAJ/page/n17/mode/2up*

*Harriet Martineau., 2009. The Positive of Auguste Comte. Cambridge: Cambridge University Press.*

*Herbert Herring., 1977. Being and Unity in Western Philosophy. Madras: Madras University.*

*Jornal of Social Review, 2019. Vol.6, Issue.1, South Eastern University, Sri Lanka.*

*Karl Popper., 1934. The logic of Scientific Discovery. New York: London.*

*………….. 1962. Objective Knowledge. Oxford: Clarendon Press.*

*Norman Kemp Smith., 1961. Immanuel Kant's Critique of Pure Reason. London: Macmillan & Co Ltd. and Hegan Paul.*

*Wittgenstein. L., 1922. Tractatus Logico Philosophicus. Newyork: Harcourt, Brace & Company.*

*Susan Stebbing. L., 1933. Logical Positivism and Analysis. London: British Academy. Vol.XIX.*

*Ishfaq Majeed., 2019. Understanding Positivism in Social Research: A research Paradigm of Inductive Logic of Inquiry. International Journal of Research in Social Sciences. Vol.9, Issue.11*

# இலங்கை அரசாங்க வெளியீடுகள்:
## நூலகங்களில் அரச ஆவணக் காப்பகப் பிரிவொன்றை ஒழுங்கமைப்பது பற்றிய ஆய்வு.

*கலாநிதி மைதிலி விசாகரூபன், கே. சஜந்தன்,*
*வை. கேசவன், பி. பூலோகநாதன்*

---

**ஆய்வுச் சுருக்கம்**

*அறிவை விருத்தி செய்வதற்கும் தகவல்களை அறிந்துகொள்வதற்கும் ஏற்ற வகையில் நூலகங்களிலே ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்படுகின்றன. இலங்கையில் உள்ள ஆராய்ச்சி நூலகமொன்றில் அதிக கரிசனையோடு சேகரிக்கப்பட வேண்டிய உசாத்துணை சாதனங்களுள் இலங்கை அரசாங்க வெளியீடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ் அரச ஆவணங்களானவை சாதாரண நூல்கள், தொடர்வெளியீடுகள், மலர்கள், சிறுநூல்கள் முதலானவற்றிலிருந்தும் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ளன. அரசாங்க வெளியீடுகளைப் பொறுத்தவரை குறிப்பிட்ட ஒருவெளியீடானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று அரச மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது. இலங்கையின் சட்டங்கள் தனித்தனியாகவும், சிலவகையானவை சட்டத் தொகுப்புக்களாகவும் (னுபைநளவ ழக டயறள) வெளிவருகின்றன. பக்க எண்ணிக்கையில் குறைந்த சிறு வெளியீடுகளாகவும் (ீயஅிடநவள) தனிநூல்களாகவும் இவை காணப்படுகின்றன. பிரித்தானியக் குடியேற்ற காலத்திலிருந்து பாராளுமன்ற விவாதங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை தொடர்பில் நாட்டின் பெயரைக் குறிப்பிடுதல், அரச தலைவர்களின் பெயரைக் குறிப்பிடுதல் போன்ற முக்கிய விடயங்களில் தெளிவான தீர்மானங்கள் தேவைப்படுகின்றன. ஊநலடழஇெ டீசவைளைா ஊநலடழஇெ ளுசை டயமெய, ஸ்ரீலங்கா, இலங்கை என இவ்வகை ஆவணங்களில் இந் நாட்டின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ளுசை டயமெய என்பதன் கீழ் அனைத்து பாராளுமன்ற விவாதங்களையும் ஒழுங்குபடுத்தும் தன்மையை நூலகங்களில் காணமுடிகின்றது. 1978 இற்கு முன்னர் நாட்டின் தலைவர் பிரதம மந்திரியாகவும், அதன் பின்னர் ஜனாதிபதியாகவும் அரசாங்க வெளியீடுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு பல்வகைமையுடன் வெளிவந்துள்ள இலங்கை அரச ஆவணங்களை ஒழுங்கமைத்தல் பல்வேறு சவால்களுடைய பணியாக இனங்காணப்படுகின்றது. பட்டியல் பதிவுகளை மேற்கொள்ளும் மொழிமூலம், அழைப்புஎண் உருவாக்கம் (ஊயடட ரேஅடிநச), நூற்சேர்வுஎண் வழங்கல் (யுஉஉநளளழைெ ரேஅடிநச), நூற்தட்டுகளில் அரச ஆவணங்களை ஒழுங்கமைத்தல் என எல்லா நிலைகளிலும் பிரத்தியேகமான நடைமுறைகள் அரச ஆவணங்களின்*

ஒழுங்கமைப்புக்குத் தேவைப்படுகின்றன என்பது இவ் ஆய்வின் கருதுகோளாகும். இலங்கைப் பாராளுமன்றம் சார்ந்த வெளியீடுகளின் ஒழுங்கமைப்புப் பற்றிய கருத்துக்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் முதனிலைத் தரவுச் சாதனங்களாக அரசாங்க வெளியீடுகள் பயன்படுகின்றன. ஆராய்ச்சி நூலகமொன்றின் வாசகர் தேவையைக் கருத்தில் கொண்ட நுட்பமான ஒழுங்கமைப்பை இலங்கைப் பாராளுமன்ற வெளியீடுகளுக்கு ஏற்படுத்தும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு கருத்துக்களை முன்வைப்பது இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வில் வரலாற்று ஆய்வுமுறையியல், ஒப்பீட்டு ஆய்வுமுறையியல், விளக்கவியல் ஆய்வுமுறையியல் முதலான ஆய்வு முறையியல்கள் பயன்பட்டுள்ளன. நூலகங்களில் இலங்கை அரச வெளியீடுகளை ஒழுங்கமைக்கும் போது இனங்காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் இவ் ஆய்வு விளக்க முனைவதால் இலங்கை அரசின் பாராளுமன்ற வெளியீடுகளை ஒரு சீரான முறையில் நூலகத்தில் ஒழுங்கமைக்க உதவக்கூடிய கருத்துக்கள் பெறப்படுவது இவ் ஆய்வின் பயனாக அமைகின்றது. நூலகத்தின் ஏனைய சேகரிப்புகளான நூல்கள், தொடர் வெளியீடுகளோடு சேர்த்து ஒழுங்கமைக்க முடியாத அரச வெளியீடுகளைத் தனியான பிரிவொன்றில் பேணுவது தொடர்பான கொள்கையை நூலகத்தில் உருவாக்கிப் பின்பற்ற இவ் ஆய்வு வழி சமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திறவுச்சொற்கள்: நூலகத் தகவல் ஒழுங்கமைப்பு, இலங்கைப் பாராளுமன்றம், அரசாங்க ஆவணங்கள்.

## 1. அறிமுகம்

அரசாங்கம் என்பது நாட்டு மக்களின் நலன்களைக் கட்டிக்காக்கும் ஒரு பாரிய கட்டமைப்பு. இது குறிப்பிட்ட அந்த நாட்டின் நிதி, நீதி, நிர்வாகம் ஆகியவற்றைப் பரிபாலனம் செய்வதை மையமாகக் கொண்டியங்கும் தன்மையுடையது. அரசு ஒன்றை இயக்கும் கருவியாக உள்ள அரசாங்கம் ஒன்று பல அங்கங்களைக் கொண்டமைந்துள்ளது (சண்முகசுப்பிரமணியம், 1984). பொதுவாக அரசாங்கம் ஒன்றின் அங்கங்களாக (Organs of Governments) பின்வருவன அமைகின்றன. (AACR: 24.17 – 24.22)

1. பாராளுமன்றம், அமைச்சரவை போன்ற அரசியல் யாப்பு ரிதியான அங்கங்கள். (Constitutional Organs of Governments)
2. பிரதமர், ஜனாதிபதி முதலான அரசுத் தலைமைப்பீடங்கள். (Heads of Governments)
3. அமைச்சு, திணைக்களம் முதலான அரசநிர்வாக வகை சார்ந்த அங்கங்கள். (Administrative Organs of Governments)
4. அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுக்கள், விசாரணைக்குழுக்கள் மற்றும் தெரிவுக்குழுக்கள் போன்ற தற்காலிக அலகுகள். (Temporary Organs of Governments)

5. வெவ்வேறு மட்டத்திலான நீதிமன்றங்கள் அடங்கிய நீதித்துறை சார்ந்த அலகுகள். *(Judicial Organs of Government)*

அரசாங்கம் ஒன்றின் மேற்படி அலகுகளால் வெளியிடப்படுகின்ற உத்தியோகபூர்வமான வெளியீடுகளை அரசாங்க ஆவணங்கள் என வகைப்படுத்திக்கொள்ளலாம்.

இலங்கை நாடு, ஒரு தனியான அரசாங்கத்தைக் கொண்டது. இது அதிபர் முறைமூலம் ஆளப்படுகின்ற ஒற்றையாட்சி நாடாக உள்ளது. பாராளுமன்றம் இந் நாட்டின் ஆட்சிமையமாக உள்ளது. இலங்கையின் இறைமைக்கும், நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருக்கும் அமைப்பு இலங்கைப் பாராளுமன்றம் ஆகும். இதன்படி இலங்கை தொடர்பான அரசாங்க வெளியீடுகளைப் பின்வருமாறு இரண்டாக வகைப்படுத்தலாம்.

I) பாராளுமன்றம் சார்ந்த வெளியீடுகள் *(Parliamentary Publications)*

II) பாராளுமன்றம் சாராத வெளியீடுகள் *(Non-Parliamentary Publications)*

சட்டம் இயற்றுதல் பாராளுமன்றத்தின் பிரதான பணியாகும். பாராளுமன்ற வெளியீடுகளுள் இலங்கைச் சட்டங்கள், அரசியல் யாப்புத்திருத்தங்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டின் பொருளாதாரம் சார்ந்து நிதி திரட்டுதல் மற்றும் அதன் பொருத்தமான செலவீடு போன்ற மதிப்பீடு, திட்டமிடல் என்பனவும் பாராளுமன்றத்தின் தலையாய கடமைகளுள் ஒன்றாகிறது. இந் நாட்டின் பொருளாதாரம் சார்ந்த முக்கிய வெளியீடாக வரவு செலவு அறிக்கை காணப்படுகின்றது. வழக்குகளின் தீர்ப்புகள், ஆணைக்குழு அறிக்கைகள் என அதிகளவான வெளியீடுகள் அவ்வப்போது ஆட்சி அமைக்கும் இலங்கை அரசாங்கங்களினால் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

ஆராய்ச்சியாளர்களை வாசகர்களாகக் கொண்ட நூலகங்களுக்கு அரச ஆவணங்களின் புள்ளிவிபரங்கள் அவசியமானவையாக உள்ளன. இத்தகைய நூ லகங்களின் உசாத்துணை வளங்களில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றை நூலகங்களிலே சேகரித்து நுட்பமான முறையில் ஒழுங்கமைக்க வேண்டியது மிக அவசியமானது.

**2. ஆய்வின் எல்லை**

அரசாங்க வெளியீடுகள் என்னும் பதம் பொதுவாக அரசாங்கம் ஒன்றின் எல்லாவகையான வெளியீடுகளையும் குறிக்கும் எனினும் இவ் ஆய்விலே இலங்கையின் பாராளுமன்றம் சார்ந்த வெளியீடுகளின் *(Parliamentary Publications)* ஒழுங்கமைப்புப் பற்றிக் கவனஞ்செலுத்தப்படுகின்றது.

### 3. ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப் படுகின்றது.

i. தனித்துவமான உசாத்துணைப் பெறுமானங்களைக் கொண்டுள்ள இலங்கைப் பாராளுமன்ற வெளியீடுகளை நுட்பமான முறையில் ஒழுங்கமைக்க முனையும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு விளக்குதல்.

ii. இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைப் பொருத்தமான உதாரணங்களூடாக விளக்குவதன் மூலம் பாராளுமன்ற வெளியீடுகளை நூலகங்களில் நல்ல முறையில் ஒழுங்கமைக்கக் கூடிய நுட்பத்தைக் கூறுதல்.

### 4. ஆய்வு மூலங்கள்

இலங்கை அரசாங்க வெளியீடுகளின் ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய இந்த ஆய்வின் முதனிலைத் தரவுச் சாதனங்களாகப் பாராளுமன்றம் சார்ந்த பின்வரும் வெளியீடுகள் அமைந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| i. | பாராளுமன்ற விவாதங்கள் | - | *Parliamentary Debates (Hanzards)* |
| ii. | சட்டங்களும், சட்டமூலங்களும் | - | *Law and Acts* |
| iii. | பாராளுமன்றத் தொடர்கள் | - | *Parliament Series* |
| iv. | வரவுசெலவுத்திட்ட உரைகள் | - | *Budget Speeches* |
| v. | பருவப் பாத்திரங்கள் | - | *Sessional Papers* |
| vi. | நிர்வாக அறிக்கைகள் | - | *Administration Reports* |
| vii. | இலங்கையின் புள்ளிவிபரச் சுருக்கம் | - | *Blue books* (நீலப் புத்தகம்) |

இவற்றுடன் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாகப் பாராளுமன்ற வெளியீடுகளுடன் தொடர்புடைய நூல்கள், பருவ இதழ்கள், இலத்திரனியல் வெளியீடுகள் என்பன பயன்படுகின்றன.

### 7. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வு பண்புசார் ஆய்வாகும். இதில் வரலாற்று ஆய்வுமுறை பெரிதும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு இலங்கைப் பாராளுமன்றம் மற்றும் அது தொடர்பிலான வரலாற்று நிகழ்வுகள், பின்னணிகளின் அடிப்படையில் பாராளுமன்ற விவாதங்களை ஒழுங்கமைத்தல் தொடர்பான சிக்கல்கள் அணுகப்பட்டுள்ளன. தகவல் ஒழுங்கமைப்பின்போது வழமையான நூற்சேகரிப்புகளிலிருந்தும் அரசாங்க வெளியீடுகள் வேறுபடும் தன்மையுடையன என்ற அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஒப்பியல் ஆய்வு முறையினூ

டாக தரவுப்பகுப்பாய்வு இடம்பெறுகிறது. சேகரிக்கப்பட்ட தரவுகள் விளக்கவியல் ஆய்வு முறையினூடாக விவரிக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

## 8. கருதுகோள்

இலங்கையின் பாராளுமன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவரும் பாராளுமன்ற வெளியீடுகள் பல உள்ளன. பாராளுமன்ற விவாதங்கள், இலங்கைச் சட்டங்கள், சட்டத்தொகுப்புக்கள், பருவப்பத்திரங்கள், வரவுசெலவுத்திட்ட உரைகள், ஆணைக்குழு அறிக்கைகள் எனப் பலவாக இவை வெளிவருகின்றன. இலங்கையில் அந்நியராட்சிக் காலம் தொடங்கி இற்றைவரை பாராளுமன்ற விவாதங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இன்றைய பாராளுமன்றம் பற்றிய கருத்துநிலை ஆரம்ப காலங்களில் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சட்டவாக்க சபை, பிரதிநிதிகள் சபை, அரசுக் கழகம், தேசிய அரசுப்பேரவை (யோதிலிங்கம், 2004) என்ற வெவ்வேறான பெயர்களில் இயங்கிய பலவும் அங்கு நடைபெற்ற விவாதங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளன. “இலங்கை” என்ற பெயரும் முன்னர் சிலோன், பிரிட்டிஸ்சிலோன் என்று வெவ்வேறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான வெளியீடுகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மூன்று மொழியிலும் உள்ளன. விடயங்கள் ஒரே ஆவணமாகவும், சிலவகையானவை தனித்தனியான வெளியீடுகளாகவும் கட்டப்பட்டு உள்ளன. வரவுசெலவுத்திட்ட உரைகள் சீரான தொடர்ச்சியைக் கொண்டு வெளிவந்துள்ளன. சிலோன் சிவில் பட்டியல் சீரான கால இடைவெளியைக் கொண்டிருக்கவில்லை. இவ் வெளியீடுகளின் பக்க எண்ணிக்கைகளும் நூற்சேர்வு எண் வழங்குதல் சார்ந்து குழப்பத்தைக் கொண்டுள்ளன. இவ்வாறான பல்வகைமைப் பண்புகளைக் கொண்ட பாராளுமன்ற வெளியீடுகளை நூலகங்களில் நுட்பமாக ஒழுங்கமைப்பது இலகுவானதல்ல. அது சவால்கள் பலவற்றையும் கொண்டுள்ளது என்பது உணரப்படுகின்றது. இவ்வகை வெளியீடுகளைச் சராசரியான ஏனைய நூல்களின் ஒழுங்கமைப்புடன் நூலகங்களில் கையாள்வதும் பொருத்தமற்றது. இவற்றை ஒழுங்கமைப்பதிலும், பேணும்முறையிலும் சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது என்பது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

## 9. ஆய்வுப் பிரச்சினை

இவ் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பாராளுமன்ற வெளியீடுகள் தகவல் ஒழுங்கமைப்பின் போது சில தனித்துவமான நுட்பங்களைக் கையாண்டு ஒழுங்கமைக்கப்பட வேண்டியனவாக உள்ளன. பட்டியல் தலையங்கத் தெரிவின் போது நாட்டின் பெயரைக் குறிப்பிடுதல், தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று மொழிகளில் உள்ள இந்த வெளியீடுகளின் பட்டியல் பதிவுக்கான மொழியைத் தெரிவுசெய்தல், நூற்சேர்வுஎண் வழங்கல், விடய அடிப்படையில் ஒழுங்கமைத்தல் எனப் பல நிலைகளிலும் சவால்கள் உள்ளன. இந்த வெளியீடுகள் பலவற்றையும் சாதாரண நூல்களுடன் ஒழுங்கமைக்க முடியாது. பல்வகைமை கொண்ட இவ்

வெளியீடுகளை அவற்றுக்குள்ளேயும் தனித்தனி நுட்பமான ஒழுங்கமைப்புடன் பேணவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதற்காகச் சில பொருத்தமான முறைகளைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது என்பது இவ் ஆய்வின் பிரச்சினை மையமாகும்.

**10. இலக்கிய மீளாய்வு**

*Williams* என்பவர் ஆங்கில அமெரிக்க பட்டடியலாக்க விதிமுறைகளுக்கு அமைவாகப் பருவ வெளியீடுகளை (*Serial Publications*) ஒழுங்கமைத்தலில் எதிர்கொள்ளப்படும் சவால்களையும் அதற்கான மாற்று வழிமுறைகளையும் குறிப்பிட்டு ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளார். பருவ வெளியீடுகளை பட்டியல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை இனங்கண்டறியும் நோக்கில் இது தொடர்பிலான காங்கிரஸ் நூ லகத்தின் விதிமுறைகளும் இவ்வாய்வில் உற்றுநோக்கப்பட்டுள்ளன. பருவ இதழ்களின் பட்டியலாக்கம் தொடர்பில் காங்கிரஸ் நூலகமும் கனேடிய தேசிய நூலகமும் இணைந்து உருவாக்கிய வழிகாட்டுதல்கள் இது தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்க்க உதவியளிக்கின்றன எனவும், பருவ வெளியீடுகளின் பட்டியலாக்கம் தொடர்பில் இன்னும் மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகின்றன எனவும் இவ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓமுளாளைஅரசய என்பவர் ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்கத்தினடிப்படையில் ஜப்பானிய மொழியில் அமைந்த வெளியீடுகளை பட்டியலாக்கம் செய்வது பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளார். இதில், வட அமெரிக்க நூலகங்களில் மேற்கத்தேய வெளியீடுகள் அல்லாத ஏனைய மொழிகளிலமைந்த வெளியீடுகளைப் பட்டியலாக்கம் செய்வது பற்றிய சிக்கல்கள் விரிவான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலங்களில் வடஅமெரிக்காவின் கல்விசார் நூலகங்களிலே மேற்குலக மொழிகள் அல்லாத ஏனைய மொழிகளில் வெளிவரும் வெளியீடுகளைச் சேகரித்து ஒழுங்கமைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதனால் இந்நூலகங்களில் பட்டியலாக்கம் செய்வதும் அவற்றை வகைப்படுத்திக் கொள்வதும் சவால்கள் நிறைந்த ஒரு பணியாக காணப்படுகின்றது என்பதும் இவ்வாய்வில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. உலகப் பொதுவாக அனைத்து மொழிகளிலும் வெளிவரும் வெளியீடுகளையும் துல்லியமாக ஒழுங்கமைத்துக் கொள்ளக்கூடிய பட்டியலாக்க நியமம் அவசியம் தேவைப்படுவதாக இவ்வாய்வு குறிப்பிட்டுள்ளது.

*Moustapha* மற்றும் *Ahmad* ஆகியோர் அரபிய மொழியில் அமைந்த நூல்களை ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்க விதிமுறைகளுக்கு அமைவாக பட்டியலாக்கம் செய்வது தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தனர். இவ்வாய்வின்படி அழைப்பு எண் (*Call Number*) உருவாக்கத்திற்காக நூலாசிரியரின் பெயரை மாற்றி எழுதுதல், வெவ்வேறு பெயர்களைக் கொண்ட ஒரு ஆசிரியரின் பெயரை பதிவு செய்தல், பெயர்களை உச்சரித்தல் முதலானவற்றில் பல்வேறு சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர். ஆங்கில அமெரிக்க பட்டியலாக்க

விதிமுறையானது நூலகப் பட்டியலாக்கம் தொடர்பிலான ஒரு உலகப்பொதுவான நியமமாகக் கருதப்படுகின்ற போதும் ஆங்கிலம் போன்ற மேற்குலக மொழிகள் அல்லாத ஏனைய நாடுகளில் வெளிவரும் வெளியீடுகளைப் பட்டியல்படுத்துவதற்கு நுணுக்கமான விதிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் இவ்வாய்வில் குறிப்பிட்டுள்ளனர். இதனால் அத்தகைய நாடுகள் ஆங்கில அமெரிக்க பட்டியலாக்க விதிமுறையை பயன்படுத்துவதாயின் தத்தமது மொழிகளுக்குப் பொருத்தமான அதிகாரக் கோவைகளை (*Authority Files*) தயாரித்துப் பயன்படுத்துவதில் பெரிதும் தங்கியுள்ளன என்றும் குறிப்பிடுகின்றனர்.

*Zuwiyya* என்பவர் அரபிய மொழியில் வெளியிடப்படுகின்ற நூல்களை பட்டியலாக்கம் செய்வதில் உள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளார். பட்டியல்பதிவில் நாட்டின் பெயரைக் குறிப்பிடுதல், நிறுவன வெளியீடுகளில் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுதல், மற்றும் அவற்றின் அலகுகளைக் குறிப்பிடும்போது ஆவணத்தை இனங்கண்டு பெற்றுக்கொள்வதில் சிரமங்களைச் சந்தித்தல் போன்ற நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன எனச்சுட்டிக்காட்டியுள்ளார். (*2007, as cited in Moustapha & Ahmad in 2021*).

## 11. தரவுப்பகுப்பாய்வு

நூலகத் தகவல் சாதனங்களின் ஒழுங்கமைப்புத் தொடர்பில் சேகரிக்கப்பட்ட ஆவணங்களுக்கான பட்டியல் பதிவுகளைத் தயாரிக்கும் விதிமுறைகளைக் கூறும் சர்வதேச நியமமாக யயுஊசு2 உள்ளது. இந் நியமம் அரசாங்க ஆவணங்களைப் பட்டியலாக்கம் செய்வது தொடர்பான அடிப்படை விதிமுறைகளையும் குறிப்பிட்டுள்ளது. இதன்படி ஒரு அரசின் ஆட்சிக்குட்பட்ட இடத்தின் பெயரையே பட்டியல் பதிவின் தலையங்கமாகத் தெரிவுசெய்யும் நடைமுறை உள்ளது. (*AACR2: 24.3F1*) நீண்ட வரலாற்றைக் கொண்ட இன்றைய இலங்கையினுடைய ஆரம்பகால ஆவணங்களை ஒழுங்கமைக்கும்போது நாட்டின் பெயரைக் குறிப்பிடுவது தொடர்பான தெளிவற்ற நிலை காணப்படுகின்றது.

### 11.1. நாட்டின் பெயர்

தொன்மை மிக்க வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இலங்கை நாடானது இலங்காபுரி, லங்காதுவீபம், செரண்டிப் எனப் பல்வேறு பெயர்களால் காலங்காலமாக அழைக்கப்பட்டு வந்தது எனினும் இவற்றுள் இலங்கை, ஸ்ரீலங்கா, ளுசை டுயமெய என்ற பெயர்கள் இலங்கை அரசாங்க வெளியீடுகளின் ஒழுங்கமைப்புச் சார்ந்து முக்கியத்துவம் பெறுவனவாக உள்ளன. இந் நாட்டைத் தமிழ்பேசும் மக்கள் "இலங்கை" என அழைக்கின்றனர். தமிழில் இந்நாட்டின் அதிகாரபூர்வ பெயர் "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு" என்பதாகும். இந்நாடு பிரித்தானியரின் காலனித்துவத்திற்குட்பட்ட *British Ceylon* என அக்காலத்திற்குரிய அரசாங்க ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. 1972 இற்கு முன்னர் இந்நாடு

*Ceylon* என்ற பெயரால் உலகம் முழுமையும் அறியப்பட்டிருந்தது. சிங்களமொழி பேசும் மக்கள் ஸ்ரீலங்கா (*Sri Lanka*) என்று இந்நாட்டின் பெயரைப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில் நாட்டின் பெயரைப் பட்டியல் பதிவின் தலையங்கமாகத் தெரிவுசெய்யும்போது இலங்கை தொடர்பான எந்தப் பெயரை பயன்படுத்திக்கொள்வது என்பது குறித்துச் சரியான தீர்மானம் பெறவேண்டியதாக உள்ளது. 1972 இற்கு முற்பட்ட கன்சாட் போன்ற முக்கியமான வெளியீடுகள் ஊநலடழெ என்றே குறிப்பிடுகின்றன (*Debate of the Legislative Council of Ceylon (1909)*). எனினும் பொதுவாக *Sri Lanka* என்பதன் கீழேயே ஆரம்பகால அரச வெளியீடுகள் யாவற்றையும் ஒழுங்கமைக்கும் நிலை நூலகங்களில் உள்ளது. இலங்கைப் பாராளுமன்ற வெளியீடுகளை ஒழுங்கமைப்பதில் நாட்டின் பெயரைக் குறிப்பிடுதல் தொடர்பில் தெளிவான தீர்மானங்கள் தேவைப்படுகின்றன. நாட்டின் பெயரைப் பொருத்தமற்ற வகையில் பட்டியல் பதிவில் குறிப்பிடும் போது தகவல் தேடல் சிரமமானதாகிவிடும் சூழல் உள்ளது.

### 11.2. மும்மொழித்தன்மை

இலங்கையில் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகள் அரச கரும மொழிகளாக உள்ளன. இந் நாட்டின் அதிகாரபூர்வ வெளியீடுகள் இம் மூன்று மொழிகளிலும் வெளிவருகின்றன. பாராளுமன்ற விவாதங்கள், பருவப்பத்திரங்கள், ஒப்பந்தங்கள், வரவுசெலவுத்திட்ட உரைகள் முதலாக பாராளுமன்ற வெளியீடுகள் அனைத்தும் மும்மொழியிலமைந்த தன்மையுடையனவே. இவற்றை ஒழுங்கமைக்கும்போதும் பட்டியல் பதிவுகள் தொடர்பில் சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன. மூன்று மொழிகளில் வெளிவந்தனவாயினும் ஒரே விடயத்தையே உள்ளடக்கமாகக் கொண்டமைந்தனவாக இவை காணப்படுவதால் பகுப்பு எண் வழங்குதல் தொடர்பில் சிக்கல்கள் தோன்ற வாய்ப்பு இல்லை. ஆனால் எந்த மொழியில் பட்டியல் பதிவுகளைத் தயாரிப்பது என்பது விவாதத்திற்குரியதாக உள்ளது. இதற்குப் பின்வரும் தெரிவுகள் உள்ளன. பட்டியல் பதிவுகளை மூன்று மொழிகளிலும் தனித்தனியே தயாரித்துக் கொள்ளலாம், எந்தமொழியை அதிகம் பேசும் வாசகர்கள் இந்த வெளியீடுகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதை முதன்மைப்படுத்தி அந்த மொழியில் பட்டியல்கள் தயாரிக்கப்படலாம் அல்லது பொதுவான மொழியாக உள்ள ஆங்கில மொழியில் மாத்திரம் பட்டியற்பதிவுகள் தயாரிக்கப்படலாம்.

மும்மொழியிலமைந்த வெளியீடுகள் தெடர்பில் இங்கு சுட்டிக் காட்டப்படத்தக்க இன்னுமொரு விடயமும் உள்ளது. சில வெளியீடுகள் மும்மொழிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே கட்டில் (*Single Bound*) வெளியிடப் படுகின்றன. சிலவகையானவை தனித்தனியாக மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றன. ஒரே கட்டில் மூன்று மொழிகளிலும் வரும் வெளியீடுகளில் முறையே சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற ஒழுங்கினடிப்படையில் ஒன்றாகக் கட்டப்படும் தன்மையுடன் உள்ளன. இந்நிலையில் ஆங்கிலமொழியில் மாத்திரம் பட்டியல் பதிவைத் தயாரிக்க முனையும்போது பட்டியல்பதிவுக்கான வெளியீட்டின்

தலைப்புப் பக்கம் (*Title Page*) ஒன்றாகக் கட்டப்பட்ட தொகுதியில் இறுதியில் அமைந்து காணப்படும் நிலையும் காணப்படுகின்றது. இது வெளியீடுகளை பௌதிகநிலையில் தயார்படுத்தலில் (*Physical Preparation of Material*) அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. ஆவணங்களைப் பௌதிக நிலையில் தயார்ப்படுத்தல் என்பது வெளியீட்டின் தலைப்புப் பக்கத்தில் அழைப்பு எண்ணைக் (*Call Number*) குறிப்பிடுதல், சேர்வு எண்ணைப் பதிதல், மற்றும் நூலின் அமைவிடம் நூலக இலட்சினை பொறித்தல் முதலியனவாகும். இவற்றைக் கட்டின் இறுதியாக உள்ள ஆங்கில வெளியீட்டிலே எழுதவேண்டி நேரிடுகிறது. ஆனால் பயன்பாட்டு நிலையில் எப்போதும் தலைப்புப் பக்கம் கையாள்வதற்கு இலகுவாக இருப்பதே நன்மையானது.

மூன்று மொழிகளிலும் தனித்தனியாகப் பட்டியல் பதிவுகளைத் தயாரிப்பது தொடர்பில் எழக்கூடிய இன்னொரு குழப்பமும் உள்ளது. அதாவது ஒவ்வொரு பதிவுக்குமான ஆசிரியர் குறியீடு (*Author Mark*) வெவ்வேறாக அமையும் சூழ்நிலை உள்ளது. இதனால் மும்மொழியிலமைந்த ஒரே விடயம் அகரவரிசைப்படியான ஒழுங்கமைப்பின்போது வெவ்வேறான இடங்களில் இறாக்கைப்படுத்தப்படும் நிலை உருவாகும். இந்நிலையில் பாராளுமன்ற வெளியீடுகளுக்கான பட்டியல் பதிவை எந்தமொழியில் தயாரித்துக்கொள்வது இலங்கையின் எந்தமொழியிலமைந்த பெயரைப் பட்டியல் பதிவின் தலையங்கமாகப் பயன்படுத்துவது என்பதும் இவ்வகை வெளியீடுகள் சார்ந்த சவாலாக உணரப்படுகிறது.

### 11.3. அரசுத் தலைவர்கள்

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம்பெற்ற காலப்பகுதியிலிருந்து பாராளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பு ஒன்று இலங்கையில் ஏற்படுத்தப்பட்டது. காலத்திற்குக்காலம் மாற்றம்பெற்ற அரசியல் யாப்புக்களின் பிரகாரம் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை செயற்பட்டு வந்தது. அமைச்சரவையின் தலைமைத்துவம் பிரதம மந்திரியைச் சார்ந்திருந்தது. அமைச்சரவையின் அதிகாரம் வாய்ந்த சக்தியாக பிரதமர் விளங்கினர். (யோதிலிங்கம், 2004) இதனடிப்படையில் பின்வரும் பிரதமர்கள் முறையே நாட்டின் தலைவர்களாக இருந்துள்ளனர்.

| | **அரசுத் தலைவர்களின் பெயர்** | **ஆட்சிக்காலம்** |
|---|---|---|
| *i* | டி. எஸ். சேனாநாயக்க | 1947 ___ 1952 |
| *ii* | டட்லி சேனாநாயக்க | 1952 ___ 1953<br>1960 மார்ச் ___ யூலை<br>1965 ___ 1970 |
| *iii* | சேர். ஜோன். கொத்தலாவ | 1953 ___ 1956 |
| *iv* | எஸ். டபில்யு. ஆர். டி. பண்டாரநாயக்க | 1956 ___ 1959 |
| *v* | டபில்யு. தஹாநாயக்க | 1959 ___ 1960 |

| | | |
|---|---|---|
| *vi* | சிறிமாவோ பண்டாரநாயக்க | *1960 ___ 1965* |
| | | *1970 ___ 1977* |
| *vii* | யே. ஆர். ஜெயவர்த்தன | *1978 ___ 1989* |
| *viii* | ரணசிங்க பிரேமதாசா | *1989 ___ 1993* |
| *ix* | டி.பி. விஜேதுங்க | *1993 ___ 1994* |
| *x* | சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க | *1994 ___ 2005* |
| *xi* | மகிந்த ராஜபக்ச | *2005 ___ 2015* |
| *xii* | மைத்திரிபால சிறிசேனா | *2015 ___ 2019* |
| *xiii* | கோத்தபாய ராஜபக்ச | *2019 ___ 2022* |

*(Source:- https://www.worldstatesmen.org/Sri_Lanka.html)*

1972 ஆம் ஆண்டு வரையான இலங்கை அரசியல் யாப்புக்களின் பிரகாரம் மேற்குறிப்பிட்டோர் பிரதமர்களாகக் காணப்பட்டுள்ளனர். (சிவராசா, 1989) நாட்டின் தலைவர்களுடைய வெளியீடுகளை ஒழுங்கமைக்கும்போது பொதுவாக நாட்டின் தலைவரின் பெயர் ளுசை டயமெய என்பதன் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்ற தன்மை நூலகங்களில் பெரிதும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக (*Ceylon. Prime Minister (1947 – 1952: Senanayake, Dudley) (AACR2: 24.20B1)*

1972 ஆம் ஆண்டின் பின்னர் பெயரளவில் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி நீக்கப்பட்டு 1978 இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை உருவாகிய பின்னர் இலங்கை அரசின் தலைவராக ஜனாதிபதி செயற்படும் முறை உருவாகியது. இதன்படி அரசியல் யாப்பினடியான அதிகாரம் அனைத்தையும் ஜனாதிபதி கட்டுப்படுத்துபவராகச் செயற்பட்டார் (முத்துலிங்கம், 1974). இதனடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் பின்னரான இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் பிரகாரம் இலங்கை அரசின் தலைவராக ஜனாதிபதியைக் கொள்ளும் முறை காணப்படுகிறது. இதன்படி நாட்டுத் தலைவர் ஒருவரின் வெளியீடு பட்டியலாக்க நியமத்தின்படி பின்வருமாறு பதிவுசெய்யப்படுவதே பொருத்தமானது. *Sri Lanka. President* (1978 ___ 1989: *Jayewardene, J. R*). (*AACR2: 24. 20B1*) எனினும், நாட்டின் தலைவர்களது பெயர்களை இப்பட்டியல் பதிவில் குறிப்பிடும்போதும் நாட்டின் பெயரை எவ்வாறு தெரிவுசெய்வது என்பதில் தெளிவின்மையுடனும் செயற்படும் தன்மை தகவல் ஒழுங்கமைப்பின்போது பொதுவாகக் காணப்படுகின்றது.

அரசுத் தலைவர்களின் பெயர்களைப் பட்டியல் பதிவின் போது குறிப்பிடுதல் தொடர்பில் இன்னொரு வகையான சிக்கலும் இனங்காணப்படுகிறது. அதாவது நாட்டுத் தலைவர்களின் வெளியீடுகளிலும் பல்வகைமைகள் உள்ளன. பாராளுமன்றம் சார்ந்த வெளியீடுகளுக்கும் மேலதிகமாக அரசுத் தலைவர்களின் தனிப்பட்ட ஆக்கங்களும் நூலகங்களில் சேகரிக்கப்பட வாய்ப்புள்ளது. உதாரணமாக ரணசிங்க

பிரேமதாசா இலங்கையின் முன்னாள் பிரதமர்களுள் ஒருவராவர். இவரைப்பற்றிய ஒரு நூல் *'The Assassinations of President Premadasa of Sri Lanka'*, இதனை *Ravindra Fernando* எழுதியுள்ளார். இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக விளங்கியது. *R. Jayewardene* **1957** இல் *Buddhism and Marxism* என்னும் நூலை எழுதியுள்ளார். முதலாவது நூல் இலங்கைப் பிரதமர் பிரேமதாசா பற்றியது. இரண்டாவது நூல் இலங்கையின் ஜனாதிபதி ஒருவர் எழுதிய நூல். இவ்வாறான வெளியீடுகள் நூலக நூற்சேர்க்கையில் இடம்பெறும் போது அவற்றை இலங்கையின் பிரதமர் பற்றிய நூல் என்பதாலோ அல்லது ஜனாதிபதி எழுதிய நூல் என்பதாலோ இவற்றை அரச ஆவணமாகக் கருதுவது பொருத்தமற்றது. இவற்றை சரியாகப் பிரித்தறிந்து ஒழுங்கமைக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறான பொருத்தமற்ற ஒழுங்கமைப்பும் சிலவேளைகளில் இடம்பெறும் நிலைமை உள்ளது. ஆனால் நாட்டின் தலைவர்கள் என்ற ரீதியில் ஆற்றப்படுகின்ற உரைகளின் வெளியீடுகளை அரச ஆவணப்பகுதிக்குள் ஒழுங்கமைத்துக் கொள்ளுதலே பொருத்தமுடையது. எடுத்துக்காட்டாக *"Speeches made by His excellency the president Gotabaya Rajapaksa at the inaugural meeting of the ninth Parliament"* என்ற வெளியீட்டினை பாராளுமன்ற வெளியீடாகக் கருதி அரச ஆவணக் காப்பகப் பகுதிக்குள் ஒருங்கமைப்பதே பொருத்தமானது. இவ் வெளியீட்டிற்கான பட்டியல் பதிவு பின்வருமாறு இடம்பெறும்.

*Sri Lanka. President (2020: Gotabaya) Speeches: Inaugural meeting of ninth Parliament/ made by Gotabaya Rajapaksa at the inaugural meeting of the ninth parliament.*

நாட்டின் தலைவர்களது வெளியீடுகளில் பட்டியற்பதிவுக்கான தலையங்கம் நாட்டின் பெயராக அமையும் அதேவேளை தலைவராக அவர் பதவிவகிக்கும் காலத்தில் அவரால் வெளியிடப்படும் தனிப்பட்ட ஆக்கங்களுக்கான பட்டியல் பதிவின் தலையங்கம் தலைவராக உள்ள அந்த நபரின் பெயராக அமையும் என்ற தெளிவான உணர்வு தகவல் ஒழுங்கமைப்பின் போது காணப்படாத தன்மை நூலகங்களில் ஆங்காங்கு உள்ளமை அவதானிக்கப்படக் கூடியது.

### 11.4 பாராளுமன்ற விவாதங்கள்

பாராளுமன்ற விவாதங்கள் (*Parliamentary Debates/ Hanzards*) என்பவை பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கிடையே நடைபெறுகின்ற விவாதங்களின் பதிவேடாகும். இவ் விவாதங்களின் பெறுபேறாகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்திலிருந்து இத்தகைய ஆவணம் வெளியிடப்பட்டு வருகின்றது. நூலகங்களில் இவை பெருந்தொகையாகக் காணப்பட வாய்ப்பு உள்ளது. பெருந்தொகையாகக் காணப்படக் கூடிய இவற்றை ஒரே தலையங்கத்தின் கீழ் ஒழுங்கமைப்பது தேடுதலுக்கு இலகுவானதாக அமையாது.

இலங்கை அரசாங்கத்தின் நிர்வாக மையமான "பாராளுமன்றம்" என்ற கருத்துநிலை **1972** ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் அவ்வப்போது உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்களுக்கு அமைவாக ஆட்சி மையங்கள் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டிருந்தன.

| | நிர்வாக கட்டடைப்பின் பெயர் | ஆட்சிக் காலப்பகுதி |
|---|---|---|
| *i* | சட்டவாக்க சபை<br>*Legislative Council of Ceylon* | *1833 ___ 1931* |
| *ii* | அரசுக் கழகம்<br>*State Council* | *1931 ___ 1947* |
| *iii* | சிலோன் பாராளுமன்றம்/ பிரதிநிதிகள் சபை<br>*House of Representatives* | *1947 ___ 1972* |
| *iv* | தேசிய அரசுப் பேரவை<br>*National State Assembly* | *1972 ___ 1978* |
| *v* | பாராளுமன்றம்<br>*Parliament* | *1978* இன் பின்னர் |

*(Source:- https://www.parliment.lk/history-and-role)*

ஆரம்பத்திலிருந்து ஆட்சிமையங்கள் வெவ்வேறான தன்மையுடன் இருந்த போதும் அவற்றின் அங்கத்தவர்களது விவாதங்களை உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்த இவ்வகை ஆவணங்களைக் கருத்துள்ள வகையில் ஒழுங்கமைப்பதில் இடர்பாடுகள் உள்ளன. குடியேற்றவாத காலத்தில் ஊநலடழுெ எனும் பெயரே இவ்விவாதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தன. (Ceylon Blue Book. 1893) ஏறத்தாழ 1833 ___ 1972 வரை இந்நிலமை அதிகளவில் காணப்படுகிறது. 1972 ஆம் ஆண்டிலிருந்து Sri Lanka எனக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு நாட்டின் பெயர், மற்றும் அந்தந்தக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட நிர்வாக அலகின் பெயர்கள் என்பன பல்வேறு தன்மையுடன் காணப்படுகின்றன. இவற்றைத் தர்க்கரீதியாகச் சீரான முறையில் ஒழுங்கமைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. சீரான ஒழுங்கமைப்புக் காணப்படவில்லையாயின் வாசகர் குறிப்பிட்ட அந்தந்தக் காலப்பகுதிக்குரிய ஆவணங்களைக் கண்டறிவதில் சிரமத்தை எதிர்கொள்வர்.

### 11.5. சட்டங்கள், சட்டத்தொகுப்புக்கள்.

பாராளுமன்றம் சட்டம் இயற்றும் பணியைப் பிரதானமாகக் கொண்டது. நாட்டை நிர்வாகம் செய்வதற்காக உருவாக்கும் ஒழுங்கு மற்றும் விதிமுறைகளே சட்டங்கள் எனப்படுகின்றன. பாராளுமன்றத்தைச் சட்டமன்றம் அல்லது சட்டசபை என்று குறிப்பிடும் மரபு இந்திய நாட்டில் உள்ளது. பாராளுமன்றம் எல்லாவகையான சட்டங்களையும் இயற்றும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் குற்றவியல் சட்டம் பெரும்பாலும் பிரித்தானியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. அடிப்படைக் குடியியல் சட்டமானது ரோம மற்றும் டச்சுச்சட்டங்களை அடிப்படையாகக் கொண்டது. திருமணம், மணமுறிவு மற்றும் சொத்துக்கள்

தொடர்பான சட்டங்கள் பொதுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. இலங்கை மக்களின் பண்டைய வழக்கங்கள் மற்றும் சமயம் போன்ற வழக்காறுகள் காரணமாக சிங்கள வழமைச் சட்டம் (கண்டியச் சட்டம்), தேச வழமைச் சட்டம் மற்றும் இசுலாமியச் சட்டம் என்பன பின்பற்றப்படுகின்றன. இவ்வகையான சட்டங்கள் பலவும் சட்டத்தொகுப்புக்களாகவும், தனித்தனி சட்டங்களாகவும் மூன்று மொழிகளிலும் வெளிவருகின்றன.

### 11.5.1. அரசியலமைப்புச் சட்டம்

சட்டம் என்பது நாட்டின் ஒழுங்கு, மற்றும் அமைதி என்பவற்றைப் பேணும் கருவியாக அமைகின்றது. அரசாங்கம் ஒன்றின் பல்வேறு அலகுகளும் செயற்பட வேண்டிய நெறிமுறையைக் கூறும் எழுத்துநிலைப்பட்ட விதிமுறையாக அரசியலமைப்புச் சட்டம் (Constitutional Law) காணப்படுகின்றது. அரசின் அமைப்பைக் கூறுவது அரசமைப்புச் சட்டம். (சண்முகசுப்பிரமணியம், 1984) அரசியலமைப்புச் சட்டங்களைச் சட்டமாகக் கருதும் தன்மை இல்லையெனினும் இவற்றை நூலகங்களில் அரச ஆவணப்படுத்தல் ஆவணக் காப்பகத்தில் பேணுவதே பொருத்தமானது.

அரசியல் யாப்புகள் பின்வருமாறு சீரமைவுத் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டுமெனப் பட்டியலாக்க நியமம் குறிப்பிடுகின்றது (AACR: 25.5B1).

*Ceylon*

*[Constitution (1972)]*

*Sri Lanka*

*[Constitution (1972)]*

இலங்கை அரசாங்கத்தினுடைய சட்டம்சார்ந்த வெளியீடுகளின் தொகுதியாக டுநபளைடயவளைந நுயெஉவஅநவெ ழக ஊநலடழுெ என்பது பாராளுமன்றத்தால் வெளியிடப்படுகின்றது. சட்டமூலங்கள், புதிய சட்ட அறிக்கைகள் (New Law reports) என்பனவும் இலங்கையினுடைய சட்டத்துறை சார்ந்த வெளியீடுகளாகும். சட்டமூலங்கள் (Bills) என்பவை பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படுவதற்கு முன்னரான தொடர்புடைய ஆவணத்தைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகும். சட்டமூலங்கள் பாராளுமன்ற அங்கீகாரத்தின் பின்னர் சட்டங்களாக (Laws) நடைமுறைக்கு வருகின்றன.

பாராளுமன்றத்தின் வெளியீடான ஒழுங்குப்பத்திரங்கள் (Oral Papers) என்பவை இலங்கை பாராளுமன்றத்தின் சட்டம் சார்ந்த இன்னொரு வகையான வெளியீடுகள் ஆகும். சட்டமூலமானது (Bill) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களின் பின்னர் 50(1) ஆம் நிலையியல் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கமைய எவரேனும் அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் முதலாம் மதிப்பீட்டிற்காக ஒழுங்குப்பத்திரத்தில் இடப்படுகின்றது. சட்டங்கள் தொடர்பான மதிப்பீட்டினைப்பெற ஒழுங்குப் பத்திரங்கள் உதவுகின்றன.

இலங்கைச் சட்டங்கள் தொடர்பில் டுநபளைடயவளைந ஊநலடழஎ என்ற வெளியீட்டின் துணை வெளியீடாக *Acts of Ceylon* என்பது வெளியிடப்படுகின்றது. குறிப்பிட்ட ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டத்தின் பெயரும் சட்ட இலக்கமும் இவ்வெளியீட்டில் முறைப்படுத்தப்பட்டிருப்பது பயன்பாட்டிற்கு இலகுவானதாக உள்ளது. சட்டம் வெளியிடப்பட்ட ஆண்டு மற்றும் அதன் இலக்கம் என்பவற்றைக் கொண்டு வாசகர் இலகுவாகத் குறித்த நூல்களை தேடிக்கொள்ள முடியும்.

இவ்வாறாகக் காணப்படக்கூடிய சட்டங்களின் தொகுப்புக்களை (*Digests of Laws*) தனியான பகுதியிலே தூயி தசமப் பகுப்புக் குறியீட்டு எண் 348 இன் கீழ் பொருத்தமான வகையில் ஒழுங்கமைத்துக் கொள்வது பயனுள்ளது. சட்டத் தொகுப்புக்களுக்கான ஒழுங்கமைப்புக்குச் சீரமைவுத் தலைப்புக்களையே ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்க விதிமுறை விதந்துரைத்துள்ளது. (*AACR2: 25.15A1*) இதன்படி ஆரம்பகாலச் சட்டத்தொகுப்புக்களை ஊநலடழஎ என்னும் தலையங்கத்தின் கீழும் பின்னரான சட்டத்தொகுப்புக்களை ளுசை டுயமெய என்பதன் கீழும் ஒழுங்கமைத்துக்கொள்வதே தகவல் ஒழுங்கமைப்பு நியமத்திற்கு அமைவானது.

*Eg: Ceylon*

*(Laws, etc...)*

*Sri Lanka*

*(Laws, etc...)*

எனினும் *Sri Lanka* என்பதன் கீழ் ஒழுங்கமைக்கும் தன்மையே இது தொடர்பில் அவதானிக்கப்படுவதாக உள்ளது. சட்டத் தொகுப்புக்கள் தவிர்ந்த ஏனைய தனித்தனி சட்டங்களைப் பொருத்தமான பகுப்பு எண்களை வழங்கி அந்தந்த விடயங்களோடு ஒழுங்கமைத்துக்கொள்வது பொருத்தமானது.

### 11.5.2. பருவப்பத்திரங்கள்

பாராளுமன்றத்தினால் குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்கள் மற்றும் தெரிவுக்குழுக்கள் போன்றனவற்றின் அறிக்கைகளை உள்ளடக்கிய வெளியீடாக பருவப்பத்திரங்கள் (*Sessional Papers*) பாராளுமன்றத்தால் வெளியிடப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் விவாதிக்கப்பட்ட விடயத்தை உள்ளடக்கமாகக் கொண்ட அறிக்கைகளாக இவை வெளிவருகின்றன.

தகவல் ஒழுங்கமைப்பின்போது பருவப்பத்திரங்கள் உள்ளடக்கமாகக் கொண்டுள்ள விடயத்திற்கு அமைவாகப் பகுப்புஎண் வழங்கப்படலாம். அவ்வாறே கூட்டு நிறுவனங்களின் விதிமுறைகளுக்குரிய வகையில் பட்டியல் பதிவின் தலையங்கங்கள் தெரிவுசெய்யப்படலாம். எனினும் நூலின் பௌதிக அமைப்புச் சார்ந்து அவை பக்க எண்ணிக்கையில் 48 பக்கங்களுக்கும் குறைந்த சிறு நூல்களாகவும் (*Pamphlets*) அதேவேளை சில வெளியீடுகள் அதிகளவு பக்கங்களைக்

கொண்ட பெரியளவிலான நூல்களாகவும் வெளிவருகின்ற தன்மையுடன் காணப்படுகின்றன. அத்துடன் இன்னொரு நிலையில் சிலவகையான பருவப்பத்திரங்கள் மூன்று மொழிகளையும் ஒன்றாய் இணைத்த ஒரு கட்டிலமைந்த (*Single Bound*) வெளியீடுகளாகவும் வெளிவருகின்றன. சிலவகையானவை ஒவ்வொரு மொழிகளிலும் தனித்தனியாக வெளியீடுசெய்யப்படுகின்ற தன்மையையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் நூற்சேர்வு எண் வழங்குதல் தொடர்பில் பல்வேறு சவால்கள் உள்ளன. பருவப்பத்திரங்கள் பக்க எண்ணிக்கையில் சிறுநூல்களாகவும் (*Pamphlets*) சாதாரண நூல்களாகவும் காணப்படுகின்றன. நூற்கட்டுகள் தொடர்பில் சிலவகையானவை தனித்தனி மொழிகளிலும், சிலவகையானவை மும்மொழிகளையும் ஒன்றாக இணைத்தும் வெளிவருகின்றன. இந்நிலையில் இவற்றிற்கு நூற்சேர்வு எண் வழங்குதலிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவற்றை ஒரு தெளிவான தீர்மானத்தின்படி ஒழுங்கமைப்பது பொருத்தமானது.

### 11.5.3. வரவுசெலவுத்திட்ட உரைகள்

அரசாங்கம் ஒன்றின் ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான வரவுசெலவுகளையும் இவை இரண்டிற்குமிடையே உள்ள இடைவெளியை நிரப்புவதற்கான ஆலோசனைகளையும் விபரித்து நிதி அமைச்சரால் (சில வரவு செலவுத்திட்ட உரைகள் பிரதமராலும் நிகழ்த்தப்படலாம்) வரவுசெலவுத்திட்ட உரை (*Budget Speech*) பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படுகின்றது. அவ் உரையின் எழுத்து வடிவிலான வெளியீடாக வரவுசெலவுத்திட்ட உரை வெளியிடப்படுகின்றது.

வரவுசெலவுத்திட்ட உரைகள் மூன்று மொழிகளிலும் வெளிவருவதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ச்சியாக வெளிவருகின்ற தன்மையைக் காணமுடிகின்றது. இவை பாராளுமன்ற வெளியீடுகளாயினும் பட்டியல் பதிவின் தலையங்கம் தொடர்புடைய அமைச்சின் பெயரில் அமைவதே பட்டியலாக்க நியமத்திற்கு அமைவானது. உதாரணமாக,

| | |
|---|---|
| *352* | *Sri Lanka. Ministry of finance Budget speech 2003:/ made by K. N. Choksy* |
| *SRI* | *Minister of finance. - Colombo: Govt press, 2003* |

## 12. ஆய்வு முடிவும் பரிந்துரைகளும்

1. இலங்கை அரசின் தமிழ்மொழி மூலமான வெளியீடுகளாயின் இலங்கை என்பதை பட்டியல் பதிவின் தலையங்கமாகப் பயன்படுத்தி (*ILA*) என்பதை ஆசிரியர் குறியீடாகவும் பயன்படுத்தலாம். சிங்களமொழியிலமைந்த நூலாயின் ශ්‍රී ලංකා (ශ්‍රීලං) எனப் பயன்படுத்தலாம். ஆங்கில மொழியில் அமைந்ததாயின் *Sri Lanka (SRI)* என்றவாறு பயன்படுத்தலாம். ஆனால் தமிழ், சிங்களம், ஆங்கிலம்

என மூன்று மொழிகளிலும் ஒரே கட்டில் (*Single Bound*) வெளிவரும் தன்மையிலமைந்த ஆவணமாயின் தனித்தனி ஒவ்வொரு மொழிக்குமான பட்டியல் பதிவைத் தயாரிப்பது வேலைப்பளு மிக்கதாக நூலகத்தினால் உணரப்படுமிடத்து பொதுவான மொழியாகிய ஆங்கில மொழியில் பட்டியல் பதிவை மேற்கொள்ளலாம். பட்டியல் பதிவில் மட்டுமன்றி தேடுதலுக்கான விடயத் தலையங்கங்களையும் (*Subject Heading*) ஆங்கிலத்திலே வழங்கிக் கொள்ளலாம். பட்டியல்பதிவின் குறிப்புப் பகுதியில் குறித்த அந்த வெளியீடு மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றது என்ற குறிப்பினை வழங்கிக்கொள்வது வாசகர் பயன்பாட்டிற்குப் பொருத்தமானது.

இங்கு முக்கியமாக கவனத்தில் இடம்பெறும் விடயம் யாதெனில் குறித்த அந்த மூன்று மொழிகளிலும் வெளியான வெளியீடுகளின் தன்மை தனித்தனியாக காணப்படுமாயினும் ஆசிரியர் குறியீட்டை (*Author Mark*) ஆங்கில மொழியிலேயே வழங்கவேண்டும். ஏனெனில் ஆசிரியர் குறியீடுகளை அந்தந்த மொழிகளில் வழங்கும்போது பட்டியல் பதிவுகளை ஒழுங்கமைக்கும் வேளையில் அவை வெவ்வேறான இடங்களில் சிதறுதலான இடவமைவைப் பெறும்நிலை உருவாகிவிட வாய்ப்பு உள்ளது. எனவே இதன்படி ஒரு ஆவணம் ஒன்றுக்குமேற்பட்ட மொழிகளில் தனித்தனி வெளிவருமாயினும் அதன் ஆசிரியர் குறியீடு பொதுவான ஒரு மொழியிலேயே அதிகாரக் கோவையில் எழுத்துநிலையில் வைத்துப் பின்பற்றிவருவது அரச ஆவணங்களின் சீரான தகவல் ஒழுங்கமைப்பை நூலகத்தில் பேண வாய்ப்பு வழங்கும்.

2. நாட்டின் தலைவர்களது ஆக்கங்களைப் பொறுத்தவரை அவர்கள் எழுதிய நூல்களாயினும் அல்லது அவர்களைப் பற்றி ஏனையவர்கள் எழுதிய வெளியீடுகளாயினும் சரி அவற்றை அரச வெளியீடுகளுக்கான பட்டியல் பதிவுத் தலையங்கத்தைப் பயன்படுத்திப் பட்டியலாக்கம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். அவற்றை அரச ஆவணப்பகுதியில் பேணுவதும் பொருத்தமற்றது. அரச தலைவர்களின் தனிப்பட்ட நூல்களை சாதாரண நூல்களுடன் ஒழுங்கமைப்பதே பொருத்தமானது.

3. இலங்கையினுடைய பாராளுமன்றம் என்ற கருத்துநிலை தொடர்பில் தெளிவான பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது. "பாராளுமன்ற விவாதங்கள்" என்ற ஆவணம் சார்ந்து ஒரு நூலகம் 1833 இலிருந்து இற்றைவரையான பெருந்தொகையான ஆவணங்களை கையாளவேண்டியுள்ளது. அதிக தொகையாக இவ் ஆவணங்கள் உள்ளமையால் இதற்குள்ளும் சற்று நுணுக்கமான வேறுபாட்டைக் கடைப்பிடிப்பது பயனுள்ளது. இலங்கையின் பெயராக *Ceylon* என்பது நீண்டகாலமாகப் பயன்பாட்டில் இருந்தமையால் காலத்திற்குக்காலம் உருவாகிய நிர்வாக அலகுகளின் பெயரின் கீழ் அவற்றின் விவாதங்களை ஒழுங்கமைப்பது பயனுடையதாகும். இவை பின்வருமாறு அமைதல் பொருத்தமானது. இந்நடைமுறை *AACR2* இற்கும் மேலதிகமாக அந்தந்த நூலகத்தின் அதிகாரக் கோவையில் பின்பற்றப்படல் வேண்டும்.

***a.*** சட்டவாக்கக் கழகம்

*1833 ___ 1931* வரை நிலவிய சட்டவாக்கக் கழகத்தின் (டுநபளைடயவளைந ஊழரஉெடை) என்பதன்கீழ் அக்காலப்பகுதியில் வெளிவந்த விவாதங்களை ஒழுங்கமைக்கலாம். அழைப்பு எண்ணின் ஆசிரியர் குறியீட்டைப் பின்வருமாறு வழங்குவதன் மூலம் ஏனைய காலப்பகுதிக்குரிய விவாதங்களிலிருந்து இக்காலப்பகுதிக்குரிய விவாதங்களை வேறுபடுத்தலாம்

| | |
|---|---|
| 328.5493<br>LEG | *Ceylon. Legislative council*<br>*Debate of the Legislative council of Ceylon. -*<br>*Colombo: acting government press, 1909* |

***b.*** அரசுக்கழகம்

இலங்கையினுடைய அரசியல் வரலாற்றில் *1931 ___ 1947* வரை நிலவிய அரசுக்கழகத்தின் (*State Council*) விவாதங்களை அதன் பெயரின்கீழ் பின்வருமாறு ஒழுங்குபடுத்துவது தெளிவாக அமையும்.

| | |
|---|---|
| *328.5493*<br>*STA* | *Ceylon. State council*<br>*Debates in the state council of Ceylon .-*<br>*Colombo : Ceylon Govt press, 1932* |

***c.*** சிலோன் பாராளுமன்றம்

*1947 ___ 1972* வரையான காலப்பகுதியில் செயற்பட்ட சிலோன் பாராளுமன்ற (*House of Representatives*) விவாதங்களை பின்வரும் அடிப்படையில் ஒழுங்கமைத்துக்கொள்ளலாம். இவ் அமைப்பு பிரதிநிதிகள் சபை எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் விவாதங்களின் வெளியீடு பின்வரும் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படலாம்.

| | |
|---|---|
| *328.5493*<br>*HOU* | *Ceylon. House of Representative*<br>*Parliamentary Debates : official reports.*<br>*House of representative 1968 – 69. Colombo. Vol 84* |

***d.*** தேசிய அரசுப்பேரவை

*1972 ___ 1978* வரையான காலப்பகுதியில் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட தேசிய அரசுப்பேரவையின் (*National State Assembly*) வாதங்களை கீழே காணும் வகையில் தேசிய அரசுப்பேரவையின் பெயரின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்ளலாம். இதன் பட்டியல் பதிவுமுறை பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| *328. 5493*<br>*NAT* | சிலோன். தேசிய அரசுப்பேரவை<br>அதிகார அறிக்கை.-கொழும்பு : அரச அச்சுத் திணைக்களம், 1972 |

*e.* பாராளுமன்றம்

1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பிற்கு அமைவாக நிறுவப்பட்ட சட்டமியற்றும் நிறுவனமான பாராளுமன்ற (Parliament) விவாதங்கள் அப்பெயரின் கீழ் ஒழுங்கமைக்கப்படலாம்.

| | |
|---|---|
| *328. 5493*<br>*PAR* | *Sri Lanka. Parliament.*<br>*Parliamentary debates : (Hansards).-*<br>*Colombo: Gov press.* |

4. சரியான வகைப்படுத்தலின் பின்னர் உரிய அறிவுறுத்தல்களை அந்தந்த நூற்தட்டுக்களில் எழுதி ஒட்டி வழிப்படுத்துவதன் மூலம் இவ் ஆவணங்களின் ஒழுங்கமைப்பை மேலும் தெளிவுடையதாக்க முடியும். வரலாற்று முக்கியத்துவமுள்ள இந்த வகை ஆவணங்களை மூடிய அணுகுமுறையில் (Closed Access) வைத்துக்கொள்வதன் மூலம் ஆவணங்களின் நீண்டகாலப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

5. அரச ஆவணங்களின் பௌதிகத் தன்மை தொடர்பில் பக்க எண்ணிக்கை, மற்றும் ஒரே கட்டில் வெளிவருதலும் தனித்தனியாக வெளியிடப்படுதலும் என்ற பல பிரச்சினைகளால் நூற்சேர்வு எண் (Accession Number) வழங்குதல் தொடர்பில் சிக்கல் அதிகம் உள்ளமை உணரப்படுகிறது. எனவே சாதாரண நூல்களுக்கான நூற்சேர்வு எண்ணை வழங்காமல் அரச ஆவணங்களுக்குத் தனியான நூற்சேர்வுப் பதிவேட்டைப் பேணுவது பொருத்தமானது. நூல் இருப்புக் கணக்கெடுத்தல், அரச ஆவணங்களின் விபரங்களை அறிதல் முதலான பல்வேறு நிர்வாகத் தேவைகளுக்கும் தனித்தனியான நூற்சேர்வு எண் வழங்கும் முறை பயனுள்ளதாக அமையும்.

6. அரச ஆவணங்களைத் தனியாகப் பராமரித்தல் மாத்திரமன்றி அப்பிரிவில் கடமைபுரியும் நூலக அலுவலரும் கூட சிறப்புப் பயிற்சி பெற்றவராக இருத்தல் அவசியமானது. அரச ஆவணங்களையும் அவற்றின் உசாத்துணைப் பெறுமானங்கள் மற்றும் பயன்படுத்தும் தன்மை போன்றவற்றில் அறிவும் தெளிவுமுடையவராக தெரிவுசெய்து பயிற்சி வழங்கி நியமிக்கப்படுவது அவசியமானது.

## உசாத்துணை நூற்பட்டியல்


### (*A*) தமிழ் வெளியீடுகள்

1. ஒழுங்குப் பத்திரம் (1991). கொழும்பு. அரச அச்சகம்.
2. சண்முக சுப்பிரமணியம், மா. (1984). சட்டஇயல் ஸ்ரீ (*Jurisprudence*). தஞ்சாவூர். தமிழ்ப் பல்கலைக்கழகம்.
3. சிவராசா, அ. (1989). இலங்கை அரசியல். கைதடி. சிவா பிறிண்டேர்ஸ்.
4. தேசிய அரசுப் பேரவை விவாதங்கள்: அதிகார அறிக்கை. (1972). கொழும்பு. அரச அச்சுத் திணைக்களம்.
5. பாராளுமன்ற விவாதங்கள்: (ஹன் சாட்): அதிகார அறிக்கை (2000). கொழும்பு. அரச அச்சகம்.
6. முத்தத்தம்பி, இ. (1974). இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு: முதலாம் பாகம். வட்டுக்கோட்டை வெளியீட்டாளர்.
7. யோதிலிங்கம், சி. அ. (2004). இலங்கை அரசியல் யாப்புகள். கொழும்பு. குமரன் புத்தக இல்லம்.
8. வரவு செலவுத் திட்ட உரை (2003). ஸ்ரீ ஜயவர்த்தனபுர. அரச அச்சகம்.

*(B)* ஆங்கில வெளியீடுகள்

1. *Acts of SriLanka: 1986: Nos 1 – 45 (1987) Colombo. Department of government printing.*
2. *Ceylon blue book. (1893) Colombo. Government press.*
3. *Debate of the Legislative Council of Ceylon. (1909). Colombo. Acting government press.*
4. *Debates in the State Council of Ceylon. (1931). (These debates cover the period July – 7 to December – 10. 1931). (1932). Colombo. Ceylon government press.*
5. *Legislative enactments of the Democratic Socialist republic of Sri Lanka. (1980). government press.*
6. *Moustapha, A.A., & Ahmad, R. (2021). Critical Issues in Cataloging and Classifying Arabic Books: a case study B study BY Abdrahman A ahman Atanda MOUST tanda MOUSTAPHA (CLN, NL A (CLN, NLA) & Raihanat A) & Raihanat AHMAD (ALA). Library Philosophy and Practice. 6623, https://digitalcommons.unl.edu/libphilprac/6623*
7. *Parliamentary Debates: official report: House of representatives (1968 – 69). Colombo. Government press.*
8. *Williams, J.W. (1987). Serials Cataloging with AACR2: The Primary Problems and Concerns. The Serials Librarian. 12 (1-2), https://doi.org/10.1300/J123v12n01_04.*
9. *Yoshimura, R. (1991). Problems in Cataloging Japanese Materials using AACR2. Journal of East Asian Libraries. 93 , https://scholarsarchive.byu.edu/jeal/vol1991/iss9*

# தேவாரங்களில் சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள்

*சி.ரமணராஜா*

**ஆய்வுச் சுருக்கம்:**

*பல்லவர் காலத்துக்குரியதாக வகுக்கப்பட்டுள்ள பக்தி இலக்கிய நூல்களில் தேவாரங்களை முதன்மையாகக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது. சமூக உளவியல், சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள் தொடர்பில் பல உளவியலாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சமூக உளவியல் கூறுகளாகவே அவை குறித்த விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகளில் மெக்டூகல், ராஸ் முதலானோரின் சிந்தனைகள் முதன்மை பெறுகின்றன. சமூக உளவியலை ஆராயப்புகுந்தவர்கள் ஒருசில சமூக நடத்தைக்குப் பொதுவாக ஒன்றைக் காரணமாக ஊகித்து அதிலிருந்து மற்றைக் காரணிகளைத் தொடர்புபடுத்தித் தாம் எடுத்துக் கொண்ட அந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காணமுற்படுகின்றனர். தமிழ்ப்பக்தி இலக்கியங்களில் குறிப்பாக தேவாரங்களில் எவ்வாறு சமூக உளவியலின் கருத்துக் கோட்பாடுகளின் கருத்தமைவுகள் இழையோடிக்காணப்படுகின்றன என்பதனை நவீன உளவியல் கோட்பாடுகள் சொல்லும் பிரமாணங்களுக்கு அமைவாக நோக்குவதற்கும் பக்தி இலக்கியங்களில் சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதனை தேவாரங்களில் பகுப்பாய்வு செய்வதற்கும் இந்த ஆய்வு எத்தனம் செய்கின்றது. பக்தி இலக்கியங்கள் சமூக உளவியற் கூறுகளையும் தம்முட்கிடையாகக் கொண்டிருக்கின்றன எனும் கருதுகோளினை முன்வைத்து விடயப்பொருண்மை அணுகப்படுகின்றது. பக்தியின் உளவியல் திருக்கோயில்களினூடு கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. மேற்குலகச் சிந்தாந்தங்களின் வரவுகளுக்கு முன்பதாகவே பக்தியை ஓர் உளவியலாகவும் ஆன்மிக நிலையில் மேம்படுவதற்கான மூலதனமாகவும் தேவாரங்கள் எவ்வாறு கொண்டுரைத்தன என்பதனை இந்த ஆய்வின் முடிவு வெளிப்படுத்துகின்றது.*

**திறவுச்சொற்கள்: தேவாரங்கள், சமூக உளவியல், சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள், சமூகப்பண்பாடு**

**அறிமுகம்:**

இலக்கிய வகைமையில் பக்தி இலக்கியங்கள் ஒருவகையின. தமிழ்ப்பக்தி இலக்கியங்களுள் பன்னிரு திருமுறைகளுக்கும், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களுக்கும் தனித்துவமான இடமுண்டு. சைவ வைணவப் பெரியார்களின் பக்தியின் உளவியல் இப்பனுவல்களினூடு வெளிப்பட்டிருக்கின்றது. இலக்கியங்கள் காலத்தேவையினை பிரதிபலிப்பவை. அவை தாம் எழுந்த சமூகப்பெறுமானங்களை பன்முக வடிவங்களில் வெளிப்படுத்துபவை. சைவ பக்தி இலக்கியங்களில் மூவர் முதலிகளால் பாடப்பட்டவை தேவாரங்களாகும். சமய நிறுவனங்களான திருக்கோயில்களை சமூக நடுவண்களாக நிலைநிறுத்தும் இயல்பு தேவார இலக்கியங்களுக்குண்டு. திருக்கோயில்களை மையமாகக்கொண்டு படிமலர்ந்த சமூகப்பண்பாட்டினை யும் அதன் சமூகப்பயன்களையும் தேவாரங்கள் பிரதிபலிக்கின்றன.

தேவாரங்கள் இலட்சிய சமூகம் ஒன்றின் உருவாக்கத்துக்கான கருத்தமைவுகளைக் கொண்டுள்ளன. அத்தகைய கருத்தமைவுகள் பல்லவர்காலச் சமூக இயங்கியலின் வெளிப்பாடு களாகவும் சமண, பௌத்த எதிர்வினையாற்றலின் வெளிப்பாடுகளாகவும் காணப்படுகின்றன. இதனடிப்படையில் தேவாரங்கள் அக்காலச் சமூக, பண்பாட்டு மேம்பாட்டிற்கான நெறிப்படுத்தல்களாக - இலட்சிய வாழ்வியலுக்கான மூலதத்துவங்களாக அமைந்து விளங்குகின்றன.

தொன்மங்களை அழுத்திப்பேசுதல், சமூக நெறிப்படுத்தல்களை மேற்கொள்ளுதல், தலயாத்திரைகள் மற்றும் புனிதப்பயணங்களை நிகழ்த்துதல், இயற்கை, ஊரகப்பற்றினை அழுத்துதல், குறையிரத்தல் - வேண்டுகைகள் - முறையிடுதல் என்பவற்றை நிகழ்த்துதல், சமுதாய மதிப்புகளை எடுத்துரைத்தல், கடவுள் மற்றும் வழிபாட்டுச் சிறப்புகள் குறித்துக் கருத்துரைத்தல், சமய மெய்யியலுக்கான அடிப்படைகளைக் கட்டமைத்தல், மக்களால் நம்பத்தகுந்த வகையில் வகையில் இறையருளால் செயற்கரிய செயல்களை நிகழ்த்துதல், பக்தி மற்றும் தொண்டின் தேவைப்பாடு, முக்கியத்துவம் என்பவற்றினை அழுத்துதல், கலைப்பண்பாட்டினை வளர்த்தல் என்பன திருக்கோயில்களை நடுவுநிலைப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டன. பல்லவர்கால சமூக உளவியல் திருக்கோயில்களினூடு கட்டமைக்கப்பட்டமையினை இச்செயற்பாடுகளினூடாக அவதானிக்க முடிகின்றது.

பக்தி இலக்கியங்களின் எழுச்சிக்காலமாகக் கொள்ளப்படுகின்ற பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் காலத்தை வென்று நிற்கும் தனித்துவம்சம் கொண்டவை. அவை இலட்சிய வாழ்வுக்கான அடிப்படைகளை எடுத்தியம்புவன. அவற்றின் உள்ளடக்கங்கள் பலவித கருத்தாக்கங்களின் வெளிப்பாடுகளாக அமைவன. சமூகக்கட்டமைப்பு விருத்தியில் பங்கேற்பன. பக்தியின் உளவியலைப் பலவடிவங்களில் வெளிப்படுத்துவன. இவை போதிக்கின்ற பக்தி தொடர்பான கருத்தியல்கள் ஆன்மிக வாழ்வின் இலட்சியத்துக்கான அடிப்படை மாதிரிகளை வழங்குவதனால் சமூக உளவியலில் முக்கியத்துவமிக்க அடித்தளத்தைக் கட்டமைக்கின்றன எனலாம்.

**ஆய்வின் இலக்கும் முறையியலும்**

*பக்தி இலக்கியங்களை பன்முகவியற் தன்மையில் அணுகுகின்ற ஆய்வியல் முறைகள் இடம்பெற்று வருகின்றன. பக்தி என்பது எவ்வாறு சமூக உளவியலாகவும், சமூக உளவியல் கருத்துக்களுக்கு அடித்தளமாகவும் அமைகின்றது என்பதனை சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகளின் அடிப்படையில் வைத்து நோக்குவதற்கும் விளக்கமளிப்பதற்கும் இந்த ஆய்வு எத்தனிக்கின்றது. இதுவே இந்த ஆய்வின் பிரதான இலக்காகும். மூவர் முதலிகளின் தேவாரங்களை மையப்படுத்தி மேற்படி இலக்கினை அடைவதற்கு இந்த ஆய்வு முயற்சிக்கின்றது. தேவாரங்களை மூலத்தரவுகளாகவும், ஆய்வுப்பொருண்மை தொடர்பாக எழுந்தனவற்றை துணைத்தரவுகளாகவும் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.*

*இலக்கிய விபரண ஆய்வு முறையியலைப் பிரதான ஆய்வு முறையியலாகக் கொண்ட இந்த ஆய்வானது, மூவர்தேவாரங்களை உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்வதாகவும் அமைகின்றது. சமூக உளவியலின் கருத்துக் கோட்பாடுகளுக்குப் பிரயோக ரீதியில் விளக்கமளிப்பதாக மேற்படி பகுப்பாய்வு அமையும். உளவியல், தொல்படிமவியல் மற்றும் அறவியல் முதலான அணுகு முறைகளின் அடிப்படையில் இந்த ஆய்வு கட்டமைக்கப்படுகின்றது.*

**ஆய்வினை நியாயித்தல்**

*பக்தியியக்கச் செயற்பாட்டாளர்களைப் பொதுவாக சமயப் பின்னணியிலேயே அணுகுவதுண்டு. பல்லவர் கால சமுதாய வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கான வரலாற்றுச் சான்றுகளின் கர்த்தாக்களான நாயன்மார்களின் பனுவல்களை சமூகப்பண்பாடு நோக்கிய நிலையிலும் அணுகவேண்டும். அப்போதுதான் அவர்களது சமூக நோக்குநிலை வெளிக் கொணரப்படும். இன்று பல்வேறு வடிவங்களில் சமூக உளவியல் குறித்த கருத்தியல்கள் உளவியலாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. அத்தகைய கருத்தமைவுச் சிந்தனைகளைத் தேவாரங்களில் இனங்கண்டறியக் கூடியதாகவுள்ளது. தேவரப்பனுவல்களில் காணப்படுகின்ற சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள் குறித்த சிந்தனைகள் சமூக மறுமலர்ச்சி ஒன்றுக்கான அடிப்படையாகவும் அமைந்திருக்கின்ற சூழலில் அதன் சமூகமுக்கியத்துவம் குறித்து நோக்குவது அவசியமாகும். இதனடிப்படையில் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாகின்றது.*

*பக்தி இலக்கியங்களை அறிவியல் மனப்பாங்குடன் அணுகும் ஆய்வியல் போக்குகள் அண்மைக்காலங்களில் இடம்பெற்று வருகின்றன. இந்த அடிப்படையில் தான் இக்கட்டுரையும் தேவார முதலிகளின் பதிகங்களில் சமூக உளவியலின் கருத்துக் கோட்பாடுகள் என்ற கருத்தியல்களை அணுக முற்படுகிறது.*

## சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகள் தொடர்பான கோட்பாட்டு நோக்குநிலைகள்

மனித உணர்வு சமூக உளவியலுக்கு உட்பட்டதென சமூகவியலாளர்கள் குறிப்பிடுவர். சமூகம் பல்வேறு மாறுபட்ட குணங்களையும் கொள்கைகளையும் உடைய மனிதர்களால் ஆனது. இவ்வியல்புடைய மனிதன் ஒரு சமூகத்தில் ஒன்றுபடவும் ஒத்திசைவுடன் கூட்டுறவாக வாழவும் கற்றுக்கொள்கிறான். அதன் பின்னர் சமூகம் வளர, பயன்பெற விழையும் மனிதவுணர்வு ஏற்படுகின்றது. இச்செயற்பாடுகள் யாவும் சமூக உளவியலுக்கு உட்பட்டனவாகவே காணப்படுகின்றன.

சமூக உளவியல் அறிவியல் முறையில் சட்டதிட்டங்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை பரிசோதனை முறையில் அணுகி ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்து ஆராய்கின்றது. மேலும் முடிவுகளை மீண்டும் சோதனைக்குள்ளாக்கி விளக்குவதில் ஓர் அறிவியலாகவே உள்ளது (பரமேஸ்.செ.ரா.,2007:28).

சமூக உளவியலை ஆராய்ந்தவர்கள், ஒரு சில சமூக நடத்தைக்குப் பொதுவாக, ஒன்றைக் காரணமாக ஊகித்து அதிலிருந்து மற்றக் காரணிகளைத் தொடர்புபடுத்தித் தாம் எடுத்துக் கொண்ட அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வினைக் காண முயல்கின்றனர். மெக்டூகல், ராஸ் போன்ற உளவியல் ஆய்வாளர்கள் சமூகத்தை ஆராய்ந்ததன் அடிப்படையில் சில கோட்பாடுகளை கருத்தியல் சார்ந்து முன்வைத்தனர். இவற்றை "சமூக உளவியலின் கருத்துக் கோட்பாடுகள்" என்பர். அவையாவன,

1. இன்பியல் கோட்பாடு
2. தன்னலக் கோட்பாடு
3. இரக்கவுணர்ச்சிக் கோட்பாடு
4. போலிப்பாவனைக் கோட்பாடு
5. கருத்தேற்றம்

என்பனவாகும் (மேலது:31-38). இவை சமூக உறுப்பினர்கள் பெறும் சமூகப் பயன்களுக்கு அடிப்படையைத் தருகின்ற காரண — காரியங்களை எடுத்து விளக்குகின்றன. அத்துடன், மனிதனின் தனிப்பண்புகளும் விருப்பங்களும் சமூகப்பண்புகளுள் இடம்பெற்றும் அனைத்து மனிதர்களின் பொதுக் கோட்பாடாக வளர்ச்சியுற்றும் நிலைபேறடைந்திருக்கின்றன.

சமூக உளவியல் எதனை ஆராய்கின்றது? அதன் நோக்கமென்ன? என நோக்குவதும் இன்றியமையாததாகின்றது. உளவியல் மற்றும் சமூகவியல் ஆகிய இரு அறிவுத்துறைகளும் ஒன்றிணையும் புலமாக சமூக உளவியல் காணப்படுகின்றது. தனிமனித வாதத்தை மையப்படுத்திய உளவியல் புலத்திலிருந்து சமூக உளவியல் வேறுபட்டு நிற்கின்றது. மேற்படி உளவியல் வாதத்தினை புதுமையாக்கியும் வேறுபடுத்தியும் அமைக்கும் செயற்பாடுகளை சமூக உளவியல் வகுத்துக் கொண்டுள்ளது.

தொல்சமூகங்கள் அனைத்தும் சமூகப்பிணைப்புகளால் (Social Bonds) ஆக்கப்பெற்றன. சமூகத்தின் இயல்பும் நடத்தைகளுமே தனிமனிதர் வழியாக வெளிப்பாடு கொண்டன. தொல்குடியினரது பொருண்மிய நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு அவர்களுக்குரிய பிணைப்புகள் இடம்பெற்றன. அதன் வழியாகவே சமூகத்தின் அடிப்படை அலகாகிய குடும்பத்தின் சமூகமயமாக்கற் செயற்பாடுகள் இடம்பெற்றன. பண்பாடு என்பதும் குறிப்பிட்ட சமூகக் குழுவின் நடத்தைகளின் தொகுப்பையே சுட்டி நிற்கின்றது. அவற்றை அடியொற்றியே தனிமனித நடத்தைகளும் ஒழுங்கமைக்கப்படுகின்றன. மாற்றங்களின் நடத்தைகளே தனிமனிதரின் நடத்தைகளை நெறிப்படுத்துகின்றன (ஜெயராசா.சபா.,2008:42).

தற்போதைய சமூக உளவியலின் பாங்கு பல்வேறு கட்டங்களில் மேம்பாடடைந்துள்ளதாகக் கருதப்படுகின்றது. சமூக உளவியல் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைக் கவனத்திற்கொண்டு ஆராயுமிடத்து நமக்குக் கிடைக்கும் எண்ணற்ற உண்மைகளையும் நேரிற் கண்டறிந்த முடிவுகளையும் விளக்கங்கள் மற்றும் விபரங்களையும் தேட முற்படுகின்றது. யாதாயினும் ஓர் முறைகளில் அவற்றைச் சீர்படுத்தி புதிய முடிவுகளைக் காணமுயற்சிக்கின்றது. இவ்வாறு கண்டறிந்த கருத்துக் கோட்பாடுகளைக் கொண்டு தமது ஆய்வின் தேவைக்கேற்ப சமூக உளவியலை ஒழுங்குபடுத்தியுள்ளனர் சமூகவியலாளர்கள்.

சமூக உளவியல் என்பது தனிமனிதன் புறச்சூழ்நிலையில் சமூகத்துடன் கொள்ளும் தொடர்பை மட்டுமன்றி, அகவழியில் நிகழ்த்தும் சமூக நடத்தையையும் ஆராய்கின்றது. சமூக நடத்தைகளை,

- தனிநபர்க்கும் சமூகப் பொருள்களுக்கும் இடையே நிகழ்வன.
- தனிநபர்க்கும் தனிநபர்க்கும் இடையே நிகழ்வன.
- தனிநபர்க்கும் குழுவுக்கும் இடையே நிகழ்வன
- குழுக்களுடையே நிகழ்வன

எனப் பாகுபடுத்தி (பரமே,செ.ரா.,2007:12-15) நோக்குவர்.

சமூகத் தொடர்பு என்பது ஒரு தனியனுக்கும் அவனைச் சார்ந்த ஏனையோர்க்கும் இடையே நிகழும் தொடர்பு மட்டுமன்று, சமூகத்தூண்டல்களான குறியீடுகள், நாட்டாரியற் கூறுகள், சின்னங்கள் என்பவற்றுடன் கொள்ளும் தொடர்புகளையும் குறிக்கும். தனிமனிதனுக்குப் பல்வேறு தேவைகள் உள்ளன. அதனால் அவன் சமூகத்திலுள்ள ஏனைய உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிப்பான். இத்தொடர்புகளும் செயற்பாடுகளும் இடம்பெறும் போது நடத்தைகள் உருவாகின்றன.

சமூக நடத்தை எளிதில் உணர்ச்சிவயப்படுதல் எனும் கருத்துக் கோட்பாட்டு வழி நிகழ்வதாகக் கூறி இதன்மூலம் பல்வேறு வகையான சமூக நடத்தைக்கு ஒரு பொதுவான தொடர்பு உண்டென மெக்டூகல் கண்டறிந்தார். அவ்வாறே ராஸ் (E.A.Ross) என்பார் சமூக நடத்தைகளை விளக்க ஒரு சில வேளைகளில்

போலிப்பாவனை என்ற கோட்பாட்டையும், சிலவேளைகளில் கருத்தேற்றம் என்ற கோட்பாட்டையும் கையாண்டார். பிறர் பார்த்துக்கற்கும் இயல்பூக்கம் (*Instinct of Imitation*), இணைந்து வாழும் இயல்பு (*Gregariousness*), கருத்தேற்றம் (*Suggestion*), ஆதிக்கம் (*Dominance*) போன்றவற்றைக் கோட்பாடுகளாக எடுத்துக்கொண்டு அதன்மூலம் சமூக உளவியலாளர் பலரும் சமூக நடத்தையை விளக்க முற்பட்டனர். இதனாலேயே அவர்கள் பலவிதமான கோட்பாடுகளைச் சமூக நடத்தைக்கான காரணிகளாக ஊகித்துக் கூறியுள்ளனர். இவையே சமூக உளவியலின் கருத்துக் கோட்பாடுகளாகக் கொள்ளப்படுகின்றன.

## தேவாரங்களில் சமூக உளவியல் கருத்துக் கோட்பாட்டுச் சிந்தனைகள் பற்றிய பகுப்பாய்வு

எந்தக் காரியங்களையும் யாதாயினும் நோக்கம் மற்றும் எதிர்ப்பார்ப்பினை முன்னிறுத்தி மேற்கொள்ளும் இயல்புடைய நிலையில் பக்தி இயக்கச் செயற்பாடுகளும் சமூக நோக்கம் நிறைந்தனவாகக் காணப்பட்டன. பல்லவர் காலத்தில் தொழிற்பட்ட பக்தி இயக்கச் செயற்பாடுகளால் திருக்கோயில்கள் சமூகமயமாக்கப் பெற்றன. திருக்கோயில்கள் சமூக நடுவண்களாகத் தொழிற்படுவதற்கான அனைத்து விதமான சமூகமயமாக்கப் பெற்ற செயற்பாடுகளும் இக்காலச் சூழலில் நிகழ்ந்தன. திருக்கோயில் சார்ந்த சமூகப்பண்பாடுகள் கிராமங்கள், ஊர்கள், நகரங்களெனப் பரவிப்படர்ந்தன. பிரதேச மற்றும் வட்டார மக்களின் வாழ்வியல் மகிழ்வுடையதாகத் திகழ்வதற்கான சூழலும் திருக்கோயில்களை மையப்படுத்தி உருவாயின.

திருக்கோயில்களைச் சமூகமயமாக்கும் முனைப்பார்ந்த செயல்களை அப்பரும் சம்பந்தரும் மேற்கொண்டனர். சமூக நிலையில் திருக்கோயில்களின் முக்கியத்துவத்தினை இவர்கள் எடுத்துரைத்தனர். இவர்களின் சமயப்பிரசாரமும் அதற்கான யுக்திகளும் புலமைத்துவ அடிப்படையிலும் நன்கு திட்டமிடப்பட்டதாகவும் அமைந்திருந்தன. கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவியரின் இயல்புகள், திருவருட் செயல்கள், தலம், தீர்த்தம், வழிபாட்டுச் சிறப்பு, வழிபட்டுப் பயன்பெற்றோர் இயல்புகள் - சிறப்புகள், வாழ்வியல் மேம்பாட்டுக்கான அறவுரைப்புகள் என்பவற்றை முன்னிறுத்தியே தமது பாடல்களைப் பாடியதுடன் அவற்றினுடாகச் சமயப்பிரசாரமும் செய்தனர். இதனால் கோயில்கள் சமுதாய மையங்களாகத் தொழிற்பட்டதுடன் சமூகப்பண்பாடு மறுமலர்ச்சி அடையவும் அடிப்படையாக அமைந்தது.

திருக்கோயில் வழிபாடு என்பது "பக்தியின் உளவியல்" வெளிப்படும் ஒரு நடத்தைக் கோலமாகும். இச்செயன்முறையில் மனிதன் ஒருவன் தனியனாகத் தொழிற்படினும் அவன் குறிப்பிட்ட சில அமைப்புக்களுடன் இணைந்து நிற்க வேண்டிய சூழல் உள்ளது. இது தவிர்க்கவியலாத சமூகத் தொடர்பாகும். தனிமனிதன் பெறும் முதற் சமூகப்பயனும் இதுவேயாகும். இத்தகைய நிலைபேறு அவனைச் சமூகப்பண்பாடுகளிடையே ஊடாடச் செய்கின்றது. பக்தியின் உளவியல் தரும்

பயனுமிதுவே. பக்தியின் உளவியல் சமய உளவியலில் தனித்து நோக்கப்பட வேண்டிய அவசியம் இதனால் மேலெழுகின்றது.

தேவாரங்கள் தொடர்பான பாரத - ஈழ அறிஞர்களின் புலமைத்துவ மரபிலான நோக்கு நிலைகள் பன்முகமானவை. பல்லவர் காலத்துச் சமூக வரலாற்றினை எடுத்தியம்பும் இலக்கிய ஆதாரங்களில் தேவாரங்களுக்குத் தனித்துவமான இடமுண்டு. ஏலவே குறிப்பிட்டது போல சமண, பௌத்த சமய அதிகாரச் சூழலே அப்பனுவல்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. இப்பனுவல்கள் சமய உளவியலைத் தனக்குள் கொண்டிருந்தன. சமயப்பிரசார முறைமையில் முக்கியமான இடத்தினைப் பெற்றுத் திகழ்கின்றன. சமூக உளவியலைத் தன்தெல்லைக்குள் கொண்டிருந்த தேவாரங்களில் சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகளின் கருத்தமைவுகளை இனங்கண்டறிய முடிகின்றது.

சமூக நடத்தையை ஒரு கோட்பாட்டு வழி விளக்கமுறப்படுகையில் இன்ப துன்பங்களே மனித நடத்தைக்கு ஆணையிடும் தலைவர்கள் என்று கூறி மனித நடத்தைக்கு மூலகாரணம் துன்பத்தை விடுத்து இன்பத்தை நாடுதலே என்று பென்தாம் (டீநவொயஅ-1748-1832) குறிப்பிடுகின்றார் (பரமேஷ், செ.ரா.,2007:32). மனிதன் யாதாவது ஒரு நோக்கத்தினடிப்படையிலேயே நடத்தைக்கு உட்படுகின்றான். அந்த நோக்கம் வெற்றியின் இறுதியில் கிட்டும் மகிழ்ச்சியை அனுவிப்பதற்கே ஆகும். நடத்தைகள் வேறுபடினும் மனிதன் பெறுகின்ற இறுதி இலக்கின் முடிவு இன்பமேயாகும். அதற்கேற்பவே மனிதனும் தனியாகவோ அல்லது குழுமமாகவோ செயல்களைச் செய்ய எத்தனிக்கின்றான். திருக்கோயில்களில் இடம்பெறும் கூட்டுவழிபாடுகள், ஆடிப்பாடி வழிபடுதல், தொண்டுபுரிதல், நிவர்த்திக் கடன் கழித்து வழிபடல் முதலான செயல்கள் ஆன்மிக இன்பம் பெறுவதற்கு வித்திடுகின்றன.

"சிவனுறையும் கோயில் சூழ்ந்து தாழ்ந்து
இறைஞ்சத் தீவினைகள் தீருமன்றோ" (6:71:5)

எனவும்,

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வார்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" (5:5:5)

என்றும்

"நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தளைக்க இருக்கலாம்
சென்று நீர் திருவேட்களைத் துள்ளுறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே" (5:42:1)

மனிதனின் உணர்வு நிலைக்கேற்ப பக்தி, தொண்டு, மனநிறைவு, சமூகப்பணி முதலானவை ஒன்றாக இருப்பினும், அவை மேற்கொள்ளும் வழிகள்

வேறுபட்டமைகின்றன. ஆயினும் அவற்றினால் "ஆன்மக்களிப்பு" ஏற்படுகின்றது. ஆன்மக்களிப்பு என்பது மனநிறைவினால் நிகழ்வது. நாவுக்கரசர், நீற்றறையில் சமணர்களால் அடைக்கப்பட்ட சூழலில்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே" (4:90:1)

என்ற மனவுணர்வில் களிப்புக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த இன்பியல்சார்ந்த மனவுணர்வு துன்பகரமான சூழலில் எவ்வாறு உருவானது? அவரது இறையுணர்வும் மனநிறைவுமே இந்த ஆன்மக்களிப்புக்கு அடிப்படையானது. இந்த நடத்தை அவரது எண்ணத்தின் வெளிப்பாடேயாகும். இதுபோன்ற பல செய்கைகள் தேவாரங்களால் அறியக்கிடக்கின்றன. இவை திருக்கோயில் வழிபாடுகளால் கிடைக்கும் இன்பநிலையின் பயனுரைப்பனவாகவே உள்ளன.

இன்பியல் கோட்பாடும் தன்னலம் கருதியதாகும். ஒருவன் இன்பத்தை நாடித் துன்பத்தைத் தவிர்த்தல், அவனது தன்னலம் கருதிச் செயற்படுவதன் நோக்கிலே ஆகும் (பரமேஷ், செ.ரா.,2007:33). நாவுக்கரசர் இடபக்குறி, சூலக்குறி, திருவடி தீட்சை பெற்றமை, சுந்தரர் ஊன்று கோல், கண்பார்வை பெற்றமை முதலான செயல்களை இவ்வகையில் தன்னலம் கருதிய செயல்களாக இனங்காணலாம். சில சமயங்களில் பொதுநலம் கருதிச் சமூகப்பணி செய்யும் போது மகிழ்ச்சி ஏற்படுகின்றது. நாவுக்கரசர், சம்பந்தர் இணைந்து திருக்கதவம் திறக்கவும் மூடவும் பாடியமை, பாடிப்படிக்காசு பெற்றமை போன்றனவும் முதலிகள் மூவரும் இறைவன் நற்கருணையினால் அற்புதங்களை நிகழ்த்தியதும் சமூகப்பணியாகக் கொள்ளலாம். தேவார முதலிகள் நிகழ்த்திய அற்புதங்கள் தாமும் இன்புற்றுப் பிறரும் இன்புறுவதற்கான செயல்களாக இனங்காணத்தக்கன. இந்த நிகழ்வுகள் இறையருளின் வெளிப்பாடுகளாகும். ஆன்மாக்கள் இன்புறுதலுக்கான நிகழ்வுகளாக இவற்றை அணுகலாம். துன்பக்களைவும் இன்பத்தேட்டமும் இவற்றின் விளைவுகளாகும்.

"நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே!" (7:98:1)

எனச் சுந்தரரின் வேண்டுகையும் அதனால் பெற்ற நெல்லும் சமூகத்தின் தேவைக்கானவை. சமூகத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமென்பதற்கான வேண்டுகையினைச் சுந்தரர் தன் மனையாளின் கோரிக்கையாக முன்வைத்திருக் கின்றார். வேண்டுகையின் நிறைவேற்றம் சுந்தருக்கு மனநிறைவையும் உள இன்பத்தையும் கொடுத்திருக்கும்.

பிற்காலங்களில் திருக்கோயில்களை சமூக நடுவண்களாக்கி அவற்றினூடாக மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகள் இறுதியில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய மகிழ்ச்சியினை "ஈத்துவக்கும் இன்பம்" என வள்ளுவர் சுட்டுவது கவனத்திற்குரியது. ஆயினும் இம்மகிழ்ச்சி தன்னலத்தால்

தூண்டப்பட்டது என்பதனை மறுத்தலியலாது. எனவே சமூக நடத்தைகள் தன்னலத்தாலேயே எழுகின்றன.

"ஆப்பி நீரொடு அலகுக்கை கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்" (5:93:3)

என சமூக நடத்தைக்கான தூண்டலை நாவுக்கரசர் வெளிப்படுத்துகின்றார். நாவுக்கரசர், சுந்தரர் போன்றோரிடம் காணப்படும் கழிவிரக்கச் சிந்தனைகளும் சமூகத் தூண்டற் காரணிகளாக இனங்காணத்தக்கன. நமது சமூக நடத்தைக்கான தூண்டுதல்கள் தன்னலங்கருதித்தான் என்று மட்டுமல்லாது சமயம், பண்பாடு, நாட்டுப்பற்று போன்ற இயல்பு இயலுக்கு அப்பாற்பட்ட கோட்பாட்டின் வழியாகவும் இயலுகின்றது (பரமேக்ஷ்,செ.ர.,2007:34) என்று லெடான்டெக் எனும் அறிஞர் கூறுகின்றார்.

இதனடிப்படையில் சமயத்தையும் பண்பாட்டையும் காப்பதன் நோக்கில் சிலர் முற்படுவதன் மூலம் சமூக அமைப்புத் தோன்றுகின்றது. இதனூடு மொழிப்பற்று, ஊரகப்பற்று, நாட்டுப்பற்று ஆகியவற்றையுடைய மக்கள் ஒன்றுகூடி அவற்றைப் பாதுகாக்க முன்வருவர். பக்தி இயக்க செயற்பாடுகள் இப்பின்னணியிலேயே தோன்றி வளர்ந்தன. இயல்பு இயலுக்கு அப்பாற்பட்ட கோட்பாடுகளால் பண்பாட்டுக் கோலங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சமயத்தின் அறக்கோட்பாடுகளும் ஒழுக்க நெறிகளும் எழுந்தன. உதாரணமாக உயிர்களைப் பாதுகாப்பதற்காக கொல்லாமை நெறி வலியுறுத்தப்பட்டது. இவ்வாறே கள்ளாமை, பொய்யாமை, பிறர்மனை நயவாமை என தீயபண்புகளை விலக்கத் தூண்டியது. இவை தாம் அதற்கு ஆளாகிவிடக் கூடாது என்ற அச்சத்தினால் எழுந்தவை ஆகும். இவற்றைச் சமூக மதிப்புகளாக தேவாரங்கள் விளக்குகின்றன. இவை நேர்மறைப் பண்புகளாகவும் எதிர்மறைப் பண்புகளாகவும் விளங்குகின்றன.

இங்ஙனம் சமூக நடத்தைகள் தன்நலம் கருதியே இயங்குகின்றன எனினும், அந்தத் தன்நலம் எப்போதும் பொதுவான எதிரிகள் எனச் சிலர் இருப்பதனால் தொடர்ந்து செயற்படுகின்றது என்றும், சில நேரங்களில் அது சமயம், பண்பாடு, நாடு போன்றவற்றைக் காக்க நினைக்கும் போது செயற்படத் தொடங்குகின்றது என்றும் கூறுவர். எனவேதான் தன் நலமே சமூக நடத்தைக்கான பொதுக்காரணி என்றும் லெடான்டெக் விளக்குகின்றார்.

தனது கடந்த கால அனுபவங்களும் துன்பங்களும் ஒருவரிடம் தோன்றும் போது அவர் தன்னை அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள விரும்புகின்றார். இந்நிலையில் அவரை எதிர்ப்படும் மற்றவரும் அவரை ஒத்த சூழ்நிலையில் இருப்பதை அறியும் போது அவர்பால் இவருக்கு இரக்கவுணர்ச்சி தோன்றுகின்றது. இந்த இரக்கவுணர்ச்சியே பிறருக்காக எதையும் செய்யும் அன்பினைத் தோற்றுவிக்கின்றது. இத்தகைய ஒருவர், மற்றவர்பால் இரக்கவுணர்ச்சியால் தூ ண்டப்பட்டு, அவரோடு ஒத்து வாழவும், அவருக்கு உதவியாக இருக்கவும்

நினைக்கின்றார். இதன் வழியாக சமூக உளவியல் நடத்தை நடைபெற ஏதுவாகின்றது (மேலது:35).

தேவாரங்களில் இரக்கவுணர்ச்சியால் உந்தப்பட்ட நடத்தைக்கான வழிகாட்டல்களைப் பரக்கக் காணலாம். மேற்படி வழிகாட்டல்கள் இரக்கவுணர்ச்சியால் உந்தப்பட்ட வழிபாட்டு முறைகளுக்கும், தொண்டு நெறிக்கும், தர்மச் செயல்களுக்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. தேவாரங்களில் இழையோடியுள்ள இரக்கவுணர்வுச் சிந்தனைகளை, கழிவிரக்கங் கொண்டு தேவார முதலிகள் பாடிய பாடல்களோடு பொருத்திக் காணலாம். தன்னைச் சிறுமை செய்தல், இகழ்வாகக் கருதிக் கொள்ளுதல், இழித்தும் பழித்தும் கூறுதல் என்ற வகைமைகளில் கழிவிரக்கம் எனும் சொல்லினைச் சுருக்கமாக வரையறை செய்யலாம். கழிவிரக்கம் என்பது, கடந்து போனதை எண்ணி ஒருவன் தன்மேல் கொள்ளும் மிகையான வருத்தம் அல்லது அனுதாபம் ஆகும். (கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதிளு275). சென்றதை நினைந்து வருந்தும் செயல் அல்லது இரக்கம், தன் மீதான வெறுப்பினடிப்படையில் எழுகின்ற மனவருத்தம், குற்றத்திற்கு வருந்துதல், வருத்தப்படுதல் என்றும் பொருள் கோடலாம். இச்செயலால் ஒருவர் தன் எண்ணங்கள் நடத்தைகளைச் சிறுமைப்படுத்திக் கொள்வார். சான்றாக,

"கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேனே"

"முயல் விட்டுக் காக்கைபின் போனவாறே"

"அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே" (4:5:1-10).

என பதிகம் முழுமையும் நாவுக்கரசர் சமணநெறி நின்ற காலத்தினை எண்ணி தன்னிரக்க உணர்வின் அடிப்படையில் வெளிப்படுத்தி நிற்கும் நடத்தையினைக் குறிப்பிடலாம். இத்தகைய சிந்தனைகள்,

- தன்னை உணர்தலின் வழியுருவாதல்
- தமது ஆற்றாமையை - இயலாமையைப் பலவாறாக வெளிப்படுத்துதல்
- கடந்தகால தம்செய்கைகளின் மீது வெறுப்புக் கொண்டுரைத்தல்
- வாழ்வியல் அர்த்தங்களின் புரிந்துணர்தலில் வெளிவருதல்
- அனைத்திற்கும் முதல்வன் இறைவனே என்ற மனவுணர்வில் ஊற்றுக் கொள்ளுதல்
- வாழ்க்கையின் சலிப்பினால் தோன்றுதல்

என்ற காரணிகளின் அடிப்படையில் வெளிப்படும். மூவர் முதலிகளுள் நாவுக்கரசரிடமே கழிவிரக்கம் அதிகம் மிகுந்திருந்தது. சம்பந்தரைக் காட்டிலும் சுந்தரரிடத்தே இது மேம்பட்டிருந்தது.

தமது கடந்தகால செய்கைகளுக்காக ___ நடத்தைகளுக்காக இரக்கப்பட்டு தம் மீது வெறுப்புக் கொண்டு தம்மைச் சிறுமைப்படுத்தும் முறைமையினைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- பிற சமயத்திற்புகுந்து காலங்கழித்தமையை எண்ணுதல்
- தமது அறியாமைகளால் நிகழ்ந்த செயற்பாடுகளின் பின்னரும் தம்மை ஆட்கொண்டருளியவர் சிவபெருமானே என அவரின் பெருமைகளைக் கூறித்தம்மைச் சிறுமை செய்தல்
- பகுத்தறிவற்ற உயிரினங்கள், ஜடப்பொருட்களுடன் ஒப்பிடுதல்
- இயலாமையை வெளிப்படுத்துதல்
- நிலையாமையைக் கூறுதல்
- இழிந்தவன் என்றுரைத்தல்
- மனித வாழ்வியலில் உயர்ந்த எண்ணம், குறிக்கோள், நெறிமுறைகள் இல்லையே என்று குறிப்பிடுதல்.

இவ்வாறு இரக்கவுணர்வினால் அல்லது சிறுமைப்படுத்தும் நடத்தைகளால் தம்மை முழுமையாக அர்ப்பணித்தல் அல்லது முழுமையான ஒப்படைப்பு ஆகிய நிகழ்வு இடம்பெறுகின்றது. வைணவ மரபில் இதனைப் பூரணசரணாகதி என்பர். சரணாகதி தத்துவத்தின் பிரதிபலிப்பே ஒருவர் தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்ளுதற்கு அடிப்படையாகின்றது. சான்றாக,

"பாறினாய் பாவி நெஞ்சே பன்றிபோல் அரற்றிப்பட்டு" (4:77:7)

"பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே" (6:95:8)

"நாயேன் பலநாளும் நினைப்பின்றி
மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்" (7:1:2).

எனவரும் பாடல்கள் சிலவற்றை இங்கு நினைவிற்கொள்ளலாம். மேலும், திருக்கோயில்களை முன்னிறுத்தி மக்களிடத்தே நம்பிக்கையினை வரவழைக்கும் நோக்கில் வழிப்படுத்தியிருப்பதும் நோக்குதற்குரியது. இவ்வாறு மூவர் முதலிகள் வழிகாட்டும் இடங்கள் பலவாகும். சதன்றாக, "கொன்று செய்த கொடுமையாற் பலசொல்லவே நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே சென்று சென்று தொழுமின்", "இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே", "நிளநின்று தொழுமின் நித்தலும் நீதியால்'.", "வெளிறு தீரத் தொழுமின்", "புலைகள் தீரத் தொழுமின்." "பிழைகள் தீரத் தொழுமின்" (7:81:1,2,3,4,5,9) எனும் சுந்தரர் பாடல்களையும்,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன் முன்" (6:31:3)

"நன்று நாடொறும் நம்வினை போயறும்
"பொற்சடையானைத் தொழுமினே" (5:42:1)

எனும் நாவுக்கரசர் பாடல்களும் குறிப்பிடத்தக்கன. இத்தகைய வழிகாட்டல்கள் மக்கள் ஒன்றுகூடவும், ஒத்திசைவுபடவும் வழிவகுக்கும். ஒருவர் தாம் திருத்தல வழிபாட்டால் பெற்ற பயனை பிறருக்கும் கூறி நெறிப்படுத்துதல் என்பது பக்திப் பண்பாட்டினால் விளைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. நிவர்த்திக்கடன்களை கழித்து மகிழ்தல், பணம், பொருள் முதலியனவற்றைக் காணிக்கையாகச் செலுத்தி மனம் நிறைவு பெறுதல் என எழுந்த செயற்பாடுகள் யாவும் இரக்கவுணர்ச்சியால் எழுந்த வழிகாட்டும் சமூகப்பண்பின் வெளிப்பாடுகளே என்பதனை இனங்கண்டறியலாம். குழந்தைப் பேற்றினைக் கருத்திற்கொண்டு அச்சுதகளப்பாளர், மங்களாம்பிகை ஆகிய இருவரையும் திருவெண்காட்டுத் திருத்தலத்தினை நோக்கி அருணந்தி சிவாச்சாரியார் வழிப்படுத்துவதற்குச் சம்பந்தரின் திருவெண் காட்டுப்பதிகமே அடிப்படையானமை குறிப்பிடற்பாலது.

மனித நடத்தையின்மேல் ததும்புகின்ற சமூக இலக்கணத்தைப் பற்றி சமூக உளவியலாளர் விவரிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். 19ம் நூற்றாண்டளவில் தோன்றிய சிலர் சமூக நடத்தைகளுக்கும் சமூக இணக்கத்துக்கும் போலிப்பாவனையே சிறந்த ஒரு கோட்பாடாக இருப்பதாகக் கண்டனர் (மேலது:36-37). இக்கருத்துக் குறித்து வால்டெர் பேக்காட் (Walter Bagehot-1829-1877) கூறும்போது,

"காலப்போக்கில் தானாகவே ஒன்று பெரும்பான்மையினரால் பின்பற்றப்படும் மாதிரியாகத் தோன்ற, அதன்பால் கவரப்பட்டு மற்ற சந்ததியினரும் அவற்றைப் பார்த்துப் பின்பற்ற, தங்கள் நடையுடை பாவனைகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினர். நாளடைவில் பெரும்பான்மையினரால் பின்பற்றப்பட்ட ஒரு மாதிரியே, பின்னர் பலரையும் அவ்வழி உருவாக்கி அவர்களிடையே நிகழும் சமூக நடத்தையில் ஒரு சமூக இணக்கத்தைத் தோற்றுவிக்கிறது"

என்கிறார் (மேலது:37). இதுவே போலிப்பாவனை ஆகும். இது இயல்பூக்கத்தினால் விளையக் கூடிய செயற்பாங்கு ஆகும்.

சிறு வயதிலிருந்தே கற்றுக் கொள்ளும் சமூக நடத்தையே இதுவாகும். அப்பருவகாலத்தில் இருந்து இயல்பாகவே கண்டும், கேட்டும் உற்று வழி நோக்கியும் கடைப்பிடிக்கப்பட்டு வளருகின்ற சமூகப் பண்பாடே இதுவாகும். இதனடிப்படையில் பண்பாடென்பது கற்றுக் கொள்கின்ற நடத்தை என வரையறுப்பது பொருத்தமாக அமைகிறது.

திருக்கோயில்களில் போலிப்பாவனைகளால் நடந்தேறி வருகின்ற நித்திய, நைமித்திய, கிரியைகள், பூர்வ, அபரக் கிரியைகள், அன்னதானம், தாக சாந்தி நிலையம் அமைத்தல், மடம் அமைத்துப் பணி செய்தல் போன்ற தர்மச் செயற்பாடுகள் முதலியவை நடைபெறுவதற்கு பக்தியால் உருவாகி வளர்ந்த போலிப்பாவனைகள் வழிசமைக்கும் என்பதனை அறிந்து கொள்ளவியல்கிறது.

"கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரத்தானை பெருஞ்சாந்தி
காணாதே போதியோ பூம்பாவாய்" (சம்பந்தர்.தேவார).

என ஒரு செயலின் தன்மையினை எடுத்துக்கூறி, இரக்கத்தினை வெளிப்படுத்துவதன் மூலம் பெருஞ்சாந்தி எனும் நிகழ்வின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறே அக்கால சமூகத்தில் நிலைபெற்றிருந்த நீராட்டு விழா, பூசம், அட்டமி நாள், ஆதிரை நாள், ஐப்பசி ஓணம், கார்த்திகை விளக்கீடு, திங்கள் நாள், தேர், மாசிக்கடலாட்டு, வைகாசி ஊஞ்சல் எனப் பல்வேறு சடங்குகளும் திருவிழாக்களும் நினைவுபடுத்தப்பட்டிருப்பது குறிப்பிடற்குரியது.

கருத்தேற்றத்தின் ஆற்றல் சமூக உளவியலில் மிக மகத்தானதாகக் காணப்படுகின்றது. இரக்கவுணர்ச்சி, போலிப்பாவனை, மற்றும் கருத்தேற்றம் ஆகிய சமூக உளவியல் கோட்பாடுகள் ஓரளவிற்கு ஒரே பார்வையில், ஒரே கருத்து இலக்கில் செயற்படுகின்ற கோட்பாடுகளாகும். இவற்றுள் கருத்தேற்றமே அதிக முக்கியத்துவம் உடையதாகத் தோன்றுகின்றது. மெக்டூகல் (*McDougall*) இச்சொல்லினை வரையறை செய்கையில்,

"கருத்தேற்றம் என்பது, நாம் தொடர்பு கொண்டு உரையாடும் ஒருவருடைய சொற்களின் கருத்தினை ஏற்றுக் கொண்டு, பகுத்தறிவுக்கு ஏற்ற அடிப்படைக் காரணம் ஏதுமின்றி அவர் எண்ணங்களுக்கு நாம் இணக்கம் தெரிவிக்கும் ஒரு செயலாகும்"

என்று குறிப்பிடுகின்றார் (பரமேஷ்.செ.ரா:38). இக்கருத்தினை கூர்ந்து நோக்குமிடத்து கருத்தேற்றத்தி னால் ஒருவன் தூண்டப்படுகின்றான். இதனால்தான் மனிதன் சமூகத்தில் மதிக்கப்படுகின்ற பிறரது ஆணைகளுக்கும், கருத்துக்களுக்கும் தன்னை உட்படுத்தி இயங்கும் நிலைக்கு ஆளாகின்றான். இந்த இயங்கு நிலையிலேயே ஒருவரது சமூக நடத்தையும் இயங்குகிறது என்பர்.

"எமக்கு இந்தச் சரீரம் கிடைக்கப் பெற்றது நாம் கடவுளை வழிபட்டு முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது ஆறுமுகநாவலரின் புகழ்வாய்ந்த கூற்றாகும். பொதுவாக நடைமுறை வாழ்க்கையில் இந்தக் கருத்து ஏற்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றமை எம் கவனத்திற்குரிய தாகின்றது. நாவலர் இவ்வாறு கருத்தேற்றம் செய்வதற்கு, நாவுக்கரசரின் திருவங்கமாலைப் பதிகம் அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும் எனக்கருதுதலாம். மனிதன் தனதுடலின் ஒவ்வொரு உறுப்புகளாலும் கடவுளைக் குறித்துச் செய்யவேண்டிய வழிபாட்டினை நாவுக்கரசரின் மேற்படி பதிகம் வலியுறுத்துகின்றது. உடலுழைப்பினைத் திருக்கோயில் வழிபாட்டினூடாக நாவுக்கரசர் கருத்தேற்றம் செய்ததனையே ஆறுமுகநாவலர் மேற்போந்தவாறு கூறியிருக்க வழியேற்படுத்தியிருந்தது. எனவே மக்கள் இவ்வாறான கருத்துக்களுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டு கோயில் வழிபாடுகளிலும், நம்பிக்கைகளிலும், தர்ம காரியங்களிலும், சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுப் பயனடைவதனை அவதானிக்கலாம்.

திருக்கோயில்களில் நிகழ்கின்ற பெருமளவிலான செயல்கள் கருத்தேற்றத்தின் வாயிலாக நிகழ்கின்ற அதேவேளை பக்தியுணர்வின் அடிப்படையில் வளருகின்ற சமூகப்பண்பாட்டின் பயனாகவும் உள்ளன. சான்றாக,

"பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்" (சுந்த.தேவா)

என சுந்தரரின் திருக்கேதீஸ்வரம் - பாலாவி மீதான கருத்தேற்றம் இன்றும் பாலாவித் தீர்த்தத்தின் மீதான நம்பிக்கையினையும், வழிபாட்டின் பயனையும் அனுபவிப்பதற்கானதாக உள்ளது. இவ்வாறே, சம்பந்தரின் திருவெண்காட்டுப் பதிகமும் தீர்த்தத்தின் சிறப்புரைப்பதாக இனங்காணலாம். இவ்வாறாக தேவாரமுதலிகள் தமது பதிகங்களில் கருத்தேற்றம் செய்திருக்கின்ற கருத்தியல்களால் திருக் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு சமூகப்பண்பாடு மறுமலர்ச்சி அடைய தூண்டுதல் அளித்துள்ளனர் எனலாம். இந்தவகையில், சைவசமூகத்தவர்கள் திருக்கோயில்களால் பெறுகின்ற சமூகப்பயன்கள் பலவாகக் காணப்படுகின்றன. "எல்லாத் தீங்கையும் நீக்குவர் என்பதால் நல்லார் நாமம் நமசிவாயவே", என பஞ்சாட்சர உச்சாடனமும், திருநீறணியும் வேளைகளில் "மந்திரமாவது நீறு" என உச்சரிப்பதும், உணவுண்ணும் காலங்களில், "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்.."எனும் பதிகம் பாடுவதும், கவலைகள், துன்பங்கள் ஏற்படுங்காலத்தே, "வேயுறு தோளிபங்கள் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி.."எனும் பதிகம் பாடுவதும், திருவைந்தெழுத்து ஓதுவதும் ஆகிய நடத்தைகள் இத்தகைய கருத்தேற்றத்தின் அடிப்படையில் நிகழ்கின்றனவாகும்.

**முடிவுகளும் பெறுபேறுகளும்**

தென்னிந்திய வரலாற்றில் சைவசமயத்தின் வளர்ச்சியில் திருப்புமுனையை ஏற்படுத்திய காலம் பல்லவர் காலமாகும். பக்தி இயக்கத்தின் தோற்றமும் செயற்பாட்டியங்கியலும் சைவ சமூகப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இக்காலத்தில் தமிழகம் மனித மைய ஈர்ப்புச் சூழலில் இருந்து சமயமைய ஈர்ப்புச் சூழலுக்கு மாறத் தொடங்கியதாக அறிஞர்கள் கருதுவர். இத்தகைய பின்புலத்திலே சமூக உளவியலினடிப்படையில் சமுதாய தத்துவம் ஒன்று படிமலர்ச்சி கண்டிருந்தமையினைப் பல்லவர்கால பக்தி இயக்கச்சூழலில் இனங்கண்டறியலாம். பக்தியின் உளவியல் திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

பக்தி இயக்கத்தின் செயற்பாட்டினால் சமுகமயப்படுத்தப்பட்ட திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த சமூகப்பண்பாட்டினையும், அதன் சமூகப் பயன்களையும் நோக்கின் சமூக உளவியல் கருத்துநிலைகளை விளங்கிக் கொள்ளவியலும். இப்பின்னணியிலேயே இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இதனடிப்படையில் சமூக உளவியலின் கருத்துக் கோட்பாட்டின் கூறுகளை தேவாரங்களில் பகுப்பாய்வு செய்து சான்றுகளூடாக இந்த ஆய்வு விவாதித்திருக்கின்றது. பக்தி இலக்கியங்கள் சமூக உளவியற் கூறுகளையும் தம்முட்கிடையாகக் கொண்டிருக்கின்றன எனும் கருதுகோள் இந்த ஆய்வினூடு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களினூடு கட்டமைக்கப்பட்டிருக்கின்ற பக்தியின் உளவியல் பலவகைமைகளில்

வெளிப்படுவதனை தேவாரப்பனுவல்களில் இனங்கண்டறியப்பட்டுள்ளது. மேற்குலகச் சிந்தாந்தங்க ளின் வரவுகளுக்கு முன்பதாகவே பக்தியை ஓர் உளவியலாகவும் ஆன்மிக நிலையில் மேம்படுவதற்கான மூலதனமாகவும் தேவாரங்கள் எவ்வாறு கொண்டுரைத்தன என்பதனை இந்த ஆய்வின் தெளிவுபடுத்துகின்றது.

**உசாத்துணைகள்**


1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம், முதலாந் திருமுறை, 1987, யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.
2. நடராசன், பி.ரா., 2004, திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், 1,2,3 திருமுறைகள், வரலாற்று முறையில் மூலமும் உரையும், (மூன்று பாகங்கள்), சென்னை, உமா பதிப்பகம்.
3. நடராசன், பி.ரா., 2004, திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், 4,5,6 திருமுறைகள், வரலாற்று முறையில் மூலமும் உரையும், (மூன்று பாகங்கள்), சென்னை, உமா பதிப்பகம்.
4. நடராசன், பி.ரா., 2004, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், 7ஆம் திருமுறை, வரலாற்று முறையில் மூலமும் உரையும், சென்னை, உமா பதிப்பகம்.
5. சிங்காரவேலன், சொ., 1969, திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத்திறனாய்வும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
6. கைலாசபதி,க., 1990, இரண்டாம் பதிப்பு, இலக்கியமும் திறனாய்வும், குமரன் பப்ளிக்ஷர்ஸ், சென்னை.
7. அருணாசலம்,ப., 1983, பக்தி இலக்கியம், பாரிபுத்தகப் பண்ணை, சென்னை.
8. பாஸ்கரன்,க., 1994, சமுதாயத் தத்துவம், தத்துவமையம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
9. பரமேக்ஷ்,செ.ரா., 2007, சமூக உளவியல், சாந்தா பப்ளிக்ஷர்ஸ், சென்னை.
10. அரங்க இராமலிங்கம், 2003, திருஞானசம்பந்தரின் ஆளுமைத்திறம், அநுராகம், கண்ணதாசன் சாலை, சென்னை.
11. ஜெயராசா,சபா.,2008, உளவியல் முகங்கள், சேமமடு பதிப்பகம்.

# பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வியலாளர்களின் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டாய்வுகள் : ஒரு வரலாற்றுப் பார்வை

கலாநிதி எம். எம். ஜெயசீலன்

இலங்கையின் புலமைமரபு விகசிப்புக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு மிக விரிந்ததாகும். இலங்கையின் ஒரேயொரு பல்கலைக்கழகமாகக் குறிப்பிட்ட காலம்வரை (1942 - 1959) இயங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு உள்நாட்டுப் புலமைமரபு ஊற்றுக்களைப் பேணுதலும் அவற்றை அடுத்த தளத்தைநோக்கி விரிவுபடுத்துதலும் அடிப்படையான கடமைகளாக விளங்கியுள்ளன. அதனைத் தொடக்ககாலப் பேராதனைக் கல்வியலாளர்கள் சிறப்பாக மேற்கொண்டுள்ளனர். அவர்கள் இலங்கையின் வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம், மொழி முதலானவற்றின் தொன்மையை மீட்டெடுத்து, அவற்றின் தொடர்ச்சி மற்றும் உட்கூறுகளை ஒரு வரன்முறையான கட்டமைப்புக்குள் கொண்டுவந்ததுடன் அவை தொடர்பான புலமைத்துவ நிலையிலான ஆய்வுகளுக்கு ஆழமான அடித்தளத்தை இட்டனர். மரபின் தொடர்ச்சியையும் நவீனத்துவத்தின் அடிப்படைகளையும் இணைத்து அவர்கள் உருவாக்கிய அறிவுப்பாரம்பரியமே அசல் இலங்கைத்துவத்தைக் கட்டியெழுப்பத் துணைசெய்தன.

பேராதனைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், "வரலாறு" என்ற துறை இயங்கிவந்தாலும் நாடு சுதந்திரம் பெற்ற பின்னரே இலங்கை வரலாற்றின்மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது. அதன் ஒரு வெளிப்பாடாகவே பேராதனைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட "இலங்கை வரலாறு" (இரு தொகுதிகள் 1959 ரூ 1960) அமைகிறது. அந்நூலின் வரலாற்றுக் கட்டமைப்பிலும் கருத்தியலிலும் மாற்றுக் கருத்துக்கள் பல உள்ளபோதிலும், இலங்கை வரலாற்றைச் சுதேசிய நிலைநின்று அதிகாரபூர்வமாக வரையறுக்கும் முன்னோடி முயற்சி என்றவகையில் அந்நூலுக்குத் தனிச்சிறப்பு உண்டு. இலங்கை சுதந்திரம் பெற்றதும் சுதேசிய நிலைநின்று நாட்டின் வரலாற்றைக் கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்தபோது அப்பொறுப்பினைப் பேராதனைப் புலமைச் சமூகம் ஏற்றுக்கொண்டமைக்குச் சான்றாக அந்நூல் விளங்குகிறது.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே தொல்லியல் ஆணைக்குழு (1868), தொல்லியல் ஆணையாளர் பதவி (1875), தொல்லியல் திணைக்களம்

(1890) ஆகியன உருவாக்கப்பட்டு, தொல்லியல் மற்றும் வரலாற்று மூலங்களை ஆவணப்படுத்தலும் அவை தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடலும் இடம்பெற்றபோதிலும் அவை உயர்குழாத்தினருடைய ஆய்வுத் துறைகளாகவும் காலனிய மனோபாவம் மிக்கவையாகவும் விளங்கியுள்ளன. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரே அந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்நிய ஏகாதிபத்தியத்தின்கீழ் கட்டுண்டிருந்த இலங்கை, சுதந்திரம் பெற்றதும் தன் வரலாற்றுத் தொன்மையைத் தேடத் தொடங்கியதுடன் இழந்த பண்பாட்டுச் செழுமையை மீட்டெடுக்க முனைந்தது. அதனால் அக்காலத்தில் இலங்கையின் வரலாறு, பண்பாடு முதலான துறைகள்சார்ந்த ஆய்வுகள்மீதான ஈடுபாடு அதிகரித்தது. அதன்வெளிப்பாட்டைப் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வுச் செயற்பாடுகளில் கண்டுகொள்ள முடிகிறது. அதேவேளை, 1960இல் ஆரம்பமான உயர்கல்வி வரையான தாய்மொழிவழிக்கல்வி வரலாறு, தொல்லியல் முதலான துறைகளைச் சாதாரண மக்களிடத்தில் கொண்டுசேர்த்தது.

இலங்கையில் தமிழ்க் கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தல், அவற்றை வாசித்தல், மைப்படிப் பிரதியுடன் வாசகங்களை வெளியிடல், தமிழ்க் கல்வெட்டுகள் பற்றி விரிவான விளக்கக் குறிப்பு எழுதுதல் முதலானவை காலனியக் காலத்தில் இடம்பெறத் தொடங்கியபோதிலும் 1960கள் முதலே அவை பற்றிய புலமைத்துவ நிலையிலான ஆய்வுகள் பரவலாக இடம்பெற்றன. அதற்கு முற்பட்ட காலத்தில் னு.ஆ.னுந.ணு. விக்கிரமசிங்க, செனரத் பரணவிதான ஆகியோர் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றி விரிவான கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட "யுனிவர்சிட்டி ஒப் சிலோன் ரிவிவ்" (University of Ceylon Review), "த சிறிலங்கா ஜர்ணல் ஒப் த ஹியுமணிட்டிஸ்" (The Sri Lanka Journal of the Humanities) முதலான சஞ்சிகைகளிலும் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க ஆண்டு மலரான "இளங்கதிர்", பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க ஆண்டு மலரான "இந்து தர்மம்", பேராதனைக் கலைக் கல்விக் கழகம் வெளியிட்ட ஆய்விதழான "சிந்தனை" ஆகியவற்றிலும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இலங்கை வரலாறு மற்றும் சமூக கற்கைகள் வெளியீட்டு மன்றத்தால் வெளியிடப்பட்ட "த சிலோன் ஜர்ணல் ஒப் ஹிஸ்டோரிக்கல் அண்ட் சோசியல் ஸ்டடிஸ்" (The Ceylon Journal of Historical and Social Studies) என்ற இதழிலும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வியலாளர்களே அம்மன்றத்தில் அதிகளவில் பங்களித்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையிலும் வரலாற்றுத் துறையிலும் பணியாற்றிய பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுகளில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். 1956ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தின் பின்னர் இலங்கையில் தமிழரின் தொன்மையைத் தேடுதலும் தொன்மையை நிறுவுதலும் சமூக - அரசியல் - பண்பாட்டுத் தேவைகளாக மேற்கிளம்பியுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழத்தின்

தமிழ்க் கல்வியலாளர்கள் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் குறித்து நிகழ்த்திய தேடுதல்களும், அவை பற்றி மேற்கொண்ட ஆய்வுகளும் மேற்படி தேவைகளின் பிரதான பகுதியை நிறைவுசெய்வனவாக அமைந்தன.

பேராதனைக் கல்வியலாளர்களுள் தமிழ்க் கல்வெட்டுகள் தொடர்பில் புலமைத்துவ நிலையிலான ஆய்வைத் தொடக்கி வைத்தவராகக் க.கணபதிப்பிள்ளை விளங்குகிறார். அவர் தன் கலாநிதிப்பட்ட ஆய்வை, "7ஆம், 8ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டுகளின் மொழி" என்ற தலைப்பில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார் (1933-35). "இதுவே தமிழ்ச் சாசனம் பற்றி மேற்கொள்ளப்பட்ட முதலாவது கலாநிதிப்பட்ட ஆய்வாகும்" (சிவத்தம்பி, 1997: 8). தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளின் மொழியை விளக்கமுறை அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதாக அமைந்துள்ள இந்த ஆய்வு, பேராசிரியர் ஆர்.எல். ரேணரின் (சு.டு.வுரசநெச) மேற்பார்வையின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வானது இலக்கணம், சாசனங்கள், சுட்டி எனும் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. முதற்பகுதியில் வரிவடிவம், ஒலிகள், பெயர்சொற்கள், பெயரடைகள், பிரதிப்பெயர்கள், எண்ணுப்பெயர்கள், வினைச் சொற்கள், இடைச்சொற்கள் முதலானவை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட கல்வெட்டுகளினதும் செப்பேடுகளினதும் வாசகங்களும் அவை பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. மூன்றாம் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட கல்வெட்டுகளில் இடம்பெறும் சொற்கள் அகர வரிசையில் திரட்டித் தரப்பட்டுள்ளன. அவை இலக்கண அடிப்படையில் எந்தப் பகுப்பைச் சேர்ந்தவை என்ற குறிப்பும் அவற்றின் பொருளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மொழியியல் ஆய்வும் கல்வெட்டியலாய்வும் தமிழ்ச் சூழலில் வளர்ச்சியடையாத காலத்தில் கணபதிப்பிள்ளை மேற்கொண்டுள்ள இந்த ஆய்வு மிகுந்த கவனத்துக்குரியதாக விளங்குகிறது. அதன் முக்கியத்துவம் கருதி திராவிட மொழியியல் கழகம் தனது 25வது வருட கொண்டாட்டத்தின்போது (1997) கணபதிப்பிள்ளையை முன்னோடித் திராவிட மொழியியலாளர்களுள் ஒருவராகக் கௌரவித்தது. குமரன் புத்தக இல்லம் அவருடைய ஆய்வை, ஆய்வு நிகழ்த்தப்பட்டு 69 ஆண்டுகளுக்குப் பின்னர் "A Study of the language of the Tamil Inscriptions of the 7th and 8th centuries A.D." (2004) என்ற தலைப்பில் கா.சிவத்தம்பியின் விரிவான குறிப்புடன் நூலாக வெளியிட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய கணபதிப்பிள்ளை யுனிவர்சிட்டி ஒப் சிலோன் ரிவிவ் (ருniஎநசளவைல ழக ஊநலடழn சுநஎநைற) சஞ்சிகையில் "மொரகாவெல கல்வெட்டு" (1960), "பண்டுவஸ்நுவர கல்வெட்டு" (1960), "மாங்கனாய்க் கல்வெட்டு" (1962) ஆகியவற்றின் வாசகங்களை ஆங்கில மொழிபெயர்ப்போடு விளக்கக் குறிப்புடன் வெளியிட்டுள்ளார். அவர் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வில் கவனம் செலுத்தும் முன்னர் அவருடைய மாணவர்களுள் ஒருவரான கா.இந்திரபாலா, இளங்கதிர் இதழில் "ஈழநாட்டுத் தமிழ்க் கல்வெட்டுகள்" (1958), "யாழ்ப்பாணத்துக்

கல்வெட்டுகள்” (1959) ஆகிய கட்டுரைகளை எழுதியுள்ளார். கணபதிப்பிள்ளையின் மாற்றொரு மாணவரான ஆ. வேலுப்பிள்ளையும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டாய்வுகளில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளார். அவர் கணபதிப்பிள்ளையின் மேற்பார்வையின்கீழ் “சடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன் ஆகியோர் காலத்துச் சாசனங்களின் மொழி” என்ற தலைப்பில் கலாநிதிப் பட்ட ஆய்வை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டதுடன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் டி.பறோவின் (T. Burrow) மேற்பார்வையின்கீழ், “கி.பி. 800 - 920 காலப்பகுதிக்குரிய சாசனங்களின் மொழி” என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு மேலுமொரு கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுள்ளார். இந்திரபாலாவும் வேலுப்பிள்ளையும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டாய்வுகளில் மிகுந்த ஈடுபாடுகாட்டிய முன்னோடிகளாவர். அவர்களிருவருக்கும் ஆசிரியராகவிருந்து கல்வெட்டியலைப் பயிற்றுவித்ததுடன் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் குறித்த ஆய்வுகளிலும் கணபதிப்பிள்ளை ஈடுபட்டுள்ளமையால் அவரை இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுகளுக்கு வளமான அடித்தளத்தையிட்ட “முன்னத்தி ஏராக” அடையாளப்படுத்தலாம். அவர் ஏற்படுத்தித் தந்த தடத்தில்நின்றே கா.இந்திரபாலா, ஆ. வேலுப்பிள்ளை, சி. பத்மநாதன், செ. குணசிங்கம் ஆகியோர் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் குறித்து ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தில் நீண்ட காலம் பணியாற்றி, பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வுப் பேராசிரியராகக் கடமையாற்றிய செனரத் பரணவிதான இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிக் கணிசமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். தொல்லியல் திணைக்களத்தில் தொழிற்பட்ட காலத்தில் “முதலாம் விஜயபாகுவின் பொலநறுவைக் கல்வெட்டு” (1926), “பளமோட்டை கல்வெட்டு” (1943), “புதுமுத்தாவ தூண் கல்வெட்டுகள்” (1943) முதலான தமிழ்க் கல்வெட்டுகள் குறித்து விரிவான குறிப்புகளை எழுதியுள்ளார். பல்கலைக்கழகப் பணிநியமனத்துக்குப் பின்னர் “லங்காதிலக்க கல்வெட்டுகள்” பற்றி யுனிவர்சிட்டி ஒப் சிலோன் ரிவிவில் (1960) எழுதிய கட்டுரையில் லங்காதிலக்க விகாரையில் உள்ள தமிழ்க் கல்வெட்டையும் ஆய்வுக்குட்படுத்தியுள்ளதுடன் அதன் வாசகங்களை ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு என்பவற்றுடன் தந்துள்ளார். யுனிவர்சிட்டி ஒப் சிலோன் ரிவிவ் சஞ்சிகையிலேயே “பண்டுவஸ்நுவர” (1962) தமிழ்க் கல்வெட்டு பற்றிய குறிப்பொன்றையும் எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அதற்கு முந்திய இதழில் க.கணபதிப்பிள்ளை பண்டுவஸ்நுவர கல்வெட்டு குறித்து எழுதிய கட்டுரையில் இடம்பெறும் சில கருத்துகளை மறுத்து எழுதியுள்ளார்.

கணபதிப்பிள்ளையை மறுத்து பரணவிதான முன்வைத்துள்ள கருத்துக்கள் சில வலிந்து அர்த்தம் கொள்ளப்பட்டவையாகவும் பொருத்தமற்றவையாகவும் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, பண்டுவஸ்நுவர கல்வெட்டில் குறிப்பிடப்படும் “தென்னிலங்கைக்கோன் பராக்கிரமபாகு நிஸ்ஸங்க மல்லன்” என்ற மன்னன்

பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடலாம். இலங்கைத் தமிழ்க் கல்வெட்டில் "தென்னிலங்கை" என்ற பாகுபாடு பண்டுவஸ்நுவர கல்வெட்டில் முதன்முதல் இடம்பெற்றுள்ளது. கல்வெட்டில் வரும் "தென்னிலங்கைக்கோன்" என்ற பதத்தைப் பரணவிதான, "தென்னிலங்கையை ஆட்சி செய்தவன்" என்ற பொருளில் வாசித்துள்ளார். அதனால் அக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னன் நாடு முழுவதையும் ஆட்சி செய்த நிஸ்ஸங்க மல்லனான (பொ.ஆ. 1187-1196) இருக்க முடியாது எனக் கூறி, மாகன் வட பகுதியை ஆண்ட காலத்தில் தென்னிலங்கையில் ஆட்சி புரிந்த மன்னனொருவனையே கல்வெட்டு குறிக்கிறது என்ற முடிவுக்கு வந்துள்ளதுடன் தமிழ்நாட்டில் கோப்பெருஞ்சிங்கனுக்கு ஆதரவாகப் போர்ப்புரிந்து இறந்துபோன பராக்கிரமபாகு என்பவனையே இக்கல்வெட்டு குறித்துநிற்கிறது என்று குறிப்பிட்டுள்ளார் (1962 : 18). எனினும், பரணவிதானவின் வாதங்களை நிரூபிப்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. கணபதிப்பிள்ளையின் பொருள்கொள்ளல் வேறுபட்டதாக அமைந்துள்ளது. அவர் தற்காலத்தில் நிலவுகின்ற வட இலங்கை - தென்னிலங்கை என்ற பாகுபாடு முற்காலத்திலும் நிலவியது எனக் கொள்வதன் பொருத்தமின்மையைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் நிஸ்ஸங்க மல்லன் இலங்கை முழுவதும் ஆட்சி செலுத்தினான் எனச் சிங்களக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதால் தென்னிலங்கை என்பதைத் தென் திசையில் அமைந்துள்ள இலங்கை எனப் பொருள் கொண்டுள்ளார் (1960: 158,159). வரலாற்றுப் பின்புலத்தில் நோக்குகின்றபோது கணபதிப்பிள்ளையின் வாசிப்பு பொருள் பொருத்தமுடையதாக இருக்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் கல்வி பயின்று, அத்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது வரலாற்றுத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றிய கா.இந்திரபாலா, இலங்கையின் வரலாற்று எழுதியலுக்கும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டியலுக்கும் பெரும் பங்களிப்பை நல்கியுள்ளார். பல்கலைக்கழகத்தில் வெளிவந்த சஞ்சிகைகளிலும், அவர் ஆசிரியராக இருந்து சிறப்புடன் வெளியிட்ட சிந்தனை இதழ்களிலும் கருத்தரங்க மலர்களிலும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய சிறப்புவாய்ந்த கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சிந்தனை இதழில் அவர் எழுதிய "ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள்" (1968), "அனுராதபுரத்திலுள்ள குமாரகணத்துப் பேரூரார் கல்வெட்டுகள்" (1968), "அனுராதபுரத்தில் நான்குநாட்டார் கல்வெட்டு" (1968), "கிழக்கிலங்கைச் சாசனங்கள்" (1968), "யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுகள்", (1969) ஆகிய கட்டுரைகளும் இவை தவிர பிற சஞ்சிகைகளிலும் இதழ்களிலும் எழுதிய "உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலுள்ள கல்வெட்டுகள்" (1973), "கந்தளாயில் கண்டுபிடிக்கப்பட்ட சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு" (1975) முதலான கட்டுரைகளும் ஆங்கிலத்தில் எழுதிய "*The Nainativu Tamil Inscription of Parakramabahu I (1963),'Epigraphical Discoveries in Ceylon in the Last Decade (1959-1969)], (1969) [Some Medieval Mercantile Communities of South India and Ceylon] (1970), [South Indian Mercantile Communities in*

*Ceylon, Circa 950-1250] (1971), [An Inscription of the 10th Year of Cola Lankesvara from Kantalay> Sri Lanka]* **(1975)** முதலான கட்டுரைகளும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டு ஆய்வில் புதுஒளியைப் பாய்ச்சின.

இந்திரபாலா "எபிக்கிராபியா தமிழிகா" (*Epigraphia Tamilica*) என்ற இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகான இதழை 1971ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். அதில் பத்துக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. "பரகேசரி வர்மனின் 33ஆம் ஆட்சி ஆண்டுக்குரிய குடுமியான்மலைக் கல்வெட்டு" பற்றி கே.ஜி. கிருஸ்ணனுடைய கட்டுரை தவிர ஏனையவை யாவும் இந்திரபாலாவினால் எழுதப்பட்டவையாகும். அவற்றுள் "மெதிரிகிரிய சோழர் கல்வெட்டு" பற்றிய கட்டுரையை மட்டும் இந்திரபாலா பி.எல். பிரேமதிலக்கவுடன் இணைந்து எழுதியுள்ளார். கல்வெட்டு வாசகம், அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு என்பவற்றுடன் விளக்கக் குறிப்புகளை விரிவாகத் தந்துள்ளார், இந்திரபாலா. புதிதாகப் பல கல்வெட்டுகளை வாசித்துள்ளதுடன் ஏலவே வாசிக்கப்பட்ட கல்வெட்டுகளின் வாசகங்களைத் திருத்திய வடிவில் வெளியிட்டு வரலாற்றுப் பின்னணியில் கல்வெட்டுச் செய்திகளை ஆராய்ந்துள்ளார். மகாவம்சம், சூளவம்சம் முதலான வரலாற்று நூல்கள், சிங்களக் கல்வெட்டுகள், ஏனைய தொல்லியல் ஆதாரங்கள் போன்றவற்றில் இடம்பெறும் வரலாற்றுச் செய்திகள் யாவற்றையும் ஒருங்கிணைத்து, தமிழ்க் கல்வெட்டுகள் தொடர்பில் அவர் மேற்கொண்டுள்ள ஆய்வுகள் இலங்கையின் இனக்குழும வரலாறு, இலங்கையின் பண்பாட்டு உருவாக்கம், அதில் தமிழர்களின் பங்களிப்பு முதலானவற்றில் புதிய திறப்பினை ஏற்படுத்தியுள்ளன. அவரின் "இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம்பெற்ற வரலாறு (2006 - இந்நூல் *The Evolution of An Ethnic Identity: The Tamils in Sri Lanka* என்ற தலைப்பில் 2005ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் முதலில் வெளிவந்தது)," "பண்டைய இலங்கை : கடந்தகாலப் பார்வைகள் (*Ancient Sri Lanka : Glimpses of The Past - 2017* - இளையோருக்கென எழுதப்பட்ட நூல்)" ஆகிய நூல்கள் தமிழ்க் கல்வெட்டுக்களையும் அடிப்படை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

வி.சிவசாமி, ஏ.கந்தையா ஆகியோருடன் இணைந்து யாழ்ப்பாணத் தொல்லியல் கழகம் எனும் அமைப்பை 1971ஆம் ஆண்டு உருவாக்கிய இந்திரபாலா, அக்கழகத்தின் மூலம் தமிழ்ச் சூழலில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் தொல்லியல் விழிப்பை ஏற்படுத்தியதுடன் தொல்லியல்சார் தேடுதல்களுக்கும் ஆய்வுகளுக்கும் சிறந்த களத்தினை ஏற்படுத்தியுள்ளார். இலங்கையில் பிரதேசவாரியாக உருவாக்கப்பட்ட முதலாவது தொல்பொருளியல் கழகம் என்ற சிறப்பு இக்கழகத்துக்கே உண்டு. யாழ்ப்பாணப் பிராந்தியத்தை நிலைகளமாகக் கொண்டு இக்கழகம் உருவாக்கப்பட்டிருந்தாலும் அதனுடைய நோக்கமும் செயற்பாடுகளும் பிராந்திய எல்லைகளைத் தாண்டியனவான விளங்கியுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவுகள், சாசனவியல் தொடர்பான தொடர் விரிவுரைகள், சாசனவியல் கருத்தரங்குகள், தொல்பொருளியல் மேலாய்வுகள், தொல்பொருளியல் கண்காட்சிகள் போன்றன யாழ்ப்பாணத் தொல்லியல் கழகத்தின் மூலம்

மேற்கொள்ளப்பட்டன. பூர்வகலா என்ற சஞ்சிகையை அக்கழகம் 1973ஆம் ஆண்டு முதல் வெளியிட்டது. தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட சிறப்புவாய்ந்த கட்டுரைகள் அந்த இதழ்களில் இடம்பெற்றுள்ளன. அத்துடன் நூல் வெளியீட்டு முயற்சியிலும் யாழ்ப்பாணத் தொல்லியல் கழகம் ஈடுபட்டது. இந்திரபாலாவின் எபிக்கிராபியா தமிழிகா (Epigraphia Tamilica - 1971), யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் (1972), ஆ. வேலுப்பிள்ளையின் பாண்டியர் கல்வெட்டுகள் (Pandya Inscriptions - 1973), ஜேம்ஸ் தேவதாசன் ரத்தினத்தின் இலங்கைத் தொல்பொருளியல் வரலாற்றின் சில அம்சங்கள் (Some Aspects of the History of Archaeology in Sri Lanka - 1974) முதலான நூல்கள் அக்கழகத்தினால் வெளியிடப்பட்டவையாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் கல்வி கற்று, அத்துறையிலே விரிவுரையாளராக, பேராசிரியராகப் பணியாற்றிய ஆ.வேலுப்பிள்ளை கல்வெட்டியலில் மிகுந்த ஆர்வம் செலுத்தியுள்ளார். இலங்கைச் சாசனவியலில் "இதுவரை கண்டுபிடிக்கப்படாத சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும், கண்டுபிடிக்கப்பட்டும் இதுவரை நன்கு பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படாத சாசனங்கள் நன்கு பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும், முன்னோர் பதிப்பித்த சாசனங்களின் வாசிப்புகள் - விளக்கங்களிலே பிழைகள் இடம்பெற்றிருக்கும் வாய்ப்புள்ளதால் அவை திரும்பவும் ஆராயப்பட வேண்டும்" (2011: 244) எனும் மூவகைப் பணிகள் உள்ளனவாகக் குறிப்பிடும் வேலுப்பிள்ளை, அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் வழிகாட்டுதலின்கீழ் மைசூரில் உள்ள இந்திய அரசாங்கக் கல்வெட்டியலாளர் அலுவலகத்தில் ஓராண்டு காலக் கல்வெட்டுச் சிறப்புப் பயிற்சி (1967 - 1968) பெற்ற வேலுப்பிள்ளை, இலங்கைத் தொல்லியல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமிழ்க் கல்வெட்டுகளைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதன் பயனாக, "இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள்" (Ceylon Tamil Inscriptions) என இரண்டு தொகுதிகளை அவர் ஆங்கிலத்தில் வெளியிட்டார் (1971 ரூ 1972). முதலாம் தொகுதியில் 17 கட்டுரைகளும் இரண்டாம் தொகுதியில் 14 கட்டுரைகளும் அடங்கியுள்ளன. ஆசிரியரால் புதிதாக வாசிக்கப்பட்ட கல்வெட்டுகளின் வாசகங்களும் பிறரால் வாசிக்கப்பட்ட கல்வெட்டுகளின் திருத்திய வாசகங்களும் நூலில் இடம்பெற்றுள்ளன. கல்வெட்டுகளின் மைப்படிப் பிரதிகளும் நூலில் இணைக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளை ஆராய்வதற்கான மூலச் சான்றுகளுள் ஒன்றாக இந்நூல்கள் இன்றுவரை விளங்கிவருகின்றன.

வேலுப்பிள்ளையின் "சாசனமும் தமிழும்" (1971), "தமிழ் கற்கைகளுக்கான கல்வெட்டியல் சான்றுகள்" (Epigraphical Evidences for Tamil Studies - 1980) முதலான நூல்களிலும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கைக் கல்வெட்டுகள் தொகுதி ஆறில் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய இவரின் கட்டுரைகள் பல இடம்பெற்றுள்ளன. திராவிடப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில், "சாசனத் தமிழில் பேச்சுவழக்கு"

(Study of the Dialects in Inscriptional Tamil -1976) பற்றிச் சிறந்ததொரு ஆய்வை நிகழ்த்தியுள்ளார். தமிழ் வரலாற்றிலக்கணம் (1966) குறித்த முன்னோடி நூலினை வெளியிட்ட சிறப்பும் இவருக்குண்டு. அந்நூலில் காலந்தோறும் தமிழ் இலக்கணக் கூறுகளில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களைக் கண்டறிவதற்குச் சாசனங்களையும் முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ளார்.

கல்வெட்டுகளின் மொழி அமைப்பினை ஆராய்வதிலும் கல்வெட்டுகளில் இடம்பெறும் பண்பாட்டுச் செய்திகளை விளக்கியுரைப்பதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ள வேலுப்பிள்ளை, இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம்பெறும் சமய வரலாறு, மொழி வரலாறு முதலானவற்றை விரிந்த தளத்தில் உரையாடியுள்ளதுடன் அவற்றின் பின்னணியில் தமிழரின் தொன்மையையும் தொடர்ச்சியையும் ஆராய்ந்துள்ளார். உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியரான பீட்டர் சார்ல்க்குடன் இணைந்து இவர் மேற்கொண்ட தமிழ்ப் பௌத்த ஆய்வுகள் மிகுந்த கவனத்துக்குரியனவாக விளங்குகின்றன. இலங்கையில் தமிழ்ப் பௌத்த வரலாற்றைக் கல்வெட்டு, இலக்கியம், ஏனைய தொல்லியல் சான்றுகள் முதலானவற்றின் துணையுடன் அவர் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் கல்வி கற்று, அத்துறையில் விரிவுரையாளராக, பேராசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய சி.பத்மநாதன், இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் குறித்து அதிகமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அவரின் ஆய்வுகளுள் பெரும்பாலானவை "இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்" (2006), "ஈழத்து இலக்கியமும் வரலாறும்" (2004) என்ற அவரது நூல்களிலும் "இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் தொகுதி II" (2013) என அவர் பதிப்பித்த நூலிலும் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் அவர் எழுதிய கட்டுரைகளுள் பெரும்பாலானவை "இலங்கையில் தமிழ்ச் சாசனங்கள்" (Tamil Inscriptions in Sri Lanka - 2019) என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் என்ற நூலில் 13ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரிய சாசனங்கள் குறித்தும் இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் தொகுதி II என்ற நூலில் 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரான காலப்பகுதிக்குரிய சாசனங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் தொகுதி II இல் பத்மநாதனுடைய கட்டுரைகளுடன் செ.கிருஷ்ணராஜா, க.இரகுபரன், சி. செல்வரஞ்சிதம், சி.சுதாகரன் முதலானவர்களின் கட்டுரைகள் அடங்கியுள்ளன. கல்வெட்டுகளின் வாசகம், முன்னைய ஆய்வாளர்களின் வாசகங்கள், மைப்படிப்பிரதி, கல்வெட்டுகள் குறித்த விரிவான விளக்கங்கள் என்பன அடங்கியவையாகப் பத்மநாதனின் தொகுப்புகள் அமைந்துள்ளன.

இலங்கைத் தமிழ்க் கல்வெட்டு ஆய்வு வரலாற்றைச் சுருக்கமாக எழுதும் முயற்சியையும் பத்மநாதன் மேற்கொண்டுள்ளார். அவரின் "இலங்கையில் இந்து கலாசாரம்" (2000) என்ற நூலில் இலங்கையில் இந்துசமய வளர்ச்சியினை அறிந்துகொள்வதற்கான ஆவணங்களுள் ஒன்றாகக் கல்வெட்டுகளும் கொள்ளப்பட்டுள்ளன. அவர் பதிப்பித்த "இலங்கையில் இந்துக்கோயில்கள்"

(*Hindu Temples of Sri Lanka* - 2006) என்ற நூலில் இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலயங்கள் பற்றிய விளக்கங்களின்போது அந்தந்த ஆலயங்களில் உள்ள கல்வெட்டுகள் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகள் குறித்து, "கொழும்பு அருங்காட்சியகத்தின் தமிழ்க் கல்வெட்டுகள்" (*Tamil Inscriptions in the Colombo National Museum* - 2005) என்ற தனியான நூலையும் வெளியிட்டுள்ளார். தென்னிந்தியாவினதும் இலங்கையினதும் பௌத்த நிலையங்களுக்கு இடையிலான தொடர்பினை ஆராயும் "*Buddhism in Sri Lanka and South India: Interactions among monastic centers*" (2006) என்ற சிறு வெளியீட்டிலும் கல்வெட்டுகளை முதன்மைச் சான்றாகக் கொண்டுள்ளார். அவ்வாறே பீட்டர் சார்ல்க் தலைமையில் பதிப்பிக்கப்பட்ட காலனியக் காலத்துக்கு முன்னைய தமிழகம் மற்றும் ஈழத்தில் தமிழர்களிடையே பௌத்தம் (*Buddhism among Tamils in Pre-colonial Tamilakam and Ilam* - 2002) என்ற நூலில் இலங்கையில் தமிழர்களிடையே பௌத்தம் குறித்துத் தமிழ்ச் சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு பத்மநாதன் எழுதிய கட்டுரைகள் பல இடம்பெற்றுள்ளன.

தமிழகக் கல்வெட்டாய்வாளர்களின் உதவியுடன் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளின் வாசகங்களை இயன்றவரை திருத்தமாக வெளியிடும் பணியைப் பத்மநாதன் மேற்கொண்டுள்ளார். தனக்கு முற்பட்ட காலத்தில் நிகழ்த்தப்பட்ட வாசிப்புகளில் இடம்பெறும் குறைபாடுகளை நீங்கி, சரியான பாடத்தைக் காண முயற்சித்துள்ளார். எடுத்துக்காட்டாக, வெல்கம் விகாரைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய வாசிப்பினைக் கூறலாம். அவ்விகாரைக் கல்வெட்டுகள் பற்றிய ஆ. வேலுப்பிள்ளை, கா.இந்திரபாலா ஆகியோரின் கல்வெட்டு வாசகங்களில் பல திருத்தங்களைப் பத்மநாதன் மேற்கொண்டுள்ளார். உதாரணமாக, இந்திரபாலா "காயாங்குசரன்" என்றும் ஆ. வேலுப்பிள்ளை "கயவாகு கோடி" என்றும் வாசித்ததை, பத்மநாதன் "காயாங்குடையான்" என்றும் ஆ. வேலுப்பிள்ளையும் கா.இந்திரபாலாவும் "புதுக்குடியான்" என வாசித்ததை, "புதுக்குடி உடையான்" என்றும் வாசித்துள்ளதைக் குறிப்பிடலாம். இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளை வரலாற்றுப் பின்னணியிலும் செய்திகளின் அடிப்படையிலும் வரன்முறையான ஒழுங்கமைப்புக்குட்படுத்திய சிறப்பு பத்மநாதன் அவர்களையே சாரும். எ.சுப்பராயலு, நொபொரு கராஷிமா ஆகியோருடன் இணைந்து இலங்கையின் வணிகக் கல்வெட்டுகள் தொடர்பில் அவர் மேற்கொண்ட ஆய்வுகள், வணிகக் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வில் பெருந்திருப்பத்தை ஏற்படுத்தின (2002). அத்துடன் இலங்கையின் வணிகக் கல்வெட்டுகளின் வாசகங்களை இயன்றவரை திருத்தமாக வெளியிட அக்கூட்டு முயற்சி பங்களித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய செ.குணசிங்கம், இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் குறித்துக் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். "பதின்மூன்றாம் நூற்றாண்டுப் பாண்டி நாட்டின் நிர்வாகம்" என்ற தலைப்பில் முதுமாணி பட்ட ஆய்வையும்

"சோழ இராச்சியத்தின் இந்துக் கோயில்களின் அமைப்பும் செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் கலாநிதிப்பட்ட ஆய்வையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட அவர், கல்வெட்டியலில் தேர்ந்த புலமைமிக்கவராக விளங்கியுள்ளார். திருகோணமலை மாவட்டத்தின் புதிய கல்வெட்டுகள் பல அவரின் முயற்சியாலேயே வெளிச்சத்துக்கு வந்தன. அவருடைய "திருகோணமலையில் இரு சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டுகள்" (1972), "திருகோணமலை மானாங்கேணி வெள்ளை வில்வத்தடி கோணநாயகர் கோவிலும் அரிய தமிழ்க் கல்வெட்டும்" (1972), "திருமலையில் ராஜராஜனின் காலத்தால் முந்திய கல்வெட்டுகள்" (1972), "தமிழ்நாடும் ஈழமும் : நிலாவெளிப் பிள்ளையார் கோவில் கல்வெட்டு" (1975), "இலங்கையில் தமிழ்ச் சாசனவியல் ஆராய்ச்சியின் வளர்ச்சி" (1974), "இலங்கைத் தமிழ் சாசனவியல் ஆராய்ச்சி" (1976), "பொலன்னறுவை வானவன்மாதேவி ஈஸ்வரக் கோயில் அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டு" (1979) முதலான கட்டுரைகளும் ஆங்கிலத்தில் திருகோணமலை கல்வெட்டுகள் பற்றி எழுதிய "Two Inscriptions of Cola Ilankesvara deva" (1974), "Three Cola Inscriptions from Trincomalee (1979), 'A Tamil Inscription from Mayilawewa (Mayilankulam) Trincomalee District" (1980) ஆகிய தொடர்களும் திருகோணமலையில் தமிழர் குறித்து எழுதிய The Tamils and Trincomalee (1979) என்ற சிறுநூலும், ஸ்ரீலங்கா ஜெர்னல் ஒப் த ஹியுமணிட்டிஸ் இதழில் நிலாவெளி கல்வெட்டு (1975) தொடர்பில் எழுதிய கட்டுரையும், கோணேஸ்வரம் (1973) என்ற நூலும் மிகுந்த கவனத்தைக் கோருவனவாக அமைந்துள்ளன. கல்வெட்டு வாசகங்களை இயன்றவரை திருத்தமாக வாசிப்பதிலும் அவற்றைச் சமூக வரலாற்றுப் பின்புலத்தில் விரிவாக ஆராய்வதிலும் அவர் அதிக அக்கறை காட்டியுள்ளார்.

தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற வ. மகேஸ்வரன் தன்னுடைய கலாநிதிப் பட்ட ஆய்வினைக் கல்வெட்டுகளை அடிப்படையாகக்கொண்டு "சோழர்காலக் கோயிலும் சமூகமும்" தொடர்பில் மேற்கொண்டதுடன் உதிரியாகத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள் "தமிழ்நாட்டுக்கு வெளியே சோழர் கோயில்கள்" (2002), "வேதாரணியம் கோயிலில் யாழ்ப்பாணத்தார் கல்வெட்டுகள்" (2002), "பொலநறுவையில் சோழர் கோயில்கள்" (2006), வேதாரணியம் - யாழ்ப்பாணம் பண்பாட்டு உறவுகள் (2016) ஆகிய கட்டுரைகள் சுட்டிக்காட்டத்தக்கன.

தமிழ்த்துறையில் இந்துநாகரிகப் பேராசிரியராகப் பணியாற்றிய இரா. வை.கனகரத்தினம் இலங்கையில் இந்துசமயம், இந்துக்கட்டடக்கலை முதலானவை தொடர்பான ஆய்வுகளில் கல்வெட்டுகளையும் சான்றாகப் பயன்படுத்தியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பதவி வகித்த சு.வித்தியானந்தன் சிங்களப் பண்பாட்டில் தமிழ்ச் செல்வாக்கு (Tamil Influnce on Sinhalese Culture), 1968ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழாய்வுகள் (Tamil Studies in English in Ceylon - Up to 1968) ஆகிய ஆங்கிலக் கட்டுரைகளில் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டாய்வுகளையும்

சான்றாகப் பயன்படுத்தியுள்ளார். இலங்கையில் ஆங்கிலத்தில் இடம்பெற்றுள்ள தமிழாய்வுகள் பற்றிய கட்டுரையில் "இலங்கைத் தமிழரின் வரலாறு மற்றும் பண்பாடு" என்ற உபதலைப்பின்கீழ் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற க.அருணாசலம் "இலங்கைத் தமிழியல் ஆய்வு முயற்சிகள்" (1997) என்ற நூலில் "சாசனவியலும் தொல்பொருளியலும் வரலாற்றியலும்" என்ற தனி இயலை வகுத்து, அவை தொடர்பான ஆய்வுகளைத் தொகுத்துரைத்துள்ளார். அதில் இலங்கைச் சாசனவியல் ஆராய்ச்சி வரலாற்றை, தொடக்ககாலம் - ஆரம்ப முயற்சிகள் (ஏறத்தாழ 1960கள் வரை), தமிழ் அறிஞர்களின் தீவிர முயற்சிகள் (ஏறத்தாழ 1960ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு வரை), சாசனவியல் ஆய்வின் வளர்ச்சி வேகம் குறைதல் (1983ஆம் ஆண்டு முதல் இற்றை வரை - 1997) என மூவகைப்படுத்தி விளக்கியுள்ளதுடன் பெரும்பாலான ஆய்வுகளைப் பட்டியல்படுத்தித் தந்துள்ளார்.

இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய தனியான ஆய்வுகள் மட்டுமன்றி பிராமிக் கல்வெட்டுகள், சிங்களக் கல்வெட்டுகள், நாணயங்கள் முதலானவற்றில் கிடைக்கின்ற தமிழருடன் தொடர்புடைய செய்திகளைப் பேராதனைக் கல்வியலாளர்கள் வெளிக்கொணர்ந்துள்ளனர். இலங்கை வரலாறு, பண்பாடு குறித்த ஆய்வுகளில் தமிழ்க் கல்வெட்டுகளையும் சான்றாகப் பயன்படுத்தியுள்ளனர். மேற்படி ஆய்வுகள் தமிழ்க் கல்வெட்டுகளை விரிந்த தளத்தில் உரையாடுவதற்கான வெளியினைக் கட்டமைத்துள்ளன. அவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்டவர்களுள் சு.யு.டு.ர். குணவர்தன, ஸிரிமா கிரிபமுன, சுதர்சன செனவிரத்ன, பியதிஸ்ஸ சேனாநாயக்க முதலானோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். குணவர்தன வரலாற்றைக் கட்டமைப்பவர்கள் எவ்வாறு தத்தம் இனத்துவச் சார்புக்கு ஏற்ப, வரலாற்றைத் திரிபுபடுத்துகின்றனர் என்பதைச் சிங்கள மற்றும் தமிழ் ஆய்வாளர்களின் சாசனங்கள் பற்றிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்தியுள்ளார்.

வரலாற்றுத் துறையில் பணியாற்றிய ஸிரிமா கிரிபமுன மகாவம்சம், தீபவம்சம் முதலான நூல்களின் வரலாற்று எழுதியல், பண்டைய மற்றும் இடைக்கால இலங்கையில் தமிழர், இலங்கையில் தமிழர் இன அடையாளம் முதலானவை தொடர்பான ஆய்வுகளில் தமிழருடன் தொடர்புடைய வரலாற்றுச் செய்திகள், கல்வெட்டுச் செய்திகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டுள்ளார். இன, மதச் சார்புகளற்ற வகையில் வரலாற்றை அணுகியுள்ள அவர், இலங்கை வரலாற்றின் பன்முகத் தன்மையையும் தீபவம்சம் முதலான நூல்கள் அப்பன்முகத் தன்மையை மறுத்து தேரவாத பௌத்த வரலாற்றை முன்னிலைப்படுத்தியுள்ளமையும் ஆதாரங்களுடன் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கையில் இனமுரண்பாடு உக்கிரம்பெற்று, வரலாறு மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் இனத்துவச் சார்புநிலைகளின் அடிப்படையில் வாசிக்கப்பட்டு வந்த காலத்தில் - வரலாற்று எழுதுகைகளில் வக்கிரங்கள் நிறைந்திருந்த காலத்தில் - இனத்துவச் சார்புகளற்ற வகையில் வரலாற்று எழுதுகைகளை முன்னெடுத்து வந்தவர்களுள் சுதர்சன செனவிரத்ன அவர்களும் முதன்மையான ஒருவராவார்.

பௌத்த மதம், பிராகிருத மொழி, வடஇந்திய பிராமி முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு வடஇந்திய தொடர்புகளை மட்டும் மையப்படுத்தி இலங்கையின் வரலாற்றைக் கட்டமைத்தல் பெரும்போக்காக இருந்த சூழலில் அதிலும் இலங்கையில் தமிழரின் வரலாற்றுத் தொன்மை நிராகரிக்கப்பட்டுவந்த காலத்தில் இலங்கையின் சமூக உருவாக்கத்திலும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் தென்னிந்திய தொடர்பையும் தமிழரின் பங்களிப்பையும் ஆதாரங்களின் அடிப்படையில் அவர் வெளிப்படுத்தியுள்ளார். பரதவர், பருமக, பிராமி அல்லாத குறியீடுகள், இலங்கையின் தொடக்க இரும்புக் காலம் முதலானவை பற்றிய அவருடைய ஆய்வுகள் அவற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன.

பிராமிக் கல்வெட்டுகளிலும் சிங்களக் கல்வெட்டுகளிலும் இடம்பெறும் தமிழர் தொடர்பான செய்திகளை வெளிக்கொணர்வதில் ஆர்வங்காட்டியுள்ள பியதிஸ்ஸ சேனாநாயக்க ஆ.வேலுப்பிள்ளை, சி.பத்மநாதன் முதலானோருக்குப் புதுமுத்தாவயில் உள்ள வீரசாசனத்தைப் படியெடுப்பதில் பலதடவை உதவி புரிந்துள்ளார். அத்துடன் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் தமிழ் மாணவர்களுக்கு நடத்திய கல்வெட்டியல் பயிலரங்கில் அவரும் வளவாளராகக் கலந்துகொண்டு பயிற்சியளித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வியலாளர்கள் மட்டுமன்றி அங்கு கற்று வெளியேறி, வேறு பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகப் பணியாற்றியவர்களும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அத்தகையோருள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற வி.சிவசாமி, சி.க.சிற்றம்பலம் ஆகியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்களாவர்.

சமஸ்கிருதம் மற்றும் பிராகிருத மொழிக் கல்வெட்டுகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த வி.சிவசாமி, “இந்தியாவில் கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரையான சமஸ்கிருதக் கல்வெட்டுகளின் பிரசஸ்திகள்” பற்றி இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இலங்கையின் ஒரு நூற்றாண்டுகாலக் கல்வெட்டு ஆய்வு வரலாற்றைச் சிறப்பாக ஆவணப்படுத்தியுள்ளதுடன் இலங்கையின் தொல்லியல், நாணயவியல், வரலாற்றியல் முதலானவை குறித்துக் குறிப்பிடத்தக்க கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். சி.க. சிற்றம்பலம் இலங்கையில் இந்து சமயம், யாழ்ப்பாண வரலாறு, பண்டைய இலங்கையில் தமிழர் முதலியன தொடர்பில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அந்த ஆய்வுகளுக்குக் கல்வெட்டுகளும் முதன்மை சான்றாகக் கொள்ளப்பட்டுள்ளன. “யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு” (1993), “ஈழத்தமிழர் வரலாறு” (1994), “ஈழத்து இந்துசமய வரலாறு” (1996) முதலான அவரின் நூல்கள் அவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

பேராதனையில் கல்வி கற்று, களனிப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய அமரதாச லியனகமகேவும் தன்னுடைய ஆய்வுகளில் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளையும் சான்றாகப் பயன்படுத்தியுள்ளார். அவரின் நவீன

காலத்துக்கு முந்திய இலங்கையின் சமூகம் - அரசு மற்றும் சமயம் (*Society, State and Religion in Premodern Sri Lanka - 2008*) என்ற நூலிலுள்ள கட்டுரைகள் அவ்வகையில் குறிப்பிடத்தக்கன. அவ்வாறே பேராதனையில் கல்வி கற்று ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய று.ஆ.மு. விஜேதுங்க இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளையும் தன்னுடைய ஆய்வுகளில் சான்றாகப் பயன்படுத்தியுள்ளார். இலங்கையும் சோழரும் (*Sri Lanka and the Cholas*) என்ற தலைப்பில் இலண்டன் பல்கலைக்கழகத்திற்கு அவர் சமர்ப்பித்த கலாநிதிப் பட்ட ஆய்வேடு, இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளையும் முதன்மை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஆய்வேடு இலங்கையும் சோழரும் என்ற தலைப்பில் 2003ஆம் ஆண்டு சர்வோதய விஸ்வ லேக்கா பதிப்பகத்தினால் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இலங்கைக்கும் சோழருக்கும் இடையிலான தொடர்பை முதலாம் இராஜராஜன் வரையான சோழ ஏகாதிபத்தியத்திற்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான தொடர்பு, சோழரின் ரஜரட்ட வெற்றி, இலங்கையில் சோழராட்சியின் வீழ்ச்சியும் முடிவும் என மூன்று கட்டங்களில் விரிவாக ஆராய்ந்துள்ள விஜேதுங்க, இலங்கையில் சோழர் நிர்வாகம், இலங்கையில் சோழர் ஆட்சிக்காலத்து சமூக, சமயநிலை ஆகியவற்றையும் தனியான இயல்களில் விளக்கியுள்ளார். அவரின் இலங்கையில் சோழர் நிர்வாகம் பற்றிய கட்டுரையொன்று யுனிவர்சிட்டி ஒப் சிலோன் ரிவிவில் "பதினொன்றாம் நூற்றாண்டில் இலங்கையில் சோழர் நிர்வாகம்" (1965) என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் கல்வெட்டியலும் வரிவடிவியலும் என்ற பாடம் நீண்ட காலமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் க.கணபதிப்பிள்ளை அதனைக் கற்பித்துள்ளார். அவருக்குப் பின்னர் ஆ.வேலுப்பிள்ளை அப்பாடத்தைக் கற்பித்து வந்துள்ளார். பின்னர் வ.மகேஸ்வரன் மிகுந்த ஈடுபாட்டுடன் அதனைக் கற்பித்து வந்தார். இக்கட்டுரையாளர் (எம். எம்.ஜெயசீலன்) வ.மகேஸ்வரன் அவர்களுடன் இணைந்து இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளைக் கற்பித்து வந்ததுடன் தன்னுடைய கலாநிதிப் பட்ட ஆய்வினை, "இலங்கைக் கோயில்களில் தமிழ்க் கல்வெட்டுகள் : ஒரு சமூக வரலாற்று ஆய்வு" (2024) எனும் தலைப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) மேற்கொண்டுள்ளார்.

தமிழ்த்துறையில் இளங்கலை பயின்ற மாணவர்களுள் சிலர் தம் இறுதி ஆண்டு ஆய்வேட்டினைக் கல்வெட்டியல் தொடர்பாக நிகழ்த்தியுள்ளனர். துரதிஸ்டமாக இதுவரை அத்தகைய ஆய்வேடுகள் எவையும் நூலுருப் பெறவில்லை. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தமிழக மற்றும் இலங்கைக் கல்வெட்டாய்வாளர்களைக் கொண்டு 2009 முதல் ஆண்டுதோறும் நிகழ்த்திவந்த குறுகியக் காலக் கல்வெட்டுப் பயிலரங்கில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்கள் தொடர்ந்தும் பங்குபற்றிவருகின்றனர். அப்பயிலரங்கில் பங்குபற்றிய மாணவர்கள் சிலர் தம் இறுதியாண்டு ஆய்வினைக் கல்வெட்டியல் தொடர்பில் மேற்கொண்டுள்ளனர். அண்மையில் தமிழ்த்துறையானது இந்து சமய

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிநல்கையுடன் தமிழ்த்துறை மற்றும் வரலாற்றுத்துறை மாணவர்களுக்கான சாசனவியல் பயிலரங்கினைத் துறைசார் வல்லுனர்களைப் பேராதனைக்கு அழைத்து மேற்கொண்டது (27-30 நவம்பர், 2022).

மிக நீண்ட காலமாக இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆய்விலும் தமிழ்க் கல்வெட்டியலை மாணவர்களுக்குக் கற்பிப்பதிலும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வந்துள்ளது. அம்மரபின் தொடர்ச்சி இன்றும் வெவ்வேறு மட்டங்களில் பேணப்பட்டு வருகிறது. புதிய கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தல், கல்வெட்டுகளின் வாசகங்களை மைப்படிப் பிரதியுடன் வெளியிடல், கல்வெட்டு வாசகங்களை விளக்கக் குறிப்புகளுடன் வெளியிடல், தமிழ்க் கல்வெட்டுகளைத் தொகுப்பாக வெளியிடுதல், கல்வெட்டுகள் பற்றிய விரிவான ஆய்வுக் குறிப்புகளை எழுதுதல், இலங்கையின் சமய வரலாறு, கோயில் வரலாறு, இனக்குழும வரலாறு, வணிகத் தொடர்புகள் ஆகியவற்றைக் கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதுதல் முதலான வகையிலான ஆய்வுகளைப் பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வியலாளர்கள் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் முன்னெடுத்த ஆய்வுகளின்வழியேதான் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டியல் என்ற புலம் ஆழம்பெற்றது.

இலங்கையின் வரலாற்று நூல்களாகக் கொள்ளப்படுகின்ற தீபவம்சம், மகாவம்சம், முதலானவை இலங்கையின் பௌத்த வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டுள்ளன. அதனால் அந்த வட்டத்துக்கு வெளியேயான வரலாறுகள் குறித்து அவை அக்கறைகொள்ளவில்லை. அந்நூல்களின் இடைவெளியை நிரப்பக்கூடிய மூலச் சான்றுகளாகக் கல்வெட்டுகள், தொல்லியல் எச்சங்கள் போன்றன விளங்குகின்றன. தமிழ்க் கல்வெட்டுகளைக் கொண்டு அந்த இடைவெளியின் ஒரு பகுதியை நிரப்பி, இலங்கை வரலாற்றை விரிவுபடுத்தும் பணியைப் பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வியலாளர்கள் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட இன முரண்பாட்டுச் சூழல் இலங்கையில் தமிழரின் தொன்மையும் தொடர்ச்சியையும் நிறுவுவதற்கான தேவையையும் இனங்களுக்கு இடையே நிலவிய ஐக்கியத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் தோற்றுவித்தன. அவற்றைத் தமிழ்க் கல்வெட்டாய்வுகள் மூலம் பேராதனைப் புலமைச் சமூகம் நிவர்த்தி செய்ய முயன்றுள்ளது. இலங்கை வரலாற்றைப் பாளி மற்றும் சிங்களமொழிசார் ஆவணங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுவந்த மரபுசார் முறைமையைக் கைவிட்டுவிட்டு, தமிழ் ஆவணங்களையும் கருத்தில் கொண்டு இலங்கை வரலாற்றைக் கட்டமைக்க வேண்டும் என்ற மாற்றம், தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய மேற்படி ஆய்வுகளின் வளர்ச்சியினால் ஏற்பட்டதெனலாம்.

இலங்கையின் தாய்ப் பல்கலைக்கழகமாக விளங்கும் பேராதனை, அந்த இயல்புக்கு ஏற்ப பெரும்பாலான கற்கைகளின் தொடக்க மூலமாக விளங்கியுள்ளதைப் போல தமிழ்க் கல்வெட்டியல் துறைக்கும் ஊற்றுக்கண்ணாகத் தொழிற்பட்டுள்ளது.

அங்கிருந்து மேற்கிளம்பிய புலமையாளர்களே இலங்கைத் தமிழ்க் கல்வெட்டியல் எனும் துறைக்கு வளமான அடித்தளத்தினையிட்டு வளர்த்தெடுத்துள்ளனர். அவ்வளர்ச்சி இலங்கையில் தமிழர்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் மட்டுமன்றி ஒட்டுமொத்த இலங்கை வரலாற்றையும் பண்பாட்டையும் வளப்படுத்தியுள்ளதுடன் இந்திய உபகண்டத்தின் வரலாற்று எழுதுகைக்கும் பங்களிப்பு நல்கியுள்ளது.

**உசாத்துணை நூற்பட்டியல்**

*Gunasingam, S., (1974) Two Inscriptions of Cola Ilankesvara deva, Trincomalee Inscriptions, Series No.1, Peradeniya.*

*……………….., (1979) Three Cola Inscriptions from Trincomalee, Trincomalee Inscriptions, Series No.2, Peradeniya.*

*………………., (1980) A Tamil Inscription from Mayilawewa (Mayilankulam) Trincomalee District, Trincomalee Inscriptions, Series No.3, Peradeniya.*

*Indrapala, K., (1971) Epigraphia Tamilica, Volume I part I, A journal of Tamil Epigraphy, Jaffna: Archeological Society.*

*……………, (1963) "The Nainativu Tamil Inscription of Parakramabahu I", UCR, Vol.XXI - 1.*

*Kanapathipillai, K., (1960) "A Tamil Inscription from Moragahawela", UCR, Vol.XVIII - 1-2.*

*…………………, (1960) "A Tamil Inscription from Panduvasnuwara", UCR, Vol.XVIII - 3-4.*

*………………….., (1962) "Mankanai Inscription of Gajabhahu II, UCR, XX - 1.*

*Paranavitana, S., (1960) "Lankatilaka Inscriptions", UCR, Vol.XVIII - 1&2.*

*……………., (1962) "Notes on the Tamil Inscription from Panduvasnuvara" UCR, XX, 01.*

*Pathmanathan, S., (2005) Tamil Inscriptions in the Colombo National Museum, Sri Lanka: Department of National Museums.*

*…………………, (2019) Tamil Inscriptions in Sri Lanka, Colombo: Department of Hindu Religious and Cultural Affairs.*

*Veluppillai, A., (1971) Ceylon Tamil Inscriptions Part I, Peradeniya.*

*………………, (1972) Ceylon Tamil Inscriptions part II, Peradeniya.*

சிவத்தம்பி, கா., (1997) கணபதிப்பிள்ளை - அவரது புலமைப் பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு, கொழும்பு தமிழ்ச் சங்கம்.

பத்மநாதன், சி., (2006) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

""", (2013) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - II, கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

வேலுப்பிள்ளை, ஆ., (2011) சாசனமும் தமிழும், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

# கட்டுரையாளர் விபரம்


**கலாநிதி நா. வாமன்**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**திரவியநாதன் திலீபன்**
விரிவுரையாளர், மெய்யியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**கலாநிதி மைதிலி விசாகரூபன்**
சிரேஷ்ட உதவி நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**திரு.சி.ரமணராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**கே. சஜந்தன்**
உதவி நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**வை. கேசவன்**
உதவி நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பி. பூலோகநாதன்**
உதவி நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**கலாநிதி எம். எம். ஜெயசீலன்**
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்



**பல்கலை** *தொகுதி 12, இதழ் 2 - 2024 டிசம்பர்*
கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

Palkalai 12 ; 2 - 2024 December
Refereed Journal in Tamil,
Faculty Arts, University of Peradeniya.

Printed by Kumaran Press (Pvt) Ltd. 0112 364550